விலை: 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

டிஸ் அன்ரனா
மற்றும் கேபிள் TV
உதிரிப்பாகங்கள்
நியாயமான விலையில்
கிடைக்கும்
dishtv
(3940)
Satstech Engineers
28, Stanley Road,
Jaffna. 021 222 8812

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 வைகாசி 07 திங்கட்கிழமை (21.05.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 153

## உலகில் மிகவும் ஆபத்தான படை புலிகளிடம் இருந்தது

### ஒப்புக்கொண்டார் மகிந்த ராஜபக்ஷ



(கொழும்பு)

உலகில் மிகவும் ஆபத்தான கடற்படை மற்றும் விமானப் படைகளைக் கொண்ட அமைப்பாக விடுதலைப்புலிகள் இருந்தனர் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யுத்தம் முடிவடைந்து 23☛

## மண்டைதீவில் கடற்படையினருக்கு விவசாய நிலங்கள் சுவீகரிப்பு

### அரசியல்வாதிகள் பாராமுகம்; மக்கள் அந்தரிப்பு

(மண்டைதீவு)

இலங்கை கடற்படையின் வெலுசுமன பிரிவினருக்கென மண்டைதீவில் விவசாய நிலங்களைச் சுவீகரிப்புச் செய்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் மண்டைதீவு மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

மண்டைதீவு கிழக்கு பகுதியில் உள்ள விவசாய நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்துள்ள கடற்படையினர் தற்போது அந்த நிலங்களைச் சுவீகரிப்புச் செய்வதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

இதற்கான அறிவிப்புக்களை காணி சுவீகரிப்பு அதிகாரி வேலணை பிரதேச செயலகம் ஊடாக விடுத்துள்ளார். இவ்வறிவித்தலின் பிரகாரம் 29 விவசாயிகளுக்கு சொந்தமான 18 ஏக்கர் காணிகள் சுவீகரிப்புச் செய்யப்படவுள்ளன. 23☛

## புதிய அரசியலமைப்பு பணி 24-ம் திகதி மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பை தயாரிக்கும் பணிகளை மீண்டும் எதிர்வரும் 24-ம் திகதி பாராளுமன்றத்தில் ஆரம்பிக்கவிருப்பதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. 03☛

## கொடிகாமம் பகுதியில் நான்கு பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். கொடிகாமம் பிரதேசத்தில் நான்கு பேர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொடிகாமம் பிரதேச 23☛

## கடுவல நகரில் முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் தீக்கிரை


(கொழும்பு)

மல்வான, கடுவல நகரில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான இரண்டு வர்த்தக நிலையங்கள் நேற்று முன்தினம் இரவு தீக்கிரையாக்கப்பட்டுள்ளன என்று பொலி 23☛

# சதிசெய்து கொன்றார்கள்; நினைவேந்தாமல் எப்படி இருக்க முடியும்?

### முதலமைச்சர் விக்னேஸ்வரன் கேள்வி

(யாழ்ப்பாணம்) எமது மக்கள் தற்செயலாகச் சாகவில்லை. கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார்கள். ஒரு இடத்துக்குக் கொண்டுவரப்பட்டு, சரணடைந்தால் விடுவிப்போம் என்று பல பசப்பு வார்த்தைகளைக் கூறி எம் மக்களை சதி செய்து கொன்ற நிகழ்வை நாம் நினைவேந்தாமல் எப்படி இருப்பது. இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன். (23-ம் பக்கம் பார்க்க...)



## புலிகளின் சீருடைக்கு அஞ்சலி! பொலிஸார் தீவிர விசாரணை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் சீருடைக்கு முள்ளிவாய்க்காலில் அஞ்சலி செலுத்தப்பட்டதா என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அடையாளம் தெரியாத நபர்களால் மே 18ஆம் திகதி மாலை முள்ளிவாய்க்கால் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின், சீருடைத்



தொப்பிக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது என்று கூறப்படுகின்றது. 23☛

## தென்பகுதியில் அடைமழை தயார் நிலையில் இராணுவம்

### மின்னல் தாக்கி மூவர் பலி

(கொழும்பு)

தற்போது நாட்டில் தொடர்ச்சியாக பெய்யும் மழை காரணமாக அனர்த்தங்கள் ஏற்படும் பகுதிகளுக்கு சென்று உதவிகளை வழங்குவதற்கு தயாராக உள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

நாட்டில் அதிக மழை வீழ்ச்சி பெறப்பட்ட பகுதிகளை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிடுகின்ற அறிக்கையின் வாயிலாக அறிந்து கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் அனர்த்தங் 23☛

## ஓகஸ்ட் 6-ம் திகதி உ/த பரீட்சை ஆரம்பம்

(கொழும்பு)

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான நேர அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இம்முறை இந்தப் பரீட்சைக்கு 3 இலட்சத்து 50 ஆயிரம் பேர் தோற்றவுள்ளதுடன், பரீட்சை ஓகஸ்ட் மாதம் 6-ம் திகதி ஆரம்பமாகி செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி நிறைவடையும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். 24☛

## சவால்களுக்கு மத்தியிலும் பொருளாதாரம் சிறப்பாக முன்னெடுக்கப்படுகிறது - மங்கள

(கொழும்பு)

சவால்களுக்கு மத்தியில் கூட அன்றிலும் பார்க்க வலுவான முறையில் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் நிர்வாக ரீதியில் சிறப்பான முறையில் நாட்டை முன்னெடுப்பதற்கும் சமகால நல்லாட்சி அரசாங்கத்தினால் முடிந்துள்ளது என நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தனியார் முதலீட்டின் மூலம் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான செயல்முறை இடம்பெற்ற 1990ம் ஆண்டிலிருந்து நாட்டின் மொத்த உற்பத்தி 30 வீதமாக இருந்தது. நாட்டின் 24☛



## 20-வது திருத்த யோசனை அடுத்த வாரம் பாராளுமன்றுக்கு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்து செய்யும் 20 ஆவது அரசியலமைப்புத் திருத்த யோசனை, தனிநபர் பிரேரணையாக அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.


இதற்கான இறுதிக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) பாராளுமன்ற உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

யோசனைத் திட்டமானது அடுத்த வாரமளவில் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு கையளிக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

மக்களால் தெரிவு செய்யப்படும் நிறைவேற்றதிகார ஜனா 24☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



பிறப்பு 27 • 03 • 1927

இறப்பு 20 • 05 • 2018

## சூசைப்பிள்ளை மனுவேற்பிள்ளை

பலாலியை பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை-மனுவேற்பிள்ளை நேற்று (20-05-2018 ) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை-வெரோணிக்கா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பிலிப்பையா-விக்ரோறியா தம்பதியினரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற மேரி றோசலினின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஏனெஸ்ரினின் அன்புச் சகோதரனும் சந்தனா, பிலிப் ஜெயரட்ணம் (இத்தாலி), றெஜினா சகுந்தலா (உபதபாலதிபர், குருநகர்) அருட்பணி றெக்ஸ் சவுந்தரா (பங்குத்தந்தை-சாவகச்சேரி), அருட்சகோதரி ஜேன் சித்திரா (திருச்சிலுவைக் கன்னியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பெனடிக்ற் ஜெயராசா, நிர்மலா (இத்தாலி), பவுலினஸ்(தபால் திணைக்களம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும் மைக்கல் ராஜ் மரின் றொஷாந்தி, சுதர்சன் சசின் றிஷாந்தி, அன்ரனி யூலியன்ஸ், அன்ரனி ஜக்ஷன், லியோனஸ் டெஷான், செறின் சுயானந்தி, யூடித் றெக்ஷனா, ரூத் நிலோஷனா, அனற் பவுஸ்ரீனா, பிறின்சியா(இத்தாலி), ஜெறோமியா(இத்தாலி) ஆகியோரின் அன்பு பேரனும் அஸ்லி, அரோன் ஜெய்ஷன் ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (22.05.2018) செவ்வாய்க்கிழமை பி.ப 03.00 மணிக்கு சுண்டுக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் இரங்கற்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பலாலி சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்

அருட்பணி றெக்ஸ் சவுந்தரா -மகன்
(பங்குத்தந்தை - சாவகச்சேரி)

077 673 8054

(4147)

# கண்ணீர் அஞ்சலி



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்
முன்னாள் தலைவர் வரதராஜன்
(பொருளியல் ஆசிரியர்) அவர்களின் அன்பு
மனைவியும் தமிழ்த் தேசிய மக்கள்
முன்னணியின் யாழ் மாநகரசபை
உறுப்பினருமான பார்த்தீபன் அவர்களின்
அன்புத்தாயாருமாகிய
திருமதி வரதராஜன் சகுந்தலா
அவர்களின் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கல்களை
தெரிவித்துக் கொள்கின்றோம்.


தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்

(4148)

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி பொன்னம்பலம் (மகாலிங்கம்)

### (கார் உரிமையாளர்-சுன்னாகம் பஸ் நிலையம்)



சுதுமலையைப் பிறப்பிடமாகவும், ஏழாலை மேற்கு சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பொன்னம்பலம் (மகாலிங்கம்) நேற்று (20.05.2018) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், கஜேந்திரன் (கஜன்-விதுஜா கூல்பார், மல்லாகம்), துஷ்யந்தினி, துர்க்காதரன் (துர்க்கா-கடை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், டெசிந்தா, சிவதாஸ், சுபாஜினி ஆகியோரின் மாமனாரும், நிவேஜிகா, யதுரன், மதுரகன், டிவேநிகன், டனுஜன், டனுசாந், பொபிநாஸ், லேஜிகா, கேனுஜா, மிதுனுஜா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2018) திங்கட்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு இடம்பெற்று அவரின் பூதவுடல் ஏழாலை உசத்தியோடை இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம்:குடும்பத்தினர்

ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

கஜன்-0776180241
துர்க்கா-0779596774

(4150)

## நாடளாவிய ரீதியில் 12 பிராந்தியப் பணியகங்கள் நிறுவப்படும்

# காணாமல் போனோருக்கான பணியகம் அரசியல் அழுத்தங்களுக்கு அடிபணியாது

## சாலிய பீரிஸ் திட்டவட்டம்

(மாத்தறை)

கடமைகளை நிறைவேற்றும் போது, காணாமல் போனோருக்கான பணியகம் எந்தவொரு அரசியல் அழுத்தங்களுக்கும் அடிபணியாது என்று அந்தப் பணியகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார். இதேவேளை நாடளாவிய ரீதியில் 12 பிராந்திய பணியகங்களையும் தமது பணியகம் நிறுவவுள்ளதாகவும் தெரிவித்தார்.



காணாமல் போனோருக்கான பணியகம், காணாமல் போனவர்களின் உற வினர்களுடன் நேற்று முன்தினம் மாத்தறையில் கலந்துரையாடலை நடத்தியது. இதன் போது கருத்து வெளியிட்ட சாலிய பீரிஸ், "எந்த அரசியல் தலையீடுகளும் இல்லாமல், எமது பணிகளை நாங்கள் ஆற்றுவோம். 1970 ஆம் ஆண்டில் இருந்து நாட்டில் காணாமல் போனவர்கள் பற்றிய முறையான எந்தவொரு தரவுகளும் இல்லை. காணாமல்போனோருக்கான பணியகம் விரிவானதொரு பட்டியலைத் தயார் செய்யும். நாடெங்கும், 12 பிராந்திய பணியகங்களையும், காணாமல் போனோருக்கான பணியகம் நிறுவவுள்ளது. விசாரணை, கண்டுபிடித்தல், சாட்சிகள் பாதுகாப்பு போன்றவற்றுக்கான புதிய அலகுகளும் நிறுவப்படும்.

காணாமல் போனோருக்கான பணியகம் வடக்குக்கு மாத்திரமானது அல்ல. போரின் போது காணாமல் போன 5100 படையினர் மற்றும் பொலிஸார் உள்ளிட்ட தெற்கில் காணாமல் போனவர்கள் குறித்தும் விசாரிக்கும்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## பாதுகாப்புப் பல்கலையின் சர்வதேச ஆராய்ச்சி மாநாடு

(கொழும்பு)

ஜெனரல் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக் கழகத்தின் 11ஆவது சர்வதேச ஆராய்ச்சி மாநாடு, "இணைவுகளூடாக தொழில்சார் மகிமையைப் பேணுதல்" என்ற தொனிப் பொருளில், எதிர்வரும் செப்டெம்பர் மாதம், 13, 14ஆம் திகதிகளில், இரத்மலானையிலுள்ள பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

கல்விசார் ஊழியர்கள் மற்றும் தொழில்வல்லுநர்களுக்கு, தமது ஆராய்ச்சி முடிவுகளைக் கலந்துரையாடுவதற்கு, இது நல்லதொரு சந்தர்ப்பமாகும்.

இந்த மாநாட்டுக்கு பாதுகாப்பும் மூலோபாயமும், பொறியியல், மருத்துவம், சட்டம், முகாமைத்துவம், சமூக விஞ்ஞானம், மனிதவியல் போன்ற பல்துறைசார் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். முப்படை மற்றும் பொலிஸ் திணைக்கள அலுவலர்கள், தமது ஆராய்ச்சி முடிவுகளை முன்வைக்கவுள்ளனர்.

செப்டெம்பர் 13ஆம் திகதி நடைபெறவுள்ள இம் மாநாட்டின் தொடக்க விழாவுக்கு, பேராசிரியர் மொஹான் முன சிங்க, கலாநிதி சரத் குணபால ஆகிய இருவரும் பிரதம உரை நிகழ்த்தவுள்ளனர். (இ-7)

## எனது தந்தையை போன்று வேறு எவரும் மிரட்டல்களுக்கு முகங்கொடுத்ததில்லை

### சதுர சேனாரட்ன எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவத்தினருக்கும் தீவரவாதிகளுக்கும் இடையிலான வித்தியாசத்தை தன்னுடைய தந்தை நன்கு அறிவார் என அமைச்சர் ராஜித சேனாரட்னவின் மகன் பாராளுமன்ற உறுப்பினர்சதுர சேனாரட்ன தெரிவித்துள்ளார்.



ஹங்வெல்ல பகுதியில் நேற்று ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தன்னுடைய தந்தையை போன்று வேறு எவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மிரட்டல்களுக்கு முகங்கொடுத்த அமைச்சர் தென் மாகாணத்தில் இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் சதுர சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

அவ்வாறே தமிழீழ விடுதலைப் புலிகளின் கொலை செய்யப்படவுள்ளவர்களின் பெயர்ப்பட்டியலில் தனது தந்தை பெயர் இருந்ததால் அவருக்கு அதிக பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையிலான வித்தியாசத்தை தன்னுடைய தந்தை நன்கு அறிவார் எனவும் ஊடகங்களும் மக்களும் அதனைத் தவறாகப் புரிந்து கொண்டுள்ளதாகவும் சதுர சேனாரட்ன தெரிவித்துள்ளார். (இ-7)

## தென் மாகாணத்தில் மக்களிடையே அச்சம்

(கொழும்பு)

தென் மாகாணத்தில் பரவி வரும் வைரஸ் காய்ச்சல் காரணமாக மக்களிடத்தில் அச்சம் ஏற்பட்டுள்ளது.

இதனால் குறித்த வைரஸ் காய்ச்சல் தொடர்பாக ஆராய்வதற்கு சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவு அதிகாரிகள் குழுவொன்று இன்று திங்கட்கிழமை குறித்த இடங்களுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இதன்படி காலி, கராப்பிட்டிய மற்றும் மாத்தறை ஆகிய பகுதிகளுக்கே விஜயம் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு முன்னரும் குறித்த பகுதியில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டதாக, சுகாதார சேவை பிரிவு பணிப்பாளர் வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

குறித்த வைரஸ் காரணமாக இதுவரையும் 15 சிறுவர்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஆபத்தானவர் கோத்தபாய

## அமைச்சர் மங்கள சாடல்



(கொழும்பு)

இந்த நாட்டில் நியமிக்கப்பட்ட மிக மோசமான மற்றும் ஆபத்தான அரசாங்க அதிகாரி என்று கருதப்படும் கோத்தபாய ராஜபக்ஷ தற்போது மறு பிறப்பெடுத்த குழந்தை போன்று பேசுவதாக நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இது குறித்து நிதி அமைச்சர் நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கையில்,

கடந்த காலங்களில் மகிந்தவும் அவரது சகோதரர்களும் நாட்டிலுள்ள அனைத்தையும் கொள்ளையடித்ததுடன், வெள்ளை வான் கலாசாரத்தை கொண்டுவந்து ஊடகவியலாளர் பலரின் கடத்தல் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டமைக்கு காரணமாக இருந்தனர்.

அதுமட்டுமன்றி முன்னாள் பாதுகாப்பு செயலாளரான கோத்தபாய ராஜபக்ஷ பல மோசடிகளில் ஈடுபட்டிருந்த நிலையில் அவை தொடர்பிலான வழக்கு விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும்கூட அதற்கான ஆதாரங்கள்கிடைக்கப்பெறவில்லை.

இவ்வாறு மகிந்தவும் அவரது உறவினர்களும் கொண்டு வந்த வெள்ளை வான் கலாசாரத்தின் ஊடாக பயங்கரவாதத்தை கட்டவிழ்த்துவிட்டதால் உலகளாவிய ரீதியில் இருந்து இலங்கை தனிமைப் படுத்தப்பட்டது.

மேலும், அன்று பல ஊழல்களில் ஈடுபட்ட அவர்கள் தற்போதுஉள்ள ஆட்சியாளர்களை ஊழல் செய்வதாக விமர்சித்து வருகின்றமை வேடிக்கையான விடயம் என மங்கள சமரவீர தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## புதிய அரசியலமைப்புப் பணிகள் மீண்டும் 24 ஆம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு தயாரிக்கும் பணிகளை மீண்டும் எதிர்வரும் 24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. புதிய அரசியலமைப்பு செயற்குழு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் எதிர்வரும் 24 ஆம் திகதி கூடவுள்ளது. இதன்போது, அரசியலமைப்பு தொடர்பிலான இறுதி அறிக்கை பற்றியும் கலந்தாலோசிக்கப் படவுள்ளதாகவும் அக்குழுவின் உறுப்பினர் கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார். (இ-7)

## கடல் கொந்தளிக்கும்

### வளிமண்டலவியல் திணைக்களம் தகவல்

(கொழும்பு)

நாட்டின் மேற்கு, தெற்கு பிரதேசத்தில் நிலவும் முகில் கூட்ட கட்டமைப்பு காரணமாக புத்தளத்தில் இருந்து கொழும்பு, காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையிலான கரையோரத்திற்கு அப்பாலான கடல் பிரதேசங் களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யுமென்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

காற்றின் வேகம் உடனடியாக அதிகரிக்கக்கூடும் என்பதனால், கடல் பிரதேசத்தில் உடனடி கொந்தளிப்பு இடம்பெறும்.

புத்தளத்தில் இருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையிலும், மாத்தறையில் இருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடல் பிரதேசத்தில் காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 60 கிலோ மீற்றர் வரையில் அதிகரிக்கும். இந்தப் பிரதேச கடல் கொந்தளிப்பாக காணப்படும்.

கடற்றொழிலாளர்கள் மற்றும் கடல் நடவடிக்கையில் ஈடுபடுவோர் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டுமென்று திணைக்களம் அறிவித்துள்ளது. (இ-7)

## இரட்டை சுழல் தாக்குதலில் சிக்கி

# நடையை கட்டியது மும்பை



ஐ.பி.எல்., தொடரில் இருந்து 'நடப்பு சம்பியன்' மும்பை அணி நடையை கட்டியது. நேற்று நடந்த முக்கிய லீக் போட்டியில் டில்லியிடம் 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்ந்தது. இதன்மூலம் 'பிளே ஓப்' வாய்ப்பை இழந்தது. டில்லி சார்பில் 'சுழலில்' மிஸ்ரா, லமிச்ஹானே அசத்தினர்.

டில்லியில் நேற்று நடந்த 55ஆவது ஐ.பி.எல்., லீக் போட்டியில் டில்லி, மும்பை அணிகள் மோதின. இதில், வென்றால் மட்டுமே 'பிளே-ஓப்' வாய்ப்பு என்ற நிலையில் களமிறங்கிய மும்பை அணியில், மெக்லீனகனுக்கு (தோள பட்டை காயம்) பதில் முஸ்த பிசுர் இடம்பெற்றார். டில்லி அணியில் அவேஷ் கானுக்கு பதில் பிளங்கட் வாய்ப்பு பெற்றார்.

நாணயச்சுழற்சியில்வென்ற டில்லி அணி, முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

**ரிஷாப் அபாரம்**

டில்லி அணிக்கு பிரித்வி ஷா (12) ஏமாற்றினார். தொடக்க வீரராக வந்த மக்ஸ்வெல் (22), அணித் தலைவர் ஷ்ரேயாஸ் ஐயர் (6) சோபிக்கவில்லை. ஒரு பக்கம் விக்கெட் சரிந்தாலும், மறுபக்கம் சிக்சர், பவுண்டரிகளாக விளாசிய ரிஷாப் பன்ட், இத்தொடரில் 7ஆவது முறையாக அரைச்சதம் அடித்தார். இவர், 64 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

**விஜய் விளாசல்**

கடைசி கட்டத்தில் தமிழகத்தின் விஜய் சங்கர் 'மின்னல்' வேகத்தில் ஓட்டங்கள் சேர்க்க, டில்லி அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 174 ஓட்டங்களை எடுத்தது.

விஜய் (43), அபிஷேக் சர்மா (15) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**விக்கெட் மடமட**

பின் சவாலான இலக்கை விரட்டிய மும்பை அணிக்கு சூர்யகுமார் யாதவ் (12), இஷான் கிஷன் (5) விரைவில் ஆட்டமிழந்து 'ஷாக்' கொடுத்தனர். பவுண்டரி, சிக்சர்கள் விளாசிய எவின் லீவிஸ் நம்பிக்கை தந்தார். இந்த நேரத்தில் அமித் மிஸ்ரா, லமிச்ஹானே 'சுழல்' ஜாலம் காட்ட, விக்கெட்டுகள் சரிந்தன. லீவிஸ் (48), பொலார்ட் (7), குர்ணால் (4), அணித் தலைவர் ரோகித் சர்மா (13), ஹர்திக் பாண்ட்யா (27) படுவேகமாக பெவிலியன் திரும்பினர். பிளங்கட் வீசிய 18ஆவது ஓவரில் பென் கட்டிங், ஒரு சிக்சர் 2 பவுண்டரி அடிக்க மொத்தம் 15 ஓட்டங்கள் கிடைத்தன.

கடைசி ஓவரில் மும்பை வெற்றிக்கு 18 ஓட்டங்கள் தேவைப்பட்டன. ஹர்ஷல் படேல் அபாரமாக பந்துவீசினார். முதல் பந்தில் கட்டிங் சிக்சர் அடித்தார். அடுத்த பந்தில் கட்டிங் (37) ஆட்டமிழக்க, நம்பிக்கை தகர்ந்தது. மூன்றாவது பந்தில் பும்ரா (0) வெளியேற, கதை முடிந்தது. மும்பை அணி 19.3 ஓவர்களில் 163 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வி அடைந்தது.

**ரோகித் காயம்**

நேற்று பும்ரா வீசிய போட்டியின் 19ஆவது ஓவரின் கடைசி பந்தை டில்லியின் விஜய் சங்கர் தூக்கி அடித்தார். இதனை பிடிக்க முயன்ற மும்பை அணித் தலைவர் ரோகித் சர்மாவுக்கு இடது தோள்பகுதியில் காயம் ஏற்பட்டது. இதற்காக சிகிச்சை எடுத்துக் கொண்ட இவர், களத்தை விட்டு சிறிது நேரம் வெளியேறினார்.

டில்லி அணியின் பிளங்கெட் வீசிய பந்து (7.4வது ஓவர்), மும்பை வீரர் எவின் லீவிஸ் ஹெல்மெட்டை பலமாக தாக்கியது. இதனால், காது பகுதியில் வலி ஏற்பட, சிகிச்சை எடுத்துக் கொண்டார்.

**மக்ஸ்வெல் - போல்ட் 'கட்ச்' கூட்டணி**

டில்லி அணியின் மக்ஸ்வெல் - போல்ட்டின் 'ரிலே கட்ச்' சாகசம் மும்பைக்கு பேரிடியாக அமைந்தது. போட்டியின் 9.1ஆவது ஓவரை லமிச்ஹானே வீசினார். பந்தை பொலார்ட் தூக்கி அடித்தார். எல்லைக் கோடு அருகே பிடித்த மக்ஸ்வெல் தடுமாறினார். உடனே பந்தை மைதானத்திற்குள் எறிந்தார். இதனை போல்ட் சரியாக பிடிக்க, பொலார்ட் ஆட்டமிழந்தார்.

பின் போட்டியின் 13.5வது ஓவரை ஹர்ஷல் படேல் வீசினார். ரோகித் சர்மா, 'லோங் ஒன்' திசையில் நல்ல உயரத்தில் அடித்தார். இந்த முறையும் பந்தை பிடித்த மக்ஸ்வெல் தடுமாறினார். பின் சுதாகரித்து மைதானத்திற்குள் எறிய... அங்கே காத்திருந்த போல்ட் பிடிக்க, ரோகித் வெளியேற நேர்ந்தது.

**இரட்டை 'சுழல்' தாக்குதல்**

மும்பை அணியை இந்தியாவின் 'சீனியர்' அமித் மிஸ்ரா, நேபாளத்தின் இளம் சந்தீப் லமிச்ஹானே இணைந்து 'சுழலில்' சிதறடித்தனர். தலா 3 விக்கெட்டுக்கள் வீழ்த்தி அசத்தினர். இவர்களுக்கு டில்லி ஆடுகளமும் நன்கு ஒத்துழைத்தது.


**விற்பனைக்கு**

தெல்லிப்பளையில் லொறிப்பாதையுடைய சூழலில் சகல வசதிகளும் கொண்ட சிறிய வீடு வளவு விற்பனைக்குண்டு (4146)

T.P - 071 041 7079



**ஆக்கம் கோரல்...**

தென்மராட்சி பற்றிய ஆவணப் புத்தகம் அச்சாகும் நிலையில் உள்ளது.

உங்கள் கட்டுரைகள், படங்கள் இடம் பெற அழையுங்கள்.

தொடர்புகளுக்கு:- 077 277 2431

(4151)


## IPL இந்தியன் பிறீமியர் லீக் - 2018
## புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| Q1 | சன்ரைசர்ஸ் ஹைதராபாத் | 14 | 9 | 5 | 18 |
| Q2 | சென்னை சுப்பர் கிங்ஸ் | 14 | 9 | 5 | 18 |
| Q3 | கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 14 | 8 | 6 | 16 |
| Q4 | ராஜஸ்தான் றோயல்ஸ் | 14 | 7 | 7 | 14 |
| 5 | மும்பை இந்தியன்ஸ் | 14 | 6 | 8 | 12 |
| 6 | பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | 14 | 6 | 8 | 12 |
| 7 | கிங்ஸ் XI பஞ்சாப் | 14 | 6 | 8 | 12 |
| 8 | டில்லி டேர்டெவில்ஸ் | 14 | 5 | 9 | 10 |

## 19 வயதுக்குட்பட்டோருக்கான மாகாண தொடர்

# வட மாகாண கிரிக்கெட் அணி தெரிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கிரிக்கெட் சபை எதிர்வரும் 31ஆம் திகதியிலிருந்து ஆனி 10ஆம் திகதி வரை கொழும்பில் நடத்தும் 19 வயதுக்குட்பட்டோருக்கான மாகாணங்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக வட மாகாண கிரிக்கெட் அணி நேற்று நடைபெற்ற தெரிவுக்குழு கூட்டத்தில் தெரிவாகியது.

வட மாகாண கிரிக்கெட் சங்கத்தின் செயலாளர் எஸ்.பி.இராஜீவன் தலைமையில் மாகாண மற்றும் மாவட்ட பயிற்சியாளர்களையும் மாவட்ட கிரிக்கெட் சங்க தெரிவுக்குழுத் தலைவர்களையும் வட மாகாண பாடசாலைகளின் பிரதிநிதியையும் உள்ளடக்கிய வட மாகாண தெரிவுக்குழுவே இவ்அணியினை தெரிவு செய்தது. அணியின் விபரம் பின்வருமாறு,

எஸ்.மதுசன் (தலைவர் - யாழ்.மத்திய கல்லூரி), எம். நிதுசன் (உப தலைவர் - சென்.பற்றிக்ஸ் கல்லூரி), அபிலாஸ் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), பானுஜன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), சௌமியன் (சென். ஜோன்ஸ் கல்லூரி), அஜிந்தன் (ஸ்கந்தவரோதய கல்லூரி), தனுசன் (ஸ்கந்தவரோதய கல்லூரி), வரலக்சன் (மகாஜன கல்லூரி), ஜெயதர்சன் (யாழ்.மத்திய கல்லூரி), ராஜ்கிளின்ரன் (யாழ்.மத்திய கல்லூரி), விஜயகாந்த் (யாழ்.மத்திய கல்லூரி), விதுசன் (யாழ்.மத்திய கல்லூரி), டினோசன் (சென். ஜோன்ஸ் கல்லூரி), கபிலன் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), இயலரசன் (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)


உ
சிவமயம்
அம்பாள் துணை

**நயினாதீவு**

**ஆரம்பம்: 1973**



**இந்து கலாசார அபிவிருத்திச் சபை**

**நாற்பத்து ஆறாவது வருட**

**விசேட அறிவித்தல் - 2018**

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் வருடாந்த மகோற்சவம் நிகழும் மங்கலகரமான விளம்பி வருடம் வைகாசித் திங்கள் 31ஆம் நாள் (14.06.2018) வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆனித் திங்கள் 15ஆம் நாள் (29.06.2018) வெள்ளிக்கிழமை இரவு தெப்பத்திருவிழாவுடன் நிறைவு பெறுகின்றது. அம்பிகையின் திருவருளால் கடந்த வருடங்களைப் போல இவ்வருடமும் எமது சபையினால் ஆலய முன்றலில் (ஆலய முன்வாசல் கோபுரத்தின் வடக்குப் பக்கமாக) தாகசாந்தி மண்டபம் அமைத்து, கொடியேற்றம் தொடக்கம் தெப்பத் திருவிழா வரைக்கும் பகல் இரவாக குடிநீர், குளிரேற்றப்பட்ட குளிர்பானம், கோப்பி ஆகியனவற்றை அடியார்களுக்கு வழங்குவதெனவும் தேர்த்திருவிழா அன்று (27.06.2018) புதன்கிழமை காலை அம்பாள் வீதியுலா வந்தடைந்த பின்னர் சிறப்பான முறையில் தயாரிக்கப்பட்ட அருட்பிரசாதம் பிளாஸ்ரிக் கிண்ணத்தில் பொதி செய்யப்பட்டு அடியார்களுக்கு வழங்குவதெனவும் தீர்மானம் செய்து அதற்கான சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதைப் பணிவன்புடன் அறியத் தருகின்றோம்.

அம்பிகை அடியார்களே, தர்மசீலர்களே, வர்த்தகப் பெருமக்களே, அரச பணியாளர்களே, வங்கிச் சேவையாளர்களே, கல்விச் சேவையாளர்களே மற்றும் தபால், மின்சாரம், சுகாதார சேவையாளர்களே, பிரதேச செயலகம், மாநகர சபைப் பணியாளர்களே சகலருக்கும் எமது பணிவன்பான வேண்டுகோள்:

எமது சபையினால் மேற்கொள்ளப்படவுள்ள சகல பணிகளுக்கும் பெரு நிதியும் பெருந்தொகை பொருட்களும் தேவைப்படுகின்றன. எனவே தாங்கள் தங்கள் நிறுவனங்கள், திணைக்களங்களில் வழமைபோல் நிதி சேகரித்து எமது பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்குமாறு வேண்டி நிற்கின்றோம். சபையின் அறப்பணிகளுக்கு நிதி வசூல் செய்வதற்காக வழங்கப்பட்டுள்ள நிதி வசூல் அட்டையில் வசூல் செய்த நிதியைத் தாங்கள் விரும்பின் யாழ்.ஆஸ்பத்திரி வீதியிலுள்ள வர்த்தக வங்கியில் சபையின் பெயரில் உள்ள வங்கிக் கணக்கில் (NAINATIVU HINDU CULTURAL DEVELOPMENT SOCIETY) வைப்பில் இடலாம். (க/கு:இல A/C No: 8060077643) நிதி கிடைத்ததும் அதற்கான பற்றுச்சீட்டு அனுப்பி வைக்கப்படும்.

நயினாதீவு இந்து கலாசார அபிவிருத்தி சபைக்கென சபையின் ஸ்தாபகர் அமரர் RR. பூபாலசிங்கம் அவர்களின் பெயரால் அவரின் குடும்பத்தினரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட காணியில், நயினை நாகபூஷணி அம்பாளைத் தரிசிக்க வரும் யாத்திரிகர்களின் நலன்கருதி கலாசார மண்டபம் ஒன்று அமைப்பதற்கான ஒழுங்குகளைச் சபை மேற்கொண்டுள்ளது என்பதனை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். அந்தப் பாரிய பெரும்பணியை நிறைவு செய்வதற்கு தங்களின் பேராதரவினையும் பங்களிப்பையும் பெரிதும் வேண்டி நிற்கின்றோம்.

**தலைவர்**
ஆர்.ஆர்.பி.ஸ்ரீதரசிங்
உரிமையாளர், பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்- கொழும்பு)

**பொருளாளர்**
பொ.வி.மகாலிங்கம்
முகாமையாளர்,
பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்

**செயலாளர்**
வே.ச.வி.சபாநாதன் JP
ஓய்வுநிலை குடியேற்றத் திட்ட அதிகாரி

**உப தலைவர்கள்**
தி.க.மகாலிங்கசிவம் JP
ஓய்வுநிலை அதிபர்

**உப செயலாளர்கள்**
இ.திரவியநாதன் பிரதி அதிபர்
பொ.வி. ஓங்காரலிங்கம் அதிபர்

**விசேட உற்சவங்கள்**

14.06.2018 கொடியேற்றத் திருவிழா | 26.06.2018 சப்பரத் திருவிழா | 28.06.2018 தீர்த்தத் திருவிழா
23.06.2018 மஞ்சத் திருவிழா | 27.06.2018 தேர்த் திருவிழா | 29.06.2018 தெப்பத் திருவிழா

(4146)

# அரசின் திட்டங்களில் தொடர் புறக்கணிப்பு
## மிருசுவில் பெண் இராணுவத்திடம் உதவி கோரல்

(யாழ்ப்பாணம்)

குழந்தை இல்லாத காரணத்தால் அரசாங்கத்தின் திட்டங்களில் தொடர்ச்சியாக புறக்கணிக்கப்படுவதாக தெரிவித்து மிருசுவிலை சேர்ந்த பெண் ஒருவர் இராணுவத்தினரிடம் உதவி கோரியுள்ளார்.

குழந்தைகள் இல்லாத காரணத்தால் அரசாங்கத்தின் வாழ்வாதார உதவி திட்டங்களில் தொடர்ச்சியாக தாம் புறக்கணிக்கப்பட்டு வருவதாக முறையிட்டு, இராணுவத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற மனித நேய வேலை திட்டங்களின் கீழ் தமக்கு ஒரு வீட்டை கட்டித் தருமாறு கோரி இராணுவத்தின் யாழ்.மாவட்ட கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சிக்கு குறித்த பெண் எழுதியுள்ள கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அக் கடிதத்தில் மிருசுவில் ஹெற்பேலியில் உள்ள எனது குடும்பம் நானும், எனது கணவருமாக இரு அங்கத்தவர்களை கொண்டது. தற் போது சிறிய கொட்டில் ஒன்றில் வசித்து வருகின்றோம். எமக்கு குழந்தைகள் இல்லாத காரணத்தால் கடந்த 13 வருடங்களாக அரசாங்கத்தின் எந்த உதவிகளும் எமக்கு தொடர்ச்சியாக கிடைப்பதே இல்லை.

இந்நிலையில் உங்களால் வழங்கப்படுகின்ற உதவி திட்டத்தில் எம்மையும் பயனாளியாக இணைத்து எமது காணியில் வீடு ஒன்று கட்டித்தருமாறு கேட்டு கொள்கின்றேன் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)


## பெயர் மாற்றம்

மண்டைதீவு 2ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்ட எனது பெயர் சௌந்தரவனிதேவி. ஆனால் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் சகுந்தலவனிதேவி என தவறுதலாக பதியப்பட்டுள்ளது. எனவே இன்று முதல் சௌந்தரவனிதேவி எனும் பெயரையே என் சார்ந்த சகல ஆவணங்களிலும் பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள,
ப.சௌந்தரவனிதேவி
(4134)

## வாடகைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் திருச்செல்வம் வீதியில் சகல வசதிகளும் கொண்ட வீடு உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
077 670 5196, 077 246 7873
(4143)

## வேலைக்கு ஆள் தேவை

முல்லைத்தீவு பகுதியில் தோட்ட வேலைக்கு ஆள் தேவை. கால்நடை வளர்ப்பில் ஆர்வமும் அனுபவமும் இருப்பதுடன் தங்கியிருந்து வேலை செய்யக்கூடியவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். ஆரம்ப சம்பளம் மாதம் 30,000/- வழங்குவதுடன் பிற சலுகைகளும் உண்டு.

தொ.பே:0771681697, 0766205322
(4-2656)

# கண்ணீர் அஞ்சலி

திருமதி.
## வரதராஜன் சகுந்தலா



யாழ். எய்ட் இன் இணைப்பாளரும்,
யாழ். மாநகரசபை உறுப்பினருமான
வ.பார்த்திபன் அவர்களின்
ஆருயிர் தாயார்
திருமதி. வரதராஜன் சகுந்தலா அவர்களின்
மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பணியாளர் மற்றும்
யாழ். எயிட் சமூகத்தினர்

(4141)


# இராசி பலன்

21.05.2018
வைகாசி 07, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு
சப்தமி பின்னிரவு 2.30 மணிவரை
ஆயிலியம் பின்னிரவு 1.28 மணிவரை
சுபநேரம் 11.52-1.22 மணிவரை
இராகுகாலம் 7.22-8.52 மணிவரை

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | சூரி. புத | சுக் |
| | | | சந். ராகு |
| செவ், கேது | | | |
| சனி | | குரு | |

சந்திராஷ்டமம்
உத்தராடம்: திருவோணம்
இரவு 1.27 மணிக்கு
திங் - சந்

**மேடம்** – வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**இடபம்** – நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழும் நாள், அரசு வழியில் அனுகூலமுண்டு, குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**மிதுனம்** – உறவினர்கள் வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், பேச்சில் கனிவு பிறக்கும், தனவரவு திருப்திகரமாக அமையும், பொன்னான நாள்.

**கடகம்** – தொழில் நலன்கருதி அனுகூலம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

**சிம்மம்** – சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள்.

**கன்னி** – திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.

**துலாம்** – வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்** – வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் எதிர்பார்த்தபடி வந்து சேரலாம், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**தனுசு** – ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயமாகலாம், நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம்.

**மகரம்** – மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், உறவினர்களின் வருகையுண்டு, பேச்சில் கனிவு பிறக்கும், களஸ்திர நன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்** – உள்ளொன்று வைத்து, புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், தொழில் நன்மையுண்டு.

**மீனம்** – அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வியாபார விருத்தியுண்டு, பணத் தேவைகள் பூர்த்தியாகும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

வளவன்



உலகையே உலுக்கிய முள்ளிவாக்கால் இனவழிப்பின் மனித பேரவலத்தின் ஒன்பதாவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு மண்டைதீவு இரட்டைக் கிணற்று நினைவு திடலில் (1990ம்ஆண்டு தீவகத்தினை ஆக்கிரமிக்கவந்த அரசபடையினால் அழிக்கப்பட்ட தமிழ் உறவுகளை புதைத்த கிணற்றடி) மண்டைதீவு கிறிஸ்தவ மதகுருமாரின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மதகுருமார்,அருட்சகோதரர்கள்,அருட் சகோதரிகள் மற்றும் வேலணை பிரதேச சபையின் உறுப்பினர்கள், பொது அமைப்பின் உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

### படையெடுக்கும் தென்னிலங்கை தொழிலாளர்கள்

## வடமராட்சிப்பகுதி கரைவலை மீனவர்கள் தொழிலை கைவிடும் துர்ப்பாக்கிய நிலை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கடற்பரப்பை நோக்கி படையெடுக்கும் தென்னிலங்கை கடலட்டை பிடிக்கும் தொழிலாளர்களால், அப்பகுதியில் கரைவலை மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் தமது தொழிலை கைவிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த வடமராட்சி மீனவர்கள், இச்செயற்பாட்டை தடுத்து நிறுத்துவதற்கு மக்கள் பிரதிநிதிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடமராட்சி பகுதி கடற்பரப்பில் தென்னிலங்கையில் இருந்து வரும் பெருமளவான தொழிலாளர்கள் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி கடற்றொழில் அமைச்சின் அனுமதி பெற்று கடலட்டை பிடிக்கும் தொழிலில் ஈடுபடுகிறார்கள்.

குறிப்பாக 200 இற்கும் மேற்பட்ட படகுகளில் அப்பகுதிக்கு வந்து அத்துமீறி கடற்தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். இதனால் அப் பிரதேச மீனவர்கள் கடற்றொழில் ஈடுபட முடியாத இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் வடமராட்சி கிழக்கு பகுதியில் கரைவலை தொழிலில் ஈடுபடும் கரைவலை தொழிலாளர்கள் தமது தொழிலை கைவிட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளதுடன் கடற்றொழில் சம்மேளனத்திலும் முறைப்பாடு செய்துள்ளனர்.

தென்னிலங்கையில் இருந்து வந்து கடலட்டை பிடிக்கும் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் மீனவர்களின் செயற்பாட்டை உடனடியாக தடுத்து நிறுத்த பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் இணைந்து விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விரைவாக நடவடிக்கை எடுக்கத் தவறின் எதிர்வரும் வாரங்களில் எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவித்துள்ளனர். (இ-9-60)

## துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் அமைக்க வரணி நூலக வாசகர்கள் கோரிக்கை

(வரணி)

சாவகச்சேரி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட வரணி பொது நூலகமானது பிரதேச மக்கள் அதிகம் பயன்படுத்தும் ஒரு நூலகமாகும்.

இந்த நூலகத்திற்கு இதுவரை துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் அமைக்கப்படாமை குறைபாடாகவுள்ளது.

நூலகத்திற்கு வரும் வாசகர்கள் துவிச்சக்கர வண்டிகளை வெயிலிலேயே நிறுத்த வேண்டியுள்ளது.

இதனால் அவர்களது துவிச்சக்கரவண்டி காற்று போவதால் உருட்டிக் கொண்டு நடந்து செல்ல வேண்டி ஏற்படுகின்றது.

அதுமட்டுமன்றி மழை காலங்களில் வாசகர்களின் துவிச்சக்கரவண்டிகள், மோட்டார் சைக்கிள் போன்றவற்றை மழையிலேயே நிறுத்த வேண்டியுள்ளது.

இதனால் அவை பழுதடைகின்ற சந்தர்ப்பமும் ஏற்படுகின்றது.

எனவே வாசகர்களின் நலனைக் கருத்திற்கொண்டு துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் அமைப்பதற்கு பிரதேச சபையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வாசகர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-103)



முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பின் 9 ஆம் ஆண்டு நினைவாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் "ஞாபகார்த்த இரத்த தான முகாம்" நேற்று யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை இடம்பெற்ற இந்த இரத்ததான முகாமில் பெருமளவான குருதிக்கொடையாளர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர். (படங்கள்:-சோபிகா)

## அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றியவர் 5000 ரூபாய் அபராதம் செலுத்தினார்

(கரணவாய்)

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற நபர் ஒருவருக்கு 5000ரூபா அபராதம் விதித்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி நளினி சுபாகரன் உத்தரவிட்டார்.

கடந்த வியாழக்கிழமை தேவரையாளிப்பகுதியில் மணலுடன் நெல்லியடி பொலிஸாரால் லான்மாஸ்டர் ஒன்று பிடிக்கப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸாரால் கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட போதே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டது. (இ-60)

## தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 3) 96 | | 1-3 | 16-2 |
| 4) 57 | | 2-2 | 17-2 |
| 5)(1) XII (2) XV | | 3-3 | 18-4 |
| 6)53242 | | 4-2 | 19-3 |
| 7)6789 | | 5-3 | 20-3 |
| 8)ஒன்பதாயிரத்து | | 6-3 | 21-2 |
| எண்நூற்று எழுபத்து ஆறு | | 7-4 | 22-2 |
| முன் | பின் | 8-2 | 23-1 |
| 9)4097 | 4099 | 9-3 | 24-4 |
| 10)99248 | 99250 | 10-1 | 25-3 |
| 11)1011, 2489, 4305, 6799 | | 11-3 | 26-2 |
| 12) 9099, 6649, 8222, 205 | | 12-3 | 27-4 |
| 13) 100,000 | | 13-4 | 28-3 |
| 14) 17,803 | | 14-1 | 29-3 |
| 15) 7 | | 15-3 | 30-4 |




வட மாகாணக் கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று தேசிய நூலக மற்றும் ஆவணப்படுத்தல்கள் சபையின் மாணவரின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பது தொடர்பாக நடைபெற்ற கருத்தரங்கில் வடக்கு கல்வி அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன், மாகாணக் கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார் உட்பட கல்வி அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

## பெண் மீது தாக்குதல்


(கரணவாய்)

மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த பெண்ணிடம் தங்க நகைகளைப் பறிக்க முற்பட்ட நபர்கள் பலமாகத் தாக்கியதில் நிலைகுலைந்து வீதியில் விழுந்த பெண் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் வல்வைப்பகுதியில் இடம்பெற்றது. இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-60)



பிரம்மஸ்ரீ குமாரசாமி சர்மாவின் 'சங்கீத மகான்களும் எம் மண்ணின் சங்கீத கலைஞர்களும்' நூல் , பேராசிரியர் கோபாலகிருஷ்ணன் தலைமையில் யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகன்,முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன், இந்து பண்பாட்டு திணைக்கள பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டது. கோப்பாய் சிவம் அறிமுகவுரையையும் விரிவுரையாளர் பாலசண்முகன் நயப்புரையையும் நிகழ்த்தினர்.சிவஸ்ரீ மகாதேவக்குருக்கள் ஆசி வழங்குவதையும் நூலாசிரியர் தம்பதியினர் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்படுவதனையும், நிகழ்வில் இடம்பெற்ற ஜெயராமன் குழுவினரின் வயலின் கச்சேரியினையும் படங்களில் காணலாம்.



# வன்னிவிளாங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன்

# ஆலய வருடாந்த பொங்கல் விழா

## 25.05.2018 வெள்ளிக்கிழமை

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின்கரந்தவளே கறைக்கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே

அம்பிகை அடியார்களே!

வன்னிவிளாங்குளம் பகுதியில் பன்நெடுங்காலமாக கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் வருடாந்த பொங்கல் விழா நிகழும் விளம்பி வருஷம் வைகாசித் திங்கள் 11 ஆம் நாள் (25.05.2018) வெள்ளிக்கிழமை வழமைபோல் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

அன்று நண்பகல் அம்பாளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் விசேட அபிஷேகமும் அலங்கார பூசைகளும் நடைபெறும். இரவு 9.00 மணியளவில் மடைப்பண்டம் எடுக்கும் நிகழ்வும் தொடர்ந்து பொங்கல் விழா நிகழ்வுகளும் நடைபெறும். அடியார்கள் பூசைக்குரிய அபிஷேகப் பொருட்கள், பூக்கள், பூ மாலைகள் போன்றவற்றை தந்துதவுமாறு வேண்டுகின்றோம். வழமைபோல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் எமது சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்ட நிதி சேகரிக்கும் தொண்டர்கள் தங்கள் இல்லம் நாடி வருவார்கள். அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் உங்களால் இயன்றளவு நிதி வழங்கி பொங்கல் விழாவை சிறப்பாக நிறைவு செய்வதோடு அனைத்து அடியார்களும் கலந்து கொண்டு எல்லாம் வல்ல ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

**குறிப்பு:-**
1. **பொங்கல் தினத்தன்று விசேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளது.**
2. **பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.**
3. **பொங்கல் தினத்தன்று வியாபார நிலையங்கள் அமைக்க விரும்புவோர் 23.05.2018 நண்பகல் 12.00 மணி தொடக்கம் தங்கள் பெயர்களை பதிவு செய்து உரிய பணத்தினை செலுத்தி பற்றுச் சீட்டினைப் பெற்றுக் கொண்டால் மட்டுமே வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படுவீர்கள் என்பதை அறியத் தருகின்றோம்.**

**பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் அறிவுறுத்தல்- தொடர்புகளுக்கு-077 889 6796**

- உணவு கையாள்பவர்கள் அனைவரும் மருத்துவச் சான்றிதழ், நீர்ப் பகுப்பாய்வுச் சான்றிதழ், இவ்வாண்டுக்குரிய பிரதேச சபை அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
- உணவு கையாள்பவர்கள் ஏப்ரன், தொப்பி என்பன அணிதல் வேண்டும்.
- மூடியுடன் கூடிய கழிவகற்றல் தொட்டி, வெள்ளைத்தாள் பாவனை; உணவு இடுக்கிப் பாவனை போன்ற சுகாதார விதிமுறைகளை பின்பற்றுதல் வேண்டும்.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"**

(C-2655)

**ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய திருப்பணிச் சபை, வன்னிவிளாங்குளம், மாங்குளம்.**

---

## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை (வ-து)
## 96 ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழா-2018
## பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள்

பின்வரும் விபரப்படி நடைபெறவுள்ள போட்டிகளில் முதலிடம் பெறும் மாணவர்கள் தேசியமட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்படுவார்கள். சகல போட்டிக்குமான விடயம் பின்வரும் பொதுவான தொனிப்பொருளைக் கொண்டது.

"பசுமையான ஓர் உலகம் மற்றும் சிறந்த ஓர் உலகின் பொருட்டு கூட்டுறவு"
"Co-op for a greener planet and for a better world"

| தொ. இல | பிரிவு | போட்டிவகை | நேரம் | போட்டி நடைபெறும் காலம் |
|---|---|---|---|---|
| 01 | கனிஷ்ட பிரிவு தரம் 10-11 | கட்டுரை தமிழ், ஆங்கிலம் | 1 மணி | 02.06.2018 காலை 9.00-10.00 |
| 02 | சிரேஷ்ட பிரிவு தரம் 12-13 | கட்டுரை தமிழ், ஆங்கிலம் | 1 மணி | 02.06.2018 காலை 9.00-10.00 |
| 03 | கனிஷ்ட பிரிவு தரம் 10-11 | சித்திரம் | 2 மணி | 02.06.2018 காலை 10.00-12.00 |
| 04 | சிரேஷ்ட பிரிவு தரம் 12-13 | சித்திரம் | 2 மணி | 02.06.2018 காலை 10.00-12.00 |
| 05 | கனிஷ்ட பிரிவு தரம் 10-11 | தமிழ், ஆங்கிலம் பேச்சுப் போட்டி | 5-7 நிமிடம் | 02.06.2018 பி.ப. 2.00 மணி |
| 06 | சிரேஷ்ட பிரிவு தரம் 12-13 | தமிழ், ஆங்கிலம் பேச்சுப் போட்டி | 5-7 நிமிடம் | 02.06.2018 பி.ப. 2.00 மணி |

மாவட்ட மட்டத்தில் மட்டும்நடைபெறும் போட்டிகள்

| தொ. இல | பிரிவு | விடயம் | போட்டி நடைபெறும் காலம் |
|---|---|---|---|
| 07 | ஆரம்பப் பிரிவு தரம் 6-7 | கூட்டுறவு மூலம் இயற்கை சூழலை பாதுகாப்போம் | 09.06.2018 காலை 9.00 மணி |
| 08 | கீழ்ப் பிரிவு தரம் 8-9 | பாதுகாப்பான உணவுப் பொருள் விநியோகத்தில் கூட்டுறவின் வகிபாகம் | 09.06.2018 காலை 9.00 மணி |

பொதுவான நிபந்தனை

- ஒரு பாடசாலையில் இருந்து ஒரு பிரிவுக்கு இரண்டு மாணவர் மட்டும் பங்குபற்ற முடியும்
- விண்ணப்பங்கள் யாவும் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்த வேண்டும்.
- போட்டிகள் யாவும் கூட்டுறவாளர் வீரசிங்கம் கட்டடத் தொகுதி 2, 3 ஆம் மாடிகளில் நடைபெறும்.
- விண்ணப்ப முடிவு திகதி 30.05.2018
- விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை, இல. 12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
- சித்திரப்போட்டிக்கு A-3 அளவிலான தாள் வழங்கப்படும். விரும்பமான வர்ணங்களை மாணவர்கள் கொண்டு வருதல் வேண்டும்.

**தொலைபேசி இலக்கம்: 021 222 2324** (C-2656), **செயலாளர்**

---

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 4ஆம் பாதம்
கி.பா:11சூரிசெவ் 9 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L அரச தொழில்
தொ.இ: B/7680

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2 ஆம் பாதம் செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L அரச தொழில்
தொ.இ: B/7682

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: பூராடம் 2ஆம் பாதம்
கி.பா: 35 செவ் 1 இல்
தகைமை/தொழில்A/L தனியார் தொழில்
தொ.இ: B/7683

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: சுவாதி 2ஆம் பாதம் செவ் 1 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: பட்டதாரி தனியார் தொழில்
தொ.இ: B/7685

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 2ஆம் பாதம்
கி.பா: 12 உயரம்: 5'3"
தகைமை/தொழில்:BSC ஆசிரியர் அரச தொழில்
தொ.இ: G/7819


பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 2ஆம் பாதம் சூரிசெவ் 12 இல்
தகைமை/தொழில்: பட்டதாரி அரச தொழில்
தொ.இ: G/7820

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 3 ஆம் பாதம்
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L அரச தொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/7825

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் செவ் 1 இல்
உயரம்: 153cm
தகைமை/தொழில்:A/L அரச தொழில்
தொ.இ: G/7084

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1605, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**

# உறவுகளை நினைவில் ஏந்தாது எம்மால் இருக்க முடியாது



## முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை எதிர்ப்போருக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் நெற்றியடி

(யாழ்ப்பாணம்)

**எம் மக்களைச் சதி செய்து கொன்ற நிகழ்வை நினைவில் ஏந்தாது எம்மால் இருக்க முடியாது என தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன், போரில் அநியாயமாக கொல்லப்பட்டவர்களைப் பற்றி குரல் எழுப்ப முடியாவிட்டாலும் இறந்தவர்களை நினைத்து அவர்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தனை செய்யுங்கள் எனவும் தெரிவித்துள்ளார்.**

இந்த வாரத்துக்கான கேள்வி பதிலில் 'புலிகளைத் தொடர்ந்து இந் நாட்டில் ஒரு இக்கட்டான நிலைமையை உண்டாக்க நீங்கள் இவ்வாறான நினை வேந்தல் கூட்டங்கள் மூலம் வழி அமைக்கின்றீர்கள் அல்லவா? இவை தேவையா? என கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

நினைவேந்தல் கூட்டங்கள் தேவை. மரணித்தவர்களின் நினைவை நாம் வருடந்தோறும் ஏந்தல் எமது பாரம்பரிய வழக்கம். அநியாயமாக கொல்லப்பட்ட எமது உறவுகளின் நினை வேந்தலை நடத்துவது வழக்கமான நினைவேந்தல் களை விட முக்கியமாகத் தேவையானதொன்று. எமது மக்கள் தற்செயலாகச் சாகவில்லை. கொடூரமாகக் கொலை செய்யப்பட்டவர்கள். ஒரு இடத்திற்குக்கொண்டுவரப்பட்டு, சரணடைந்தால் விடுவிப்போம் என்று பல பசப்பு வார்த்தைகள் கூறி எம் மக்களைச் சதி செய்து கொன்ற நிகழ்வை நாம் நினைவில் ஏந்தாது எப்படி இருப்பது? போரில் இறந்தவர்களை நினைவு கூருவது, அவர் சாந்திக்காகப் பிரார்த்தனை செய்வதென்பதெல்லாம் சர்வதேச சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனித உரிமைகளின் அலகுகள். ஆகவே நினைவேந்தலின் முக்கியத்துவத்தை நீங்கள் இப்போது உணர்ந்து கொண்டிருப்பீர்கள் என்று நம்புகின்றேன்.

போரில் அநியாயமாக கொல்லப்பட்டவர்களைப் பற்றி குரல் எழுப்ப முடியாவிட்டாலும் இறந்தவர்களை நினைத்து அவர்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தனை செய்யுங்கள்!

எமது பிரச்சினைகளைத் தீர்க்க நீங்கள் முன்வராவிடினும் எம்மை விமர்சிக்காது இருங்கள். தமிழ் மக்கள் என்ற ரீதியில் இன்னும் 20 வருடத்தில் வடகிழக்கில் தமிழர்கள் செறிந்து வாழ்வார்களா? இல்லையா? என்பதையும் பெரும்பான்மையினராக தமிழர்கள் தான் தொடர்ந்து வாழ்வார்களா? என்பது பற்றி எல்லாம் சற்று நின்று நிதானித்து முடிவுக்கு வாருங்கள்.

புலிகளைத் தொடர்ந்து இக்கட்டான நிலையை ஏற்படுத்த விழைகின்றோம் என்ற உங்கள் அடுத்த கூற்று நகைப்புக்குரியது. வட கிழக்கில் எமக்கான உரித்துக்களை நாம் முன்வைத்தால் உடனே பதற்றப்படுவது கொழும்பில் உள்ள தமிழர்கள் தான். தமக்கிருக்கும் சொத்து, சுகம், வசதிகள், பதவிகள் யாவற்றையும் இழந்து விடுவோமோ என்ற பயந்தான் உங்களை அவ்வாறு சிந்திக்க வைக்கின்றது.

தமிழர்களாகிய எங்களுடைய இதுவரையான நிலைமையை எண்ணிப் பாருங்கள். வெள்ளையர் காலத்தில் நாடு பூராகவும் வாழ்ந்தோம். மற்றைய இனங்களுடன் சேர்ந்து ஒற்றுமையாக வாழ்ந்தோம்.

அதிகாரமானது வெள்ளையரிடம் இருந்து பெரும்பான்மை சமூகம் வசம் சென்றவுடன் அவர்கள் செய்தது என்ன?

தமிழர்கள் பரந்து வாழ்ந்த முழுநாட்டில் இருந்தும் குறிப்பாக தெற்கில் இருந்து படிப்படியாக அவர்கள் வெளியேற்றப்பட்டார்கள். தமிழர்களுக்கு எதிரான இனக் கலவரங்கள் மூலமும் புதிய புதிய சட்டங்கள் மூலமும் இதனைச் சாதித்தார்கள். எம்முள் பலர் மெல்ல மெல்ல வெளிநாடுகளுக்குச் செல்லத் தொடங்கினார்கள். இலங்கைத் தமிழர்களின் சனத்தொகை குன்றத் தொடங்கியது. யுத்தம் இந்த வெளியேற்றலைத் துரிதப்படுத்தியது. போரின் முடிவைப் பாவித்து வடகிழக்கு மாகாணங்களைத் தொடர்ந்து ஒன்பது வருடங்களாக படையினர் தம் கைவசப்படுத்தி வந்துள்ளார்கள்.

அவர்கள் தொடர்ந்து இங்கு இருப்பதால் வரும் பாதிப்புக்கள் பற்றி ஏற்கனவே பல தடவை கூறிவிட்டேன். உரிமைகளைக் கேட்பது இக்கட்டான நிலையை ஏற்படுத்துமானால் நாம் மௌனம் சாதிக்க வேண்டும்.

அவ்வாறு வாழாதிருந்தால் நாடு பூராகவும் சிங்கள பௌத்த மயமாக்கப்படும். அதை விரும்புகின்றீர்களா?

புலிகளைத் தொடர்ந்து நாம் ஒரு இக்கட்டான நிலைமையை உண்டாக்கத் தலைப்பட்டுள்ளோம் என்று கூறுகின்றீர்கள். அது சரியா? புலிகள் ஏன் உண்டானார்கள்? தமிழ் மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகள் ஆக்கப்பட்ட பின்னரே எமது இளைஞர்கள் யுத்தம் பற்றி சிந்திக்கத் தொடங்கினார்கள்.

தெருவில் போகும் ஒருவனை நோக்கி நீங்கள் உங்கள் வீட்டு நாயை அவிழ்த்து விடுகின்றீர்கள். அவன் தற்பாதுகாப்புக்காக கல்லை எடுத்து நாயின் மீது எறிகின்றான். உங்கள் யன்னல் கண்ணாடி அதனால் உடைகிறது. உடனே நீங்கள் பொலிசுக்கு தொலைபேசி எடுத்து "இன்னார் என் வீட்டுக்குக் கல் எறிந்து விட்டான். பிடியுங்கள் அவனை. சிறையில் போடுங்கள் அவனை" என்றெல்லாம் சொல்லிக் குமுறுகின்றீர்கள். தெருவில் சென்றவன் அமைதியாகச் சென்று கொண்டிருந்தான். நீங்கள் தான் உங்கள் நாயை உசுப்பேற்றி அவன் அண்டை அனுப்பினீர்கள். எதிர் வினையாகவே அவன் கல்லை எறிந்தான். கல்லை அவன் எறியாவிட்டால் நாய் அவனைக் கிள்ளிக் குதறி எடுத்திருக்கும். "நாய்" என்று கூறியது அரசினால் கட்டுபடுத்தப்படாத இன வழிக் கொலைகளும் சட்ட மாற்றங்களும். இந்தக் கதையில் வரும் உங்களைப் போலத் தான் சிங்கள அரசியல்வாதிகளும் இதுகாறும் நடந்து வந்துள்ளார்கள்.

பிழைகளை மத்திய அரசாங்க சிங்களத் தலைவர்கள் தம் வசம் வைத்துக் கொண்டு தமிழர்களைப் பிழை கூறுவது பொருத்தமானது அன்று.

தமிழரை விரட்டி அடிக்க வேண்டும், அவர்களின் அதிகாரங்களைக் குறைக்க வேண்டும் என்று கங்கணங் கட்டிக் கொண்டு நடந்து கொண்ட சிங்கள அரசியல் தலைவர்களால்தான் நாட்டில் இக்கட்டான நிலைமை ஏற்பட்டது.

"சிங்களம் மட்டும்" என்ற போது வடக்கு-கிழக்கில் தமிழ் என்றிருக்கலாம் அல்லது இடதுசாரிகள் அன்று கூறியது போல் இரு மொழிகளும் அரச கரும மொழிகளே என்று சட்டம் கொண்டு வந்திருக்கலாம். ஆகக் குறைந்தது 1958ம் ஆண்டின் பண்டாரநாயக்க - செல்வநாயகம் உடன்பாட்டையாவது நடைமுறைப்படுத்தியிருக்கலாம். தமிழர்களிடம் இருந்து அவர்கள் உரிமைகளைப் பறித்த நிலையில் அவர்கள் உரிமைகளை அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்காது இருந்து கொண்டு இருக்கும் இன்றைய நிலையில் "ஒரு இக்கட்டான நிலையை ஏற்படுத்தாதீர்கள்" என்று சொல்வதைப் பார்த்தால் தெற்கு எவ்வளவு தான் உங்களைக் குட்டினாலும் குட்டை ஏற்றுக் கொண்டு பணிந்து நடவுங்கள் என்று நீங்கள் சொல்வது போல் இருக்கின்றது. எமது உரித்துக்களைப் பெறும் வரையில் நாம் போராடாவிட்டால் நாம் இருந்த இடமே தெரியாமல் போய்விடும்.

ஏற்கனவே வடகிழக்கில் எமது காணிகள் படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளன. பல தடவைகளில் வடமாகாண சபைக்குத் தெரியாமலே இது நடந்துள்ளது. ஏற்கனவே எமது காணிகளில் வெளியார் கொண்டுவரப்பட்டு குடியேற்றப்பட்டுள்ளார்கள். புதிய சிங்களக் கிராமங்கள் முளைக்கத் தொடங்கியுள்ளன. ஏற்கனவே வன திணைக்களம் போன்றவை எமது மக்களைத் தாம் குடியிருக்கும் இடங்களில் இருந்து வெளியேற்றுகின்றார்கள். ஏற்கனவே எமது பல்கலைக்கழகங்களில் 50 வீதத்திற்கு மேற்பட்டவர்கள் சிங்கள மாணவ மாணவியர். ஏற்கனவே பல திணைக்களங்களுக்குத் தேவை நிமித்தமும் மத்திய அரசாங்கத்தின் ஏற்பாட்டின் நிமித்தமும் தென்னவர் கொண்டுவரப்பட்டுள்ளார்கள். ஏற்கனவே பல ஏக்கர் காணிகள், விவசாயம், விவசாயப் பண்ணைகள் படையினர் கைவசம். ஏற்கனவே மீன் பிடித்தலுக்கு வெளி மாவட்ட மீனவர்கள் படையினர் அனுசரணையுடன் குடியேற்றப்பட்டுள்ளனர்.

நடப்பவற்றைப் பார்த்தால் தமிழர்கள் வட கிழக்கில் தொடர்ந்து பெரும்பான்மையினராகக் கணிக்க முடியாத நிலையே உருவாகி வருகின்றது. இவ்வாறான நிலையில் யாரென்று பார்க்காமல் எமது உறவினர் கொன்று குவிக்கப்பட்ட நாளில் இறந்தவர்களை நினைவில் ஏந்தாது சும்மா இருக்குமாறு சொல்கின்றீர்களா? சும்மா இருந்தால்தான் பிரச்சினை முடிவுக்கு வருமா?

இக்கட்டான நிலையை ஏற்படுத்தாதீர்கள் என்கின்றீர்கள். சும்மா இருந்தால் சுகம் பெறலாம் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள். அவ்வாறு நடப்பதில்லை. உங்கள் உரித்துக்களை நீங்கள் உரத்துக் கூறிப் பெறாவிட்டால் எவருமே உங்களுக்கு உதவி செய்ய முன் வரமாட்டார்கள்.

1983 ஜூலைக்கு முன்னைய மாதங்களில் ஜே.ஆரின் திறந்த பொருளாதாரம் பாரிய பொருளாதார விருத்தியை ஏற்படுத்தியது. பல தமிழர்கள் வெளிநாடுகளில் இருந்து இலங்கை திரும்பி வணிகத்தில் ஈடுபட விரும்பினார்கள். ஆனால் நடந்தது என்ன?

ஜூலைக் கலவரம் ஏற்கனவே நல்ல நிலையில் இருந்த வணிக நிலையங்களைத் தீயிட்டு கொளுத்தியது. பொருளாதார ரீதியில் கணிசமான முன்னேற்றத்தைப் பெற்றிருந்த எமது வணிகப் பெருமக்கள் பலர் சகலதையும் இழந்து நிற்கும் ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். அவர்கள் எதற்கும் குரல் கொடுக்காதவர்கள். சும்மா இருந்தால் சுகம் பெறலாம் என்று நம்பியவர்கள்.

ஆகவே இவ்வாறான கேள்விகளைக் கேட்டு உங்கள் சுயநல சிந்தையை வெளிப்படுத்தாதீர். எம் மக்கள் படிப்படியாக விரட்டப்படும் நிலையில் எமது கடமைகள் என்ன என்பதைப் பற்றிச் சிந்தியுங்கள். பெரும்பான்மையினருடன் சங்கமமாகிவிட வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கிருந்தால் நாமும் அந்த எண்ணம் கொண்டிருக்க வேண்டும் என்று நீங்கள் நினைப்பது மடமை. ஒரு இனத்தை இவ்வாறு அழிப்பது, சங்கமமாக்குவது, படிப்படியாக இல்லாமல் ஆக்குவது இனப்படுகொலை என்று சர்வதேச ஆவணங்கள் கூறுகின்றன என மேலும் தெரிவித்தார். (இ-9)



உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் வரணி சுட்டிபுரம் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட தென்மராட்சி கலாசார மத்திய நிலையம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.30 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது. உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ பிரதம விருந்தினராக கலந்துகொண்டு கலாசார மத்திய நிலைய கட்டடத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மாகாணசபை உறுப்பினர் கே.சயந்தன், சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன், யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், சாவகச்சேரி பிரதேச செயலர் திருமதி தேவநந்தினி பாபு உட்பட பெருமளவான பொதுமக்களும் கலந்துகொண்டனர். யாழ்.மாவட்டத்தில் திறந்து வைக்கப்படுகின்ற ஏழாவது கலாசார மத்திய நிலையம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

(படங்கள்:-கிஷோர், வரணி, கரணவாய் செய்தியாளர்கள்)

# கரைச்சி பிரதேசசபைக்குட்பட்ட வீதிகளை தற்காலிகமாக புனரமைக்க நடவடிக்கை

## தவிசாளர் வேழமாலிகிதன் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளை தற்காலிகமாக புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கரைச்சிப் பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளை உள்ளடக்கிய சுமார் 58 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட ஒரு பரந்த பிரதேசமாகக் காணப்படுவதுடன், ஆயிரத்து 713 கிலோமீற்றர் நீளமான வீதிகள் காணப்படுகின்றன.

இந்த வீதிகளில் பல நீண்ட காலம் புனரமைக்கப்படாது சேதமடைடந்த நிலையில் காணப்படுகின்றது.

இந்த வீதிகளைப் புனரமைத்துத்தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வீதிகளைப் புனரமைப்பது தொடர்பில் கருத்துத்தெரிவித்த தவிசாளர், கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளைச்சென்று பார்வையிட்டு அவற்றுக்கான தற்காலிக புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

தற்போது, ஒரு கிராமத்தில் மூன்று கிலோமீற்றருக்கு குறையாமல் அல்லது ஐந்து கிலோமீற்றர் வீதியை எங்களிடம் இருக்கின்ற கனரக வாகனத்தைக்கொண்டு தற்காலிகமாக புனரமைத்து வருகின்றோம்.

குறிப்பாக, உருத்திரபுரம், கிளிநொச்சி நகரப்பகுதி ஆகிய இடங்களில் இதன் புனரமைப்புப்பணிகள் தற்காலிகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்கின்ற கிராமங்களில் இந்த தற்காலிக புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# அனுமதிகள் பெறாது அமைக்கப்படும் வீடுகளின் கட்டுமானப் பணிகளை நிறுத்துக

## ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் தெரிவிப்பு

(கண்டாவளை)


கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்களின் அனுமதிகள் பெறப்படாது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் அமைக்கப்படுகின்ற 29 வீடுகளின் கட்டுமானப் பணிகளையும் உடன் நிறுத்துமாறு கண்டாவளை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளைப் பிரதேசத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் கொத்தணி வீடமைப்பு திட்டத்தின்கீழ் காஞ்சிபுரம் கிராமத்தில் 17 வீடுகளும் குமரபுரம் பகுதியில் 12 வீடுகளும் 14.500 மில்லியன் ரூபா நிதியில் அமைக்கப்பட்டு வருகின்றது.

தலா ஐந்து இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் இவ்வீட்டுத்திட்டத்திற்கான பயனாளிகள் உரிய முறையில் தெரிவுசெய்யப்படாது மக்களை ஏமாற்றியே குறித்த வீட்டுத்திட்டம் வழுங்கப்பட்டிருப்பதாகவும் அதாவது தற்போது மீள்குடியேற்ற அமைச்சினால் 12 இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டுத்திட்டங்களும் 13 இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டுத்திட்டங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த மக்கள் ஏமாற்றப்பட்டு குறித்த வீடுகள் வழங்கப்பட்டு வருவதாக பிரதேச அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இந்நிலையில் அண்மையில் கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டதையடுத்து, இணைத்தலைவர்களான பாராளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், சிவஞானம் சிறிதரன் ஆகியோர் குறித்த வீட்டுத்திட்டம் தொட்பில் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவின் அனுமதி பெறப்பட்டதா? எனக் கேள்வி எழுப்பப்பட்டதையடுத்து அனுமதிகள் பெறப்படவில்லை என தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த பணிகளை உடன் நிறுத்துமாறு ஒருங்கிணைப்புக் குழுவினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)



முறிகண்டி செல்வபுரம் குழந்தையேசு ஆலயத்தில் நேற்று காலை 7.30 மணிக்கு யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை யின் ஆசீர்வாத திருப்பலி ஒப்புகொடுத்தலுடன் திறந்து வைக்கப்பட்டதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்: கண்டாவளை செய்தியாளர்)

# இலவச கட்ராக் சத்திரசிகிச்சை; கிளிநொச்சியில் பதிவுகளை மேற்கொள்க!

(கிளிநொச்சி)

யாழ்.மாவட்ட கட்டளைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் இலவச கண் கட்ராக் சத்திரசிகிச்சை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதால் அவர்களுடன் இணைந்து கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் பயன்பெற ஒழுங்குகள் செய்யப்படவுள்ளன.

இதற்கமைவாக கிளிநொச்சி மாவட்ட முதியோர் பேரவையின் ஒழுங்குபடுத்தலில் பதிவுகளை அனுப்ப வேண்டியுள்ளதால் இதற்கான பதிவுகளை மேற்கொள்ள விரும்புவோர் தங்கள் முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை தலைவர் 077 794 7797, பொருளாளர் 077 288 0839 , உப தலைவர் 077 752 4090 ஆகியோருடன் தொடர்பு கொண்டு உடனடியாகப் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட முதியோர் பேரவையினர் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பிலான விபரங்கள் பதிவு செய்தோருக்கு பின்னர் அறியத்தரப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-254)

# 'சமயங்களினூடாக நல்லிணக்கம் காணல்' மன்னாரில் நடைபெற்ற நிகழ்ச்சித்திட்டம்



(பனிக்கன்குளம்)

தேசிய சமாதான பேரவையால் மாவட்ட ரீதியாக இடம் பெற்று வரும் "சமயங்களினூடாக நல்லிணக்கம் காணல்" எனும் தொனிப் பொருளில் இடம் பெற்று வரும் விசேட நிகழ்ச்சித்திட்டம் நேற்று முன்தினம் மன்னாரில் இடம் பெற்றது.

தேசிய சமாதான பேரவையின் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் "மன்னார் ஊடக உப குழு அணியினர்" ஏற்பாடு செய்த பாடசாலை மட்டத்திலான விவாதப்போட்டி மற்றும் பரிசளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் மாலை மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலையில் இடம் பெற்றது.

இதேவேளை பெண்களை மையப்படுத்தி "தந்தையுமானாள்" எனும் ஆவணப்படமும் வெளியீடு செய்யப்பட்டது.

குறித்த நிகழ்வுக்கு விருந்தினர்களாக மன்னார் பிரதேச செயலாளர் என்.பரமதாசன்.மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி சுகந்தி செபஸ்தியன், மன்னார் நகர சபை உறுப்பினர் யோசப் தர்மன், சித்தி விநாயகர் இந்து தேசிய பாடசாலையின் அதிபர் தனேஸ்வரன், பேசாலை முருகன் கோவில் குருக்கள் மகா சிறி தர்மகுமார குருக்கள் மற்றும் தேசிய சமாதானப் பேரவையின் மாவட்ட இணைப்பாளர், ஒபன் நிறுவனத்தின் இணைப்பாளர் சுதாகரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையில் விவாதப் போட்டிகள் இடம் பெற்றன.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வெற்றிக்கேடயம், சான்றிதழ், பதக்கம் என்பன விருந்தினர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# குழாய்க்கிணற்றை விவசாயிகளின் பயன்பாட்டிற்கு திறந்து விடவேண்டும்

## கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களம்

(கண்டாவளை)

கிளிநொச்சி ஊரியான் பகுதியில் விவசாயிகளின் தேவைக்கென வழங்கப்பட்ட குழாய்க்கிணற்றை கமக்கார அமைப்பைச் சேர்ந்த ஒருவர் தன்னுடைய காணியில் அமைத்தமை முற்றிலும் தவறானது. இதனை பொதுப்பயன்பாட்டிற்கு திறந்து விட வேண்டும் என நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.



இரணைமடுக்குளத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட இபாட் திட்டத்தின் கீழ் விவசாய அமைப்புக்களுக்கான விவசாயக்கிணறுகள் வழங்கப்பட்டன. குறித்த கிணறுகள் விவசாயிகளின் பொதுத்தேவைகளின் கிணறுகளாகவே அமைக்கப்பட்டன.

ஊரியான் கமக்கார அமைப்புக்கு விவசாயிகளின்தேவைக்கென வழங்கப்பட்ட குழாய்க்கிணற்றுக்கான இடங்கள் தெரியப்பட்டு கடந்த 2016 ஆம் ஆண்டு குழாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டன.

இந்நிலையில் இப்பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட இடமொன்றில் கிணற்றை அமைக்காது தன்னுடைய குடியிருப்புக்காணி ஒன்றில் குறித்த கிணற்றை அமைத்துள்ளதுடன், தற்போது அந்தக்கிணற்றை எவரும் பயன்படுத்தமுடியாத நிலையில் வேலியிடப்பட்டிருக்கின்றது.

தற்போது நிலவும் வறட்சியான சூழ்நிலையில் பல்வேறு பகுதிகளிலும் குடிநீர்த் தேவைகள் காணப்படுகின்றன.

அதேவேளை கால்நடைகளுக்கான தண்ணீர் தேவையும் காணப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த கிணற்றை பயன்படுத்தக் கூடிய வகையில் பொதுத்தேவைக்கு திறந்து விடுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பில் நீர்ப்பாசனத்திணைக்களம் தொடர்புகொண்டு கேட்டபோது குறித்த கிணறு இபாட் திட்டத்தின் கீழ் பொதுத் தேவைக்காக அமைக்கப்பட்டதே தவிர தனியொருவரின் தேவைக்காக அமைக்கப்பட்டது அல்ல. எனவே இதனை பொதுமக்களின் பாவனைக்கு திறந்து விடவேண்டும் என்றும் தெரிவித்துள்ளது. (2-315)

# 13 வருட உத்தரவாத கல்வி நிகழ்ச்சித்திட்டப் பிரவேசம்

## 13 Years Guaranteed Education Programme

## G.C.E. A/L Vocational Stream க.பொ.த. உயர்தர தொழிற் கல்விப் பிரிவு

**13 வருட உத்தரவாத கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் 2 ஆம் கட்டம் இன்று நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்படுவதை முன்னிட்டு இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

இலங்கையின் கல்வி வரலாற்றிலே ஒரு புரட்சிகரமான சிந்தனையாக கருதப்படுவது 13 வருட உத்தரவாத கல்வி நிகழ்ச்சித்திட்டம். க.பொ.த. உயர்தர தொழிற் கல்விப் பிரிவின் அறிமுகமாகும்.

கல்வி அமைச்சினால் இலங்கையின் அனைத்து மாணவர்களினதும் கல்வி உரிமையை பாதுகாத்தல் மற்றும் திறன்களை விருத்தி செய்யும் நோக்கிலான சாதாரண தரப் பரீட்சையின் வெற்றி தோல்வியை பொருட்படுத்தாது உள்வாங்கப்படக்கூடிய புதிய தொழில்முறைப் பாடத்துறை அறிமுகத்தினூடாக மாணவர்களிடமிருந்து பின்வரும் ஆற்றல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1. அறிவு, திறன், மனப்பாங்கு அபிவிருத்தி
2. தொழில்நுட்ப, தொழில்முறை மற்றும் சமூகத்திறன்களின் மேம்பாடு
3. சுய அபிமானம் மற்றும் ஆளுமை அபிவிருத்தி

என்பவற்றினுடனான வெற்றிகரமான இலங்கைக் குடிமகனாக உலகிற்கு கையளித்தலாகும்.

அபிவிருத்தி அடைந்த நாடுகள் அபிவிருத்தி அடைந்து வருகின்ற பல நாடுகளில் தொழில் முறைக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு அனைவரும் பல வழிகளினூடாக பட்டம் பெறும் வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதனைப் பின்பற்றியே இலங்கை கல்வி வரலாற்றிலும் புதிய திருப்பு முனையாக இப்பாட அறிமுகம் நோக்கப்படுகின்றது. இது மாணவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைவதோடு கல்வியில் தோல்வியடைந்தோர் என்று இல்லாமல் எல்லோரும் வாழ்வில் வெற்றி பெற்றவர்களாகவும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்பவர்களாகவும் உருவாக்குவதாகும். அத்தோடு மாணவர்களின் வேலையின்மை தொடர்பான பல பிரச்சினைகளுக்கு தீர்வாகவும் இப்பாட அறிமுகம் அமைகின்றது எனலாம்.

### 13 வருட உத்தரவாதப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்டம்

எல்லாப் பாடசாலை மாணவர்களுக்கும் தரம் 1 தொடக்கம் தரம் 13 வரைக்கும் தொடர்ச்சியாக முறை சார்ந்த பாடசாலைக் கல்வியைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் கல்வி அமைச்சினால் 13 வருட உத்தரவாதப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய அனைத்து மாணவர்களையும் சித்தியடைந்தமை மற்றும் சித்தியடையாமை குறித்து கவனத்திற் கொள்ளாது அனைவரையும் உள்வாங்குதல், இப்பாடநெறியின் நோக்கமாகும்.

எதிர்கால சவால்களை வெற்றி கொள்ள தொழில்முறைக் கல்வியினை பெற்றுக்கொடுத்தல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்திற்காக தேசிய ரீதியில் 42 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அவற்றில் 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

க.பொ.த. உயர்தர பாடத்துறைப் பிரிவுகளுக்குரித்தாக சுற்றுநிருபம் இல. 2016/13 குறிப்பிடப்பட்ட பாடத்துறை 06 ஆகும். மேலதிகமாக தொழின்முறை கல்வித்துறை 7 ஆவது பாடத்துறை பிரிவாக அறிமுகப்படுத்தப்படவுள்ளது. அவையாவன,

- கலைப்பிரிவு
- வர்த்தகப் பிரிவு
- விஞ்ஞானப்பிரிவு:- உயிரியல் விஞ்ஞான பிரிவு, பௌதிக விஞ்ஞான பிரிவு
- தொழில்நுட்ப பிரிவு:- உயிர் முறைமைகள் பிரிவு, பொறியியல் பிரிவு
- தொழிற் கல்விப் பிரிவு

### தொழிற் கல்விப் பிரிவு

இப்பாடத்துறை 3 பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது.

1. பொதுப்பாடத்துறை (General Components)
2. பிரயோக விடயத்துறை (Applied Subject-Vocational Area)
3. நிறுவனஞ்சார் தொழிற் பயிற்சி (Industrial Training)

1. பொதுப்பாடத்துறை (General Components) (தரம் - 12 1 ஆம் தவணை)

பின்வரும் பாடங்களை எல்லா மாணவர்களும் கட்டாயம் கற்க வேண்டும்.

| இல | பொதுப்பாடத்துறை | அலகு எண்ணிக்கை | மணித்தியால அளவு |
|---|---|---|---|
| 1 | முதலாம் மொழி (சிங்களம்/தமிழ்) | 10 | 40 |
| 2 | பிரயோக ஆங்கிலம் மற்றும் | 10 | 60 |
| 3 | தொடர்பாடல்திறன் | 04 | 40 |
| 4 | அழகியல் நயப்பு | 07 | 60 |
| 5 | தகவல் தொடர்பாடல் | 08 | 40 |
| 6 | தொழில்நுட்பத்திறன் பிரஜைத்துவத்துக்கான திறன் | 07 | 40 |
| 7 | சமூக நன்நிலவுகைக்கு தேவையான | 06 | 40 |
| 8 | சுகாதார மற்றும் வாழ்க்கைத் திறன்கள் முயற்சியாண்மை திறன் | - | 30 |
| 9 | விளையாட்டு மற்றும் ஏனைய பாட இணை செயற்பாடுகள் தொழில் வழிகாட்டல்வேலைத்திட்டம் | - | 60 |

இவை 350 மணித்தியாலக் கற்கைநெறியாகும்.

2. பிரயோகப் பாடங்கள் (Applied Subject- Vocational Area) (தரம் -12, 2 ஆம், 3 ஆம் தவணை)

தரம் -12 கல்வி கற்கும் மாணவர்கள் இரண்டாம், மூன்றாம் தவணைகளுக்காக பிரயோக பாடங்கள் மூன்றினை தெரிவு செய்து கொள்ள வேண்டும்.

ஒரு பாடசாலைத் தவணையில் பாடம் ஒன்றிற்கு 100 மணித்தியாலயம் என்ற அடிப்படையில் பாடத்திற்கும் 300 மணித்தியாலம் ஒதுக்கப்படும்.

1. பிள்ளை உளவியல் மற்றும் நலன் பேணல்
2. சுகாதாரம் மற்றும் சமூக நலன்பேணல்
3. உடற்கல்வி மற்றும் விளையாட்டு
4. அரங்காற்றல் கலைகள்
5. நிகழ்ச்சி முகாமைத்துவம்
6. கலையும் கைப்பணியும்
7. உள்ளக வடிவமைப்பு
8. புதுப்பாணி வடிவமைப்பு
9. கிராபிக் வடிவமைப்பு
10. கலையும் வடிவமைப்பும்
11. நிலத்தோற்ற வடிவமைப்பு
12. பிரயோக தோட்டக்கலை கற்கைகள்
13. கால்நடை உற்பத்தி தொழில்நுட்பக் கற்கைகள்
14. உணவு தயாரிப்பு தொழில்நுட்பக் கற்கைகள்
15. நீரியல் வள தொழில்நுட்பக் கற்கைகள்
16. பெருந்தோட்ட உற்பத்தி தொழில்நுட்ப கற்கைகள்
17. நிர்மாண தொழில்நுட்பம்
18. தானியங்கி இயந்திர தொழில்நுட்ப கற்கைகள்
19. மின்மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்ப கற்கைகள்
20. புடவை மற்றும் ஆடைத்தொழில்நுட்ப கற்கைகள்
21. உலோக நிர்மாண தொழில்நுட்பக் கற்கைகள்
22. அலுமினிய கட்டுமான தொழில் நுட்ப கற்கைகள்
23. மென்பொருள் விருத்தி
24. இணையத்தள வடிவமைப்பு
25. உல்லாசப் பயணம் மற்றும் விருந்தோம்பல்
26. சுற்றாடல் கற்கைகள்

3. நிறுவனஞ்சார் தொழில் பயிற்சி (Industrial Training) (தரம் 13, 1 ஆம் 2 ஆம் 3 ஆம் தவணை)

- தரம் 12 தெரிவு செய்த பிரயோக பாடங்கள் மூன்றில் ஒரு பாடத்தை மட்டும் 13 ஆம் தரத்தில் தெரிவு செய்து கற்கையை தொடர முடியும்.
- இப்பாடமானது பின்வருமாறு வகைப்படுத்தப்படும்.

1. பாடசாலையில் கற்க வேண்டிய மணித்தியாலயம்
2. தொழில்முறை பயிற்சி பெற்றுக்கொள்ளும் மணித்தியாலயம்
3. அனுப்ப வேண்டிய நிறுவனம்.

### தொழிற் கல்விப் பிரிவின் வளர்ச்சிப் போக்கு

சகல பிள்ளைகளுக்கும் 13 வருட கல்வியினை பெற்றுக் கொடுப்பதை உறுதிப்படுத்தல்

க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களுக்கு கல்வி வசதியினை பெற்றுக் கொடுத்தல்.

இப்பாடத்துறை மூன்று கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

### முதலாம் கட்டம் (Pilot Project stage-1)

2017 ஆண்டில் ஒக்டோபர் மாத முன்னோடி செயற்றிட்டத்தின் முதலாம் கட்டம் 42 பாடசாலைகளில் நடைமுறைப்படுத் தப்பட்டன.

முதலாம் கட்டத்தில் 2017 ஆம் ஆண்டு நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 42 பாடசாலைகளில் வடமாகாணத்தில் 5 பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டன. அவையாவன,

1. யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி
2. கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி
3. மு/வித்தியானந்தா கல்லூரி
4. மன்/சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி
5. வ/காமினி ம.வி. வவுனியா

முதலாம் கட்டத்தில் நடைமுறைப் படுத்தப்பட்ட 42 பாடசாலைகள் விபரம்

### இரண்டாம் கட்டம் (Pilot Project stage-2)

2018 ஆம் ஆண்டு ஆரம்

| இல | மாகாணம் | பாடசாலையின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மேல் மாகாணம் | 6 |
| 2 | வடமேல் மாகாணம் | 4 |
| 3 | ஊவா மாகாணம் | 5 |
| 4 | தென் மாகாணம் | 3 |
| 5 | வடமத்திய மாகாணம் | 2 |
| 6 | சப்ரகமுவ மாகாணம் | 2 |
| 7 | மத்திய மாகாணம் | 6 |
| 8 | வடமாகாணம் | 5 |
| 9 | கிழக்கு மாகாணம் | 9 |
| | | 42 |

பிக்கப்படவுள்ள இரண்டாம் கட்டத்தில் 155 பாடசாலைகளில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இவற்றில் 17 பாடசாலைகள் வடமாகாணத்தைச் சேர்ந்தவை. அவற்றின் விபரம் பின்வருமாறு,

இரண்டாம் கட்டம் 2018 மே மாதம் மேலும் 137 பாடசாலைகளில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

1. யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
2. யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்
3. யா/வேலணை மத்திய மகா வித்தியாலயம்
4. யா/மட்டுவில் மகா வித்தியாலயம்
5. யா/நெல்லியடி மத்திய கல்லூரி
6. யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி
7. கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்
8. கிளி/கனகபுரம் வித்தியாலயம்
9. மு/விஸ்வமடு மகா வித்தியாலயம்
10. மு/சம்பத்நுவர மகா வித்தியாலயம்
11. மு/வள்ளிபுனம் J.H.S
12. மு/மல்லாவி மத்திய கல்லூரி
13. மன்/வட்டக்கண்டல் G.T.M.V
14. மன்/அல் அசார் மகா வித்தியாலயம்
15. மன்/பரிகாரிகண்டல் G.T.M.V
16. வவு/ஒலுமடு மகா வித்தியாலயம்
17. வவு/செட்டிக்குளம் மகா வித்தியாலயம்

2ஆம் கட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை 155 ஆகும்.

### மூன்றாம் கட்டம் (Pilot Project Stage-3)

| இல | மாகாணம் | பாடசாலையின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மேல் மாகாணம் | 17 |
| 2 | ஊவா மாகாணம் | 18 |
| 3 | தென்மாகாணம் | 13 |
| 4 | வடமேல் மாகாணம் | 12 |
| 5 | வடமாகாணம் | 16 |
| 6 | வடமத்திய மாகாணம் | 12 |
| 7 | மத்திய மாகாணம் | 20 |
| 8 | கிழக்கு மாகாணம் | 20 |
| 9 | சப்ரகமுவ மாகாணம் | 9 |

மூன்றாம் கட்டத்தில் ஒரு கோட்டத்திற்கு ஆகக் குறைந்தது ஒரு பாடசாலை என்ற அடிப்படையில் கோட்டத்தின் தேவைக்கேற்ப பாடசாலைகள் தீர்மானிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டில் இருந்து தொழில் முறைக் கல்வித் துறையில் எல்லா மாணவர்களும் கற்பதற்கான வாய்ப்புக்கள் கல்வி அமைச்சினால் ஏற்படுத்தப்படவுள்ளது.

இப் பாடநெறியில் இரண்டாம் கட்டத்தில் கற்கக் கூடியவர்கள் 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் க.பொ.த(சா/த)பரீட்சையில் தோற்றி பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களுக்குஅரியவாய்ப்பு இம்மாணவர்களுக்கு புதிதாக உருவாக்கப்பட்ட தொழிற் பாடத்துறையூடாக தொழிற் பயிற்சி நெறியினைப் பயின்று NVQ7 சான்றிதழ் பெற்று பல்கலைக்கழகத்தில்பிரவேசிப்பதற்கு அரிய வாய்ப்புள்ளது.

பிலிப்பைன்ஸ், தாய்வான், தென் கொரியா போன்ற நாடுகளில் மாணவர்கள் பாடசாலையில் கற்றுக் கொள்கின்ற அதே சந்தர்ப்பத்தில் தொழிற் பயிற்சி பாடநெறி களை பயின்று இறுதியில் தமக்கு வேண்டிய துறைகளை தெரிவு செய்து வாழ்வு வெற்றி பெறுவதற்கு ஏற்ற வகையிலான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### கற்றல் கற்பித்தல் முறையியல்

இம் மாணவர்கள் வகுப்பறைகள் Smart Class Room திறன் வகுப்பறைகளாக நவீன கற்றல் கற்பித்தல் சாதனங்கள் கொண்டதாக அதாவது உயர்வேக இணைய இணைப்புடன் கூடிய கணனிகளும், விளையாட்டு உபகரணங்கள், ஆலோசனை வழிகாட்டல் அலகு, நூலகம், செயன்முறைகளுக்கானஉபகரணங்கள்என்ற வகையில் பாடவிதானம், இணை பாடவிதானம் கற்பிக்கப்படுகின்றது.

(11 ஆம் பக்கம் பார்க்க)

# 13 வருட உத்தரவாத ...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் தேசிய கல்வி நிறுவகத்தினால் பயிற்சியளிக்கப்பட்டு செயற்பாடு சார்ந்த வகையில் மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களையும் ஆளுமைகளையும் வெளிக்கொண்டு வரும் வகையில் கற்பித்து வருகின்றனர். இத் துறையில் கற்பிக்கும் மாணவர்கள் செயன்முறை சார்ந்த வகையில் ஆர்வத்துடன் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**• க.பொ.த(சா/த) பரீட்சை சித்தியடைந்த மாணவர்களுக்கான கல்வி வாய்ப்புக்கள்**

பாடசாலை க.பொ.த.(உ/த) கற்றல்→

பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் வாய்ப்பு, தேசிய கல்வியியற் கல்லூரிகளில் கற்கும் வாய்ப்பு→

பட்டம்பெறுதல், டிப்ளோமா சான்றிதழ் - பெறல்→

வேலை உலகிற்குள் நுழைதல்

**• க.பொ.த(சா/த) பரீட்சை சித்தியடையாத மாணவர்களுக்கான கல்வி வாய்ப்புக்கள்**

க.பொ.த(சா/த) சித்தியின்மை→

பாடசாலையில் 13 வருட உத்தரவாதப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்டம், NVQ 4 சான்றிதழ் பெறல்→

தொழில்நுட்பவியற் கல்லூரி பல்கலைக்கழக கல்லூரியில் கற்கும் வாய்ப்பு (NVQ 5-NVQ 6 வரை)→

தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகத்தில் கற்கும் வாய்ப்பு NVQ-7 பட்டச் சான்றிதழ் பெறல், வேலை உலகிற்குள் நுழைதல்.

இக் கட்டமைப்பிலே மாணவர்கள் 13 வருட உத்தரவாதப்படுத்தப்பட்ட கல்வியில் கற்கும் போதே வேலை உலகுடன் தொடர்பு கொள்கின்றனர். இதனால் இவர்கள் வருமானம் பெறுவதோடு பொருளாதார அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்கின்றனர்.

தற்போது இலங்கையில் தொழிலொன்றில் பிரவேசிக்கும் போது தேசிய மற்றும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (சாதாரண தரம்)

2. கல்வி பொதுத் தராதரப் பத்திரம் (உயர்தரம்)

3. பட்டப்படிப்புச் சான்றிதழ்கள்

என்பன அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டது போன்று இவற்றுக்கு மேலாக தற்போது மேற்கூறப்பட்ட தகைமைக்கு ஈடாக தேசிய தொழிற்றகைமை சான்றிதழ் (NVQ) National Vocational Quali fication அங்கீகாரம் பெற்ற சான்றிதழாக காணப்படுவதால் இதனூடாகவும் ஒரு மாணவன் பட்டம் பெற முடியும்.

தொழில் மற்றும் தொழில் பயிற்சி அமைச்சின் வழி காட்டலின் படி பின்வரும் நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து தொழிற்றகைமைச் சான்றிதழைத் (NVQ) தயாரித்துள்ளன.

1. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு.

2. தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனம்.

3. திறன் விருத்திச் செயற்றிட்டம்.

**NVQ சான்றிதழைப் பெற்றுக் கொள்ளக்கூடிய முறைகள்**

1. இச் சான்றிதழை வழங்கும் பின்வரும் நிறுவனங்களில் விரும்பிய பாடநெறியைப் பயின்று ஒரு NVQ சான்றிதழைப் பெற்றுக் கொள்ளலாம்.

2. முறைசாராக் கல்விப் பிரிவு

3. தொழிற் பயிற்சி அதிகாரசபை - VTA

4. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் - NYSC

5. தேசிய பயிற்றுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபை - NAITA

6. தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்றுவித்தல் திணைக்களத்தின் கீழுள்ள தொழில்நுட்பவியற் கல்லூரிகள்

7. பல்கலைக்கழக கல்லூரிகள்

ஏதேனும் ஒரு துறையில் நீண்ட காலமாக ஒரு தொழிலில் ஈடுபட்டிருந்து அது தொடர்பான திறன் இருப்பினும் அதை உறுதிப்படுத்தவும் அந்தந்தத் துறையில் உயர்தகைமை பெறவும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழொன்றைச் சமர்ப்பிக்க முடியாத சந்தர்ப்பத்தில் மேற்குறிப்பிட்ட ஒரு நிறுவனத்தில் தமது திறமைக்கு ஏற்ற ஒரு தொழிற்றகைமைச் (NVQ) சான்றிதழ் பெற்றுக்கொள்ளலாம்.

அங்கு ஒருவரிடம் காணப்படும் ஆற்றல்களைப் பரீட்சிப்பதற்கான ஒரு பரிசோதனைக்கு உட்படுத்தி அதில் திறமையை உறுதிப்படுத்திய பின் அதற்குப் பொருத்தமான மட்டத்திலான NVQ சான்றிதழ் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு வழங்கப்படும் சான்றிதழ் RPL (Recognition of prior Learning) முறை எனப்படும். நிபுணத்துவத்தைப் பரீட்சிக்கும்போது குறிப்பிட்ட துறையில் நிபுணத்துவம் பெற்றவர்கள் குறித்த இடத்திற்கு அழைக்கப்பட்டு பரீட்சித்துப் பார்த்தல் இடம்பெறும்.

**தேசிய தொழில்சார் தகைமை National Vocational Qualification (NVQ)**

தேசிய தொழில்சார் தகைமை என்பது ஒரே வர்க்க தொழிலாளர்களுக்கிடையே உள்ள தொழிற்றகைமை ஏற்றத்தாழ்வை சீர்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட தேசிய தொழிற்றகைமை ஆகும்.

NVQ வரலாற்றுக் கால கட்டங்களாக பின்வருவனவற்றை நோக்கலாம்.

• NVQ முதன் முதலில் பிரித்தானியாவில் ஆரம்பிக்கப்பட்டது. அதாவது 1986 ஆம் ஆண்டு தேசிய தொழில்சார் தகைமைகள் அமுல் படுத்தப்பட்டது.

• 1988 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் ஆரம்பிக்கப் பட்டது.

• அதனைத் தொடர்ந்து நியூசிலாந்து, மலேசியா, சிங்கப்பூரில் NVQ சான்றிதழ் வழங்கும் நடைமுறைகள் பின்பற்றப்பட்டது.

• 2004-2005 ஆம் ஆண்டு இலங்கையில் ஆரம் பிக்கப்பட்டு இன்று கல்வி அமைச்சின் முறைசாராக் கல்விப்பிரிவினூடாக NVQ- 3 சான்றிதழ் வழங்கப்பட்டு வருகின்றன.

• NVQ சான்றிதழை வழங்கக்கூடிய அதிகாரமுடைய நிறுவனமாக மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழு Tertiary and Vocational Education Commission ஆனது திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைக் கைத்தொழில் பயிற்சி அமைச்சின் கீழ் இயங்கி வருகின்றது.

• TVEC எனப் பிரபல்யமாக தெரிந்த மூன்றாம் நிலைக் கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழு 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை தொழிற் கல்வி சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1999 ஆண்டின் 50 ஆம் இலக்க மூன்றாம் நிலை தொழில் கல்விச் சட்டத்தின் கீழ் ஒரு நியதிச்சட்ட அமைப்பாக தாபிக்கப்பட்டது.

**NVQ நன்மைகள்**

• தொழிற்பயிற்சிகளையும் தொழிற்சந்தையையும் ஒன்றிணைத்தல்.

• சான்றிதழ்களை இனங்காணல் மற்றும் ஒப்பிடல் இலகுவானது. (Certificate) தொழில் வழங்குநர்கள் இலகுவாக தொழிலாளர்களை இனங்காணல். (Certificate)

• பயிற்சி வழங்கும் நிறுவனங்கள் / முறைகள் என்பவற்றை ஒத்த விதத்தில் இருக்கச் செய்தல்.

• சர்வதேச அங்கீகரிப்பு

• தேசிய, சர்வதேச இலங்கைத் தொழிலாளர்களின் இடம் பெயர்வாற்றல்.

• முன்கற்றலுக்கான அங்கீகாரத்தை வழங்குகிறது.

**எவ்வாறு வசதியாக்கப்படுகிறது.**

• தொழிற்சந்தைக்குரிய தொழிற்பயிற்சிகள் தெரிவு செய்யப்படுதல்.

• தேர்ச்சிக்கான திறன்களும் அதற்கான நியமங்களும் கைத்தொழிற்சாலைகளிலிருந்து பெறப்படுதல்.

• தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட பயிற்சி முறைமை (CBT) பின்பற்றப்படல்.

• தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு முறைமை.


• பயிற்சி வழங்கும் நிறுவனங்களை பதிவு செய்து பயிற்சிநெறிகளுக்கான அங்கீகாரத்தை வழங்குதல்.

தொகுத்து நோக்குமிடத்து தொழிற்கல்வி பிரிவு அறிமுகமானது இலங்கையில் உள்ள இளைஞர்களுக்கு ஒரு வரமாகும். ஏனெனில் க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் சித்தியடைய தவறியவர்கள் இத்துறையில் இணைவதன் மூலம் தொழிற்றுறை சார்ந்த வகையில் வருமானத்தை பெறுவதோடு பட்டம் பெற்று தமக்கும் தமது தாய் நாட்டிற்கும் பெருமை சேர்ப்பதோடு பொருளாதார அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்ய முடியும்.

இதனை நாம் அனைவரும் சரியான முறையில் பயன்படுத்திப் பயன்பெறுவோம்.

த.சிவகுமார்
உதவிக்கல்விப் பணிப்பாளர்
வலயக் கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம்.

## க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை நிறைவு





# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 29.01.1941
மறைவு: 21.04.2018
அமரர்.

**பொன்னையா சுந்தரலிங்கம்**

அன்புள்ளம் கொண்ட ஆருயிரே
அனைவரையும் அரவணைத்த
உன்னத உறவே
உமைப்பிரிந்து துடிக்கின்றேன்
உங்கள் முகம் காண
ஏங்குகின்றேன்



கோவிற்கடவை,
துன்னாலை மத்தி, கரவெட்டி.

மனைவி

(3967)

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 31 08 1937
மறைவு 21 05 2017

அமரர் திருமதி
**சின்னையா பொன்னு**



அம்மா இன்றுடன் நான்
உங்களை இழந்து
ஓராண்டு ஆகிவிட்டது.
திரும்பும் இடமெல்லாம்
ஒருசில பசுத்தோல் போர்த்த
புலிகளால் உருவாக்கி
விடப்பட்ட எதிரிகளுடன்
நிரூபிக்க முடியாத இருபத்து
நான்கு மணி நேர சித்திர
வதைகளுடன் நீதி கேட்க
இடமின்றி உங்களுடன் நான்
வந்து சேரும் நாளுக்காக
காத்திருக்கின்றேன்.
உங்கள் ஆத்மா சாந்தி
யடைய இறைவன் அருள்
புரிவாராக

இப்படிக்கு அன்பு மகள்

(41-2664)




# எடியூரப்பாவின் இராஜினாமா ஜனநாயகத்துக்கு கிடைத்த வெற்றி

## மம்தா பானர்ஜி, சந்திரபாபு நாயுடு கருத்து



(கொல்கத்தா)

சட்டசபையில் பலப்பரீட்சையை சந்திக்காமல் எடியூரப்பா இராஜினாமா செய்தது ஜனநாயகத்துக்கு கிடைத்த வெற்றி என்று மம்தா பானர்ஜி, சந்திரபாபு நாயுடு ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

கர்நாடக சட்டசபையில் தனக்கு பெரும்பான்மை இல்லாத நிலையில், பலப்பரீட்சையை சந்திக்காமல் எடியூரப்பா முதலமைச்சர் பதவியிலிருந்து நேற்று முன்தினம் இராஜினாமா செய்தார்.

இதற்காக மேற்கு வங்காள முதலமைச்சர் மம்தா பானர்ஜி, ஜனதாதளம் (எஸ்) கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான தேவ கவுடாவுக்கு பாராட்டு தெரிவித்து உள்ளார்.

அவர் தனது சமூக ஊடக பதிவில்,

"ஜனநாயகம் வென்றது. கர்நாடகாவை வாழ்த்துகிறேன். தேவ கவுடா, குமாரசாமி, காங்கிரஸ் மற்றும் அனைவருக்கும் பாராட்டுகள். இது பிராந்திய முன்னணிக்கு கிடைத்த வெற்றியாகும்" என்று குறிப்பட்டு உள்ளார்.

ஆந்திர முதலமைச்சர்



சந்திரபாபு நாயுடு, விஜயவாடா நகரில் ஒரு நிகழ்ச்சியில் பேசும்போது, "கர்நாடகாவில் ஆட்சியை கைப்பற்ற பா.ஜனதா ஜனநாயக நெறிமுறைகளை மீறி செயற்பட்டது.

ஆளுநர் பதவி தவறாக பயன்படுத்தப்பட்டது. எடியூரப்பாவின் பதவி விலகல் மூலம் பிரதமர் மோடியும், அமித்ஷாவும் ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்கி விட்டனர். இப்போது இந்தியா மகிழ்ச்சியாக இருக்கிறது என்றார்.

அவர் மேலும் கூறுகையில், கர்நாடகாவிலும், தமிழ்நாட்டிலும் ஆளுநர் பத்வி தவறாக பயன்படுத்தப்படுவது வருத்தமாக உள்ளது. தமிழ்நாட்டில் அரசியல் அமைப்பு முறையை பா.ஜனதா சீரழித்துவிட்டது.

அதே முயற்சியை கர்நாடகாவிலும் கையாண்டது. முன்னேற்றம் அடைந்து வரும் மாநிலங்களை மத்திய அரசு பலவீனப்படுத்தி வருகிறது. கர்நாடகாவில் பா.ஜனதாவின் திட்டம் நிறைவேறி இருந்தால் அடுத்து ஆந்திராவைத்தான் குறிவைத்திருப்பார்கள் என்றும் சாடினார். (7)

# கர்நாடகாவில் புனிதமில்லை காஷ்மீரில் மட்டும் புனிதமா?

## பா.ஜ.கவிடம் உமர் அப்துல்லா கேள்வி



(ஸ்ரீநகர்)

காங்கிரஸ் - ம.ஜ.த. கூட்டணி புனிதமில்லாதது என பா.ஜ.கவினர் விமர்சித்து வரும் நிலையில், காஷ்மீரில் பா.ஜ.க-பி.டி.பி. கூட்டணி மட்டும் புனித மானதா? என அம்மாநில முன்னாள் முதல்வர் உமர் அப்துல்லா கேள்வி எழுப்பியுள்ளார்.

கர்நாடகாவில் போதிய பெரும்பான்மையை நிரூபிக்க முடியாததால் முதலமைச்சர் எடியூரப்பா தனது பதவியை நேற்று முன்தினம் இராஜினாமா செய்தார். காங்கிரஸ் - ம.ஜ.த. கூட்டணி ஆட்சியமைக்க உள்ளது. ம.ஜ.த. தலைவர் குமாரசாமி இன்று முதலமைச்சராக பதவியேற்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், காங்கிரஸ் - ம.ஜ.த. கூட்டணியை புனிதமில்லாத கூட்டணி என பா.ஜ.க. தலைவர்கள் விமர்சித்து வந்தனர். இதற்கு தனது டுவிட்டர் பக்கத்தில் பதிலடி கொடுத்துள்ள காஷ்மீர் முன்னாள் முதல்வர் உமர் அப்துல்லா, "எப்போதும் பா.ஜ.கவில் இருந்து ஒருவர் காங்கிரஸ் - ம.ஜ.த. கூட்டணி புனிதமில்லாதது என அழைக்கிறார்.

காஷ் மீரில் பா.ஜ.க. - பி.டி.பி. கூட்டணி எப்படிப் பட்டது என அவர்கள் (பா.ஜ.க.) விளக்கமளித்தால் முன்னே கூறியது சரியாக இருக்கும் என பதிவிட்டுள்ளார். (7)

# அமெரிக்காவுடன் ...

# தவறினால் வடகொரிய...

## ட்ரம்ப் எச்...

(வோஷிங்டன்)

வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் அஉன் அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்யாவிடில் அழிவை சந்திக்க வேண்டி வரும் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இரு துருவங்களாக விளங்கி வந்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பும், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னும், சிங்கப்பூரில் அடுத்த மாதம் 12 ஆம் திகதி சந்தித்துப் பேசுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது உலக அரங்கில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் திடீரென வட கொரியாவின் போக்கில் மாறுதல் ஏற்பட்டுள்ளது. அணு ஆயுதங்களை கை விடும் பிரச்சினையில் அமெரிக்கா ஒருதலைப்பட்சமாக தனக்கு மென்மேலும் அழுத்தம் தருவதாக வடகொரியா கருதுகிறது.

இந்த நிலையில் சில தினங்களுக்கு முன் திடீரென வட கொரியா, ட்ரம்புடனான கிம் ஜாங் உன்னின் பேச்சுவார்த்தையை இரத்து



# கோலாகலமாக நடைபெற்ற பிரிட்டன் இளவரசர் ஹரி திருமணம்



இங்கிலாந்து இளவரசர் சார்லஸ் டயானா தம்பதியின் இளையமகன் ஹரி (வயது 33). இவருக்கும் மேகன் மார்கலுக்கும் (வயது36) நேற்று விண்ட்சோர் நகரில் உள்ள புனித ஜார்ஜ் தேவாலயத்தில் திருமணம் நடைபெற்றது. திருமணத்தை ஒட்டி கோலாகலமான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இளவரசர் ஹரியின் பாட்டி ராணி எலிசபெத், அண்ணன் வில்லியம் அவரது மனைவி கேத்மிடில்டன், அந்தம்பதியின் குழந்தைகள் உள்ளிட்ட அரச குடும்பத்தினர் பங்கேற்றனர். இவர்கள் தவிர திருமணவிழாவில் பங்கேற்க 600 விருந்தினர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டது. மேலும் 2,640 பொதுமக்களும் அழைக்கப்பட்டனர். அவர்கள் அங்குள்ள ஒரு திடலில் நின்று திருமணத்தை பார்க்க வசதி செய்யப்பட்டது.

இந்திய நேரப்படி மாலை 5.10 மணியளவில் மணமக்கள் மோதிரம் மாற்றிக்கொண்டனர். ஒருவரையொருவர் முத்தமிட்டு அன்பை பரிமாறிக் கொண்டனர்.

பிரபல தொலைக்காட்சி நிகழ்ச்சி தொகுப்பாளினி ஒப்ரா வின்பிரே மற்றும் இட்ரிஸ் எல்பா ஆகியோர் முதன்முதலாக அந்த இடத்திற்கு வந்த பிரபலங்களில் முக்கியமானவர்கள். பிரபல இந்திய நடிகை பிரியங்கா சோப்ரா திருமணத்தில் கலந்து கொண்டார். (7)

# உலகின் முதல் மிதக்கு... தனது பயணத்தை...

(மொஸ்கோ)

ரஷ்யாவின் உலகின் முதல் மிதக்கும் அணுமின் நிலையம் எரிபொருளை நிரப்பிக்கொண்டு தனது இலக்கை நோக்கிய பயணத்தை தொடங்கியுள்ளது.

ஒரு சரக்கு கப்பலை போல



தோற்றமளிக்கும் உலகின் முதல் மிதக்கும் அணுமின் நிலையத்தை ரஷ்யா உருவாக்கியது. இந்த மிதக்கும் அணுமின் நிலையம் கடந்த மாதம் செயற்பாட்டுக்கு வந்த நிலையில், நேற்று முன்தினம் முர்மன்ஸ்க் நகரில் எரிபொருட்களை நிரப்பிக் கொண்டு தனது இலக்கை நோக்கிய பயணத்தை தொடங்கியது. இந்திய மதிப்பில் 654 கோடி ரூபாய் செலவில் உருவாகியுள்ள இந்த மிதக்கும் அணுமின் நிலையம் 144 மீற்றர் நீளம், 30 மீற்றர் அகலம் கொண்டது. முழுவதும் பனி படர்ந்த ஆர்டிக் வளைவில் உள்ள பெவெக் என்ற நகருக்கு அடுத்தாண்டு இறுதிக்குள் இந்த மிதக்கும் அணுமின் நிலையம் சென்றடையும். அங்குள்ள ஊர் களுக்கு இதன் மூலம் மின்சாரம் அளிக்கப்படவுள்ளது.

மேலும், எண்ணெய் மற்றும் எரிவாயு கிணறுகளுக்கும் இதன் மூலம் மின்சாரம் கிடைக்கும். இது செயற்பாட்டுக்கு வந்துள்ளதால் ரஷ்யாவில் ஏற்கனவே இருக்கும் இரண்டு பழைய மின் நிலையங்களை மூட அரசு திட்டமிட்டுள்ளது. செர்னோபில் அணுமின் நிலைய விபத்தை நினைவு கூர்ந்து இந்த மிதக்கும் அணுமின் நிலையத்திற்கும் பலர் எதிர்ப்புகளை தெரிவித்திருந்தனர்.

சர்வதேச விதிமுறைகளின் படி அணுமின் நிலையம் தயாரிக்கப் பட்டுள்ளதாகவும், சுனாமி போன்ற

# வெளிநாடு

## ...ஒப்பந்தம் செய்ய
## ...யா அழிவை சந்திக்கும்
## ...ச்சரிக்கை



செய்து விடப்போவதாக மிரட்டியது.

ஆனால் இந்தப் பேச்சு வார்த்தையில் ட்ரம்ப் ஆர்வம் காட்டுகிறார். இதுபற்றி நேற்று முன்தினம் அவர் கூறும்போது, "திட்டமிட்டபடி அடுத்த மாதம் 12 ஆம் திகதி (சிங்கப்பூரில்) நடக்க உள்ள உச்சி மாநாட்டுக்கு வேண்டிய வேலைகளை அமெரிக்கா மற்றும் வடகொரியா அதிகாரிகள் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார்கள். கிம் ஜாங் உன் அணு ஆயுதங்களை கைவிட்டால். அவர் ஆட்சி அதிகாரத்தில் தொடர்வார்.

ஆனால் அவர் அமெரிக்காவுடன் அதற்காக ஒப்பந்தம் செய்துகொள்ளாவிடில் வடகொரியா அழிவை சந்திக்க வேண்டிய வரும் என்று தெரிவித்தார்.

மேலும், சந்திப்பு நடந்தால், நடக்கட்டும். அப்படி நடக்காவிட்டால் நாம் அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்போம்.

என்ன நடக்கிறது என்று பார்க்கலாம் என்று எச்சரித்தார். (7)

## டெக்சாஸ் பாடசாலையில் துப்பாக்கிச்சூடு 9 மாணவர்கள் உட்பட 10 பேர் பலி



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் டெக்சாஸ்மாகாணத்தில்பாடசாலை ஒன்றில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 9 மாணவர்கள் உட்பட 10 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள சாண்டா பே பகுதியில் செயற்பட்டு வரும் பாடசாலையில் நேற்று முன்தினம் சில மர்ம நபர்கள் துப்பாக்கியுடன்நுழைந்தனர். அவர்கள் அங்கிருந்த மாணவர்களை நோக்கி துப்பாக்கியால் சரமாரியாக சுட தொடங்கினார்.

இந்தத் தாக்குதல் குறித்து தகவலறிந்த பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று காயமடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்தச் சம்பவத்தில் 9 மாணவர்கள் மற்றும் ஒரு ஆசிரியர் மரணமடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 10 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. அதில் ஒருவர் அந்த பாடசாலையில்பயின்று வரும் மாணவர்ளைவும்கூறப்படுகிறது.

இது தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் டுவிட்டரில் கூறுகையில், டெக்சாசில் இருந்து கிடைக்கும் தகவல்கள் வருத்தம் அளிக்கின்றன என பதிவிட்டுள்ளார். (7)

## வெனிசுலா சிறைக்குள் கலவரம்; பதினொரு பேர் படுகொலை



(கராகஸ்)

வெனிசுலா நாட்டின் லாரா மாநிலத்தில் உள்ள சிறைக்குள் இரு கோஷ்டிகளுக்கு இடையில் வெடித்த மோதலில் 11 பேர் உயிரிழந்தனர்.

வெனிசுலா நாட்டின் லாரா மாநிலத்தில் பெனிக்ஸ் சிறைச்சாலை அமைந்துள்ளது. இந்த சிறைச்சாலையில் அந்நாட்டு ஜனாதிபதிக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ஏராளமான கைதிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த சிறைச்சாலையில் நேற்று முன்தினம் கைதிகளுக்குள் கலவரம் ஏற்பட்டுள்ளது. கைதிகள் ஒருவருக்கொருவர் கொடூரமாக தாக்கியுள்ளனர். கலவரத்தை தடுக்கும் முயற்சியில் காவலர்கள் ஈடுபட்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்நிலையில், இந்த கலவரத்தில் 9 கைதிகள், 2 காவலர்கள் என 11 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பலர் காயமடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை கராகஸ் நகரில் உள்ள சிறைச்சாலையில்ஏற்பட்ட கலவரத்தில் பலர் காயமடைந்தனர். (7)

## கர்நாடக சர்ச்சைக்கு மத்திய அரசு பொறுப்பேற்று பதவி விலக வேண்டும்

### உ.பி முன்னாள் முதலமைச்சர் வலியுறுத்து



(லக்னோ)

கர்நாடக மாநில அரசியிலில் ஏற்பட்ட குழப்பத்துக்கு தார்மீக பொறுப்பேற்று மத்திய அரசு பதவி விலக வேண்டும் என உ.பி. முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ் யாதவ் வலியுறுத்தியுள்ளார்.

கர்நாடக மாநிலத்தில் ஆட்சியை தக்கவைத்துக் கொள்ள சட்டசபையில் நேற்று முன்தினம்போதுமான பெரும்பான்மையை நிரூபிக்க முடியாததால் முதலமைச்சர் எடியூரப்பா தனது முதலமைச்சர் பதவியை இராஜினாமா செய்தார்.

இதையடுத்து, ஏற்கனவே காங்கிரஸ் கட்சி எம்.எல்.ஏக்களின் ஆதரவுடன் சேர்த்து 117 உறுப்பினர்களின் ஆதரவை பெற்ற தன்னை ஆட்சி அமைக்க அழைக்க வேண்டும் என உரிமை கோரி இருந்த குமாரசாமிக்கு நேற்று முன்தினம் மாலை ஆளுநர் அழைப்பு விடுத்தார்.

நேற்று முன்தினம் இரவு, சுமார் 7.15 மணியளவில் ராஜ் பவனுக்கு சென்ற குமாரசாமி ஆளுநர் வஜுபாய் வாலாவை சந்தித்தார். இன்று பிற்பகல் 12.30 மணியளவில் கர்நாடக மாநில முதலமைச் சராக குமாரசாமி பதவி ஏற்பார் என அறிவிப்பு வெளியாகியுள்ளது.


இந்நிலையில், கர்நாடக மாநில அரசியலில் ஏற்பட்ட குழப்பத்துக்கு தார்மீக பொறுப்பேற்று மத்திய அரசு பதவி விலக வேண்டும் என உ.பி. முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ் யாதவ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, தனது டுவிட்டர் பக்கத்தில் கருத்து வெளியிட்டுள்ள அகிலேஷ் யாதவ்,

'இன்று பண அதி காரத்தை மக்களின் தீர்ப்பு வெற்றி கண்டுள்ளது. பணத்தால் எல்லோரையும் விலைக்கு வாங்கி விடலாம் என்று நினைத்தவர்கள், அரசியலை வியாபாரமாக்க விரும்பாதவர்கள் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள்என்று பாடம் கற்றுள்ளனர்.

எனவே, இதற்கு தார்மீக பொறுப்பேற்று மத்திய அரசு பதவி விலக வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார். (7)

## ...தம் அணுமின் நிலையம்
## ...தத் தொடங்கியது



இயற்கை பேரிடரை இது தாங்கும் என கப்பலை தயாரித்த ரஷ்ய அரசு நிறுவனம் உறுதிபடத் தெரிவித்துள்ளது. மிதக்கும் கப்பல் என்றாலும், இதன் உள்ளே கப்பலுக்கு உண்டான எந்த பாகங்களும் கிடையாது.

இழுவைகள் மூலமே இந்த மிதக்கும் அணுமின் நிலையம் இழுத்துச் செல்லப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## ஊழல் குற்றச்சாட்டில் விசாரணை செய்ய முன்னாள் பிரதமர் நஜீப்பிற்கு சம்மன்

(கோலாலம்பூர்)

ஊழல் குற்றச்சாட்டில் விசாரணை நடத்த மலேசிய முன்னாள் பிரதமர் நஜிப் ரசாக் செவ்வாய்க்கிழமை அன்று விசாரணைக்கு நேரில் ஆஜராக வேண்டும் என்று கூறி ஊழல் தடுப்பு அமைப்பு சம்மன் அனுப்பி உள்ளது.

மலேசியாவில் அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில், 60 ஆண்டுகளாக ஆட்சி அதிகாரத்தில் இருந்து வந்த பேரிசன் நஷனல் கூட்டணி (பி.என்.) தோல்வியைத் தழுவியது. எதிர்க்கட்சி கூட்டணி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து நஜிப் ரசாக், பிரதமர் பதவியை இழந்தார்.

மேலும், 92 வயது மகாதீர் முகமது பிரதமர் ஆனார். அதைத் தொடர்ந்து, அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி ஊழல் புரிந்து உள்ளதாக நஜிப் ரசாக் மீது எழுந்த குற்றச்சாட்டு சூடு பிடிக்கத் தொடங்கியது. அவர் நாட்டை விட்டு வெளியேறக்கூடாது என தடை விதிக்கப்பட்டது.

அவரது வீட்டிலும், அவருக்கு சொந்தமான இடங்களிலும் பொலிஸார் அதிரடி சோதனைகள் நடத்தினர். அங்கு இருந்து பணக்கட்டுகள், நகைகள் வைத்து நிரப்பப்பட்ட ஏராளமான கைப்பைகள் கிடைக்கப்பெற்றன.

இந்த நிலையில் அவர் எதிர் வரும் செவ்வாய்க்கிழமை அன்று விசாரணைக்கு நேரில் ஆஜராக வேண்டும் என்று கூறி ஊழல் தடுப்பு அமைப்பு சம்மன் அனுப்பி உள்ளது.

அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்படும். அதைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்படுவாரா என தெரிய வரும். (7)

# தெற்கில் வைரஸ் காய்ச்சலால் 15 சிறுவர்கள் இதுவரை மரணம்!

(கராப்பிட்டிய)

**தென் மாகாணத்தில் பரவும் வைரஸ் காய்ச்சலால் கடந்த சில நாட்களுக்குள் 15 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.**

கராப்பிட்டிய வைத்தியசாலையில் ஐந்து சிறுவர்கள் மரணமடைந்தமை பற்றி விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மருத்துவப் பரிசோதனை நிறுவனமும் கராப்பிட்டிய வைத்தியசாலையும் இணைந்து இந்த விசாரணையை நடத்துகின்றன என்று தென் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜீ.விஜயசூரிய தெரிவித்துள்ளார்.

சிறுவர்களுக்கு மாத்திரமின்றி வயது வந்தவர்களுக்கும் இந்த நோய் ஏற்படலாம். இதனால் பொதுமக்கள் கூடுதலாக நடமாடும் இடங்களில் இருந்து விலகியிருக்குமாறு தென் மாகாண சுகாதாரப் பணிமனை மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

மாத்தறை. அம்பாந்தோட்டை. தங்காலை போன்ற இடங்களில் இருந்து கூடுதலான நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மைத்திரியை தனிமைப்படுத்திவிட்டு மகிந்தவின் சூழ்ச்சியில் அகப்படோம்

## துமிந்த சில்வா தெரிவிப்பு



(கொழும்பு)

அரசாங்கத்தின் தலைமைப் பதவியில் உள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தனிமைப்படுத்திவிட்டு எதிர்க்கட்சியில் அமர்வதற்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி நடவடிக்கை எடுக்காது என அக்கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.


ஒரு கட்சியாக இருந்தே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானங்களை எடுக்கின்றது. தனியான குழுக்கள் தமக்கு வேண்டியவாறு தீர்மானங்களை எடுக்க முடியாது.

ஜனாதிபதியைத் தனிமைப்படுத்தி நாம் அரசாங்கத்திலிருந்து விலகினால், ஐ.தே.கட்சி தனியான அரசாங்கம் அமைத்துக் கொள்ளும்.

மகிந்த ராஜபக்ஷ குழுவின் முடிச்சுக்களுக்கு நாம் அகப்படப் போவதில்லை. எமது இலக்கு ஸ்ரீல.சு.க. யின் ஆட்சியை அமைப்பதாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நல்லிணக்கம் என்ற போர்வையில் பக்கச்சார்பாக செயற்படக்கூடாது

## அரசிற்கு திஸ்ஸ அறிவுரை



(கொழும்பு)

"தேசிய அரசாங்கம் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாகக் கூறி ஒரு தரப்பினருக்கு மாத்திரமே சார்பாகச் செயற்படுகின்றது. துக்க தினத்தை வடக்கு- கிழக்கு மக்கள் மாத்திரம் அனுஷ்டிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ள அரசாங்கம் தெற்கில் உயிர்த்தியாகம் செய்த இராணுவ வீரர்களின் தியாகங்களை மறந்துவிட்டது" என லங்கா சமசமாஜக் கட்சி தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

இறுதி யுத்தத்தின் போது உயிரிழந்தவர்கள் நினைவு கூர்ந்து மே 18ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்ட துக்கதினம் தொடர்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவுபடுத்த மே 18 துக்கநாளாக பிரகட னப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் தெற்கில் யுத்தத்தின் காரணமாக உயிரிழ்ந்தவர்களை நினைவுபடுத்த அரசாங்கம் எவ்வித ஏற்பாடுகளினையும் மேற்கொள்ளவில்லை. நல்லிணக்கத்தினை ஏற்படுத்த வேண்டுமாயின் மே 18 தினத்தினை தேசிய துக்க தினமாக அரசாங்கம் பிரகடனப்படுத்த வேண்டும்.

யுத்தத்தின் போது உயிரிழந்தவர்களை நினைவு கூர்வதில் எவ்வித தவறுகளும் இல்லை. அதனை அரசியல் மயப்படுத்தி தடை செய்யவும் முடியாது என அமைச்சரவையின் இணைப் பேச்சாளர் ராஜித சேனாரட்ன குறிப்பிட்ட கருத்துக்கு தற்போது தென்னிலங்கை அரசியல்வாதிகள் கடும் கண்டனங்களையும், எதிர்ப்புக்களையும் தெரிவித்து வருகின்றனர்.

இவ்விடயத்தினை எதிர்ப்பவர்கள் சற்று சிந்தித்தே செயற்பட வேண்டும். தெற்கில் தற்போது தமிழ் மற்றும் சிங்கள மக்களிடையே நல்லிணக்கம் காணப்பட்டு வருகின்றது. இவ்வாறான எதிர்ப்பு கருத்துக்களின் காரணமாக மீண்டும் தெற்கில் இனப்பிரச்சினைகள் தோற்றம் பெறும். எதிர்ப்பவர்கள் தாம் எதிர்ப்பதற்கான முறையான காரணத்தினை பொது மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டது. ஆனால் இந்த இயக்கத்தின் ஆதரவாளர்கள் இன்றும் உலகில் பல பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களின் அழுத்தங்களின் காரணமாகவே ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையகம் இலங்கை தொடர்பில் தொடர்ந்து போர்க்குற்ற விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது.

இலங்கையில் முற்றாக அழிக்கப்பட்ட ஒரு இயக்கத்தின் நினைவுகள் எதிர்கால சந்ததியினர் மத்தியில் எதிர் விளைவுகளை தோற்றுவிக்கும் என்ற காரணத்தினாலேயே தென்னிலங்கை அரசியல்வாதிகள் மே 18 தினத்தினை எதிர்க்கின்றார்கள். இதில் தேசிய பாதுகாப்பே முதன்மைப்படுத்தப்பட வேண்டும்.

இதனை வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் உட்பட அனைத்து தமிழ் மக்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

நாட்டில் 30 வருட யுத்தம் தோற்றம் பெறுவதற்கு அக்காலக்கட்டத்தில் ஆட்சியில் இருந்த அரசாங்கமே காரணம். தமிழ் மக்களை அரசாங்கத்தில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று லங்கா சமசமாஜ கட்சி எடுத்துரைத்தது. ஆனால் அரசாங்கம் அதனை பொருட்படுத்தாமல் தான்தோன்றித்தனமாகவே செயற்பட்டது. அதன் பெறுபேறே 30 வருட கால கொடிய யுத்தம். நாட்டில் மீண்டும் இது போன்ற யுத்தம் ஏற்பட கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## ஒரு தவறான சேமிப்பு

என்னது? சேமிப்பதில் கூடத் தவறு என்று ஒரு கண்டோட்டம் இருக்கிறதா என்று சற்று வியப்பாக இருக்கிறதா?

இது ஒரு வித்தியாசமான சேமிப்பு. "வா,வா! வசமா என்கிட்ட மாட்டுவே! சேர்த்து வச்சுருக்கேன் உனக்கு. அப்பத் தெரியும் நான் யாருன்னு" என்கிற பாணியில் சிலர் வாய்விட்டுச் சொல்லியோ மனதிற்குள் கறுவிக் கொண்டோ இருப்பார்கள்.

இது ஒரு தவறான பழக்கம். சிறு சிறு சம்பவங்களில் நேர்ந்த அவமானங்களையும் நட்டங்களையும் பெரிதுபடுத்திப் பார்த்துப் பட்டியலிட்டுச் சேர்த்துக் கொண்டே வந்து ஒருநாள் பெரிதாக வெடிப்பார்கள்.

சிலர் இன்னும் மோசம். நன்றாகவே பழிவாங்கி விடுவார்கள்.

சிலபேர் "நான் எதையுமே மனசில வச்சுக்கிறதில்லை. காரணம் மறதி" என்பார்கள். அதற்காகக் கவலைப்படுவார்கள்.

இவர்கள் சில நேரங்களில் நஷ்டப்பட்டாலும் கொஞ்சம் கொடுத்து வைத்தவர்கள்.

மனிதனின் நினைவுப் பகுதி கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து புதுப்புதுப் பகுதிகள் பதிவாவது அவனுக்கு நன்மையைத்தான் செய்கின்றன.

நடந்த துன்பங்களையும் இழைக்கப்பட்ட அநீதிகளையும் ஒரு மனிதன் மறந்து கொண்டே இருந்தால் தான் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்க முடியும். பழைய விடயங்களைப் போட்டு நம்மை வாட்டிக்கொண்டே இருந்தால் புதிய விடயங்கள் எதிலுமே கவனம் செலுத்த முடியாது.

இயற்கையாக இப்படி நினைவுப் பகுதியிலிருந்து தாமாக அழிய முற்படுகிற விடயங்களை அதுவும் எதிர்மறையான உணர்வுகளை மனிதன் தன் பொல்லாக் குணத்தினால் எப்படியாவது நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று போரிடுவது மிகத்தவறான அணுகுமுறை.

முக்கியச் சந்திப்பில் அங்கங்கே பெட்டிகளைக் கழற்றி விடுகிற ரயில் மாதிரித்தான் மனிதர்களும் நடந்து கொள்ள வேண்டும்.

மற்றவர்கள் செய்த நன்மைகளை நினைத்துக் கொண்டால் அவை நெஞ்சுக்கு இதம். கெடுதல்களையே நினைத்துக் கொண்டிருந்தால் அவை பெருஞ் சுமை. வேறு வேலைகள் ஓடா.

மனிதன் நினைவில் வைத்துக்கொள்ள எவ்வளவோ நல்ல விடயங்கள் இருக்கும் போது கண்டவற்றையும் நினைவில் வைத்திருந்து அவற்றைக் கணக்குத் தீர்க்கப் பார்க்கும் தேவையற்ற வேலையைச் செய்வானேன்?

**லேனா தமிழ்வாணன்**





யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரியில் யாழ்.கல்வி வலய செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய் கோட்டக் கல்விப்பணிப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

# போர்க்காலத்தில் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீட்டுக்கான பணியகத்தை உருவாக்கும் சட்டவரைபை வரையும் பணி இறுதிக்கட்டத்தில்

(கொழும்பு)

இழப்பீட்டுக்கான பணியகத்தை உருவாக்குவதற்கு, அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட இழப்பீட்டுச் சட்ட வரைவை வரையும் பணி இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

முன்மொழியப்படும் இந்தச் சட்டத்தின் மூலம், முப்பதாண்டு காலம் வடக்கில் நடந்த போரினால், பாதிக்கப்பட்ட, இலங்கைப் படையினர், பொலிஸார், பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்து இலங்கையர்களும், அவர்கள் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டில் எந்தப் பகுதியில் வாழ்ந்தவர்களானாலும், தமது பாதிப்புகளுக்கு இழப்பீட்டைக் கோர முடியும்.

இந்த சட்டவரைவுக்கு இலங்கை அமைச்சரவை கடந்த மார்ச் 6ஆம் திகதி அங்கீகாரம் அளித்தது.

இந்த வரைவை 'அடிப்படையாகக் கொண்டு, சட்டமூலத்தை வரையுமாறு அரச சட்டவரைஞருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இழப்பீட்டுக்கான பணியகம் கொழும்பில் அமையும் என்று, சட்டவரைவில், முன மொழியப்பட்டுள் ளது.

நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூறக் கூடிய ஐந்து பேர் கொண்ட உறுப்பினர்கள், இந்தப் பணியகத்துக்கு, அரசியலமைப்புச் சபையின் பரிந்துரையின் பேரில் ஜனாதிபதியால்நியமிக்கப்படுவார்கள்.

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களுக்கான இழப்பீடுகள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு ஏற்ற வகையில், தேவையைப் பொறுத்து, பிராந்திய, தற்காலிக, நடமாடும் பணியகங்களையும் அமைக்கும் அதிகாரமும் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# காணாமல் போயிருந்த சீனர் உயிருடன் மீட்பு

(கொழும்பு)

காணாமல் போயிருந்ததாகக் கூறப்பட்ட சீனப் பிரஜை ஒருவர் குழி ஒன்றிலிருந்து 9 நாட்களுக்கு பின்னர் நேற்று முன்தினம் சனிக்கிழமை உயிருடன்மீட்கப்பட்டார்.

அம்பாந்தோட்டை- மாத்தறை அதிவேக வீதியின் அமைப்புக்காக சீனாவிலிருந்து தியகொட பிரதேசத்திற்கு தொழிலாளியாக வந்த 35 வயதுடைய ஜிந்தாவு என்பவரே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளார்.

காணாமற்போயிருந்த குறித்த சீனரைத் தேடும் பணியில் தியகொட பொலிஸாரும் இராணுவத்தினரும் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் பிரதேச வாசிகளின் தகவலுக்கமைய மாத்தறை தியகொட பிரதேசத்தின் தியகொட மலையில் உள்ள குழி ஒன்றினுள் இருந்து உயிருடன் மீட்கப்பட்டார்.

அதன் பின்னர் பொலிஸார் அவரை மாத்தறை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

ஆனால் 9 நாட்கள் இவர் எந்தவிதமரன உணவும் இன்றி குழிக்குள் சிக்கி உயிருடன் மீட்கப்பட்டமையானது ஆச்சரியப்படவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


# மரண அறிவித்தல்

## திருமதி. சகுந்தலா வரதராஜன்

(பிரபல பொருளியல் ஆசான் வரதராஜனின் மனைவி)



வட்டு கிழக்கு வட்டுக் கோட்டையைப் பிறப்பிடமாகவும் 140, பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. சகுந்தலா வரதராஜன் 20.05.2018 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரசுவாமி-சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு.சின்னத்துரை-வரதராஜன் (பிரபல பொருளியல் ஆசான்)னின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை மகேஸ்வரியின் அன்பு மருமகளும், Dr.சாந்திகுமார்(லண்டன்), ராஜசிங்கம் (வட்டுக்கோட்டை), கிரிதரன்(சுண்டுக்குளி) ஆகியோரின் அன்புச்சகோதரியும், பார்த்திபன்(யாழ்.மாநகர சபை உறுப்பினர்), Dr.இளவேணி ஆகியோரின் அன்பு தாயாரும் சிந்துஜா (யாழ்.பல்கலைக்கழக நூலகம்), Dr.அனுஷன் ஆகியோரின் அன்பு மாமியாரும் தேனுஷானின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.05.2018) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் 140, பருத்தித்துறை வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.இல:077 299 9699, 077 293 3142

140, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்

தகவல்,
குடும்பத்தினர்.


# எந்தக் காரணத்துக்காகவும் படையினரை சிறையில் அடைக்கக் கூடாது-கோத்தபாய

(கொழும்பு)



நாட்டிற்கு சேவையாற்றிய யுத்தவீரர்களை எந்த காரணத்திற்காகவும் சிறையில் அடைக்கக் கூடாது என்பதே தனது நிலைப்பாடு என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 30 வருட உள்நாட்டு யுத்தத்தின்போது படையினர் செய்த தியாகங்களை மறக்கக்கூடாது. எனினும் சர்வதேச அழுத்தங்கள் காரணமாகவும் தீங்கிழைக்கும் நோக்கத்துடன் குற்றச்சாட்டுகள் காரணமாகவும் படையினர் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

யுத்த வெற்றி வீரர்கள் பெருமளவில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நாட்டு மக்களை படுகொலை செய்து வாழ்வாதாரத்தை சிதைத்த பயங்கரவாதிகள் சுதந்திரமாக நடமாடும் அதேவேளை நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக தங்கள் உயிரைப் பணயம் வைத்த வீரர்கள் சிறையில் வாடுகின்றனர் எனவும் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர் காணலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)


# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## கந்தப்பு முருகேசு



பிறப்பு: 22.04.1947
இறப்பு: 18.05.2018

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி. வனிதா கஜேந்திரன்
அவர்களின்
பாசமிகு தந்தையார்
அமரர். கந்தப்பு முருகேசு அவர்கள்
கடந்த 18.05.2018இல்
இறைபதமடைந்த செய்தி கேட்டு
அதிர்ச்சியடைந்தோம்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதோடு ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் கழகம், யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.

(2266)

# விழா எடுத்து பிரபல்யம் தேடுவதை விடுத்து இராணுவத்திற்கு நிதியுதவி வழங்குங்கள்

## மைத்திரியை நோக்கி ஐ.தே.க. அமைச்சர் ஹரிசன்



(கொழும்பு)

இராணுவ வீரர் தின நிகழ்வு என பாரியளவில் செலவு செய்து பிரபல்யம் தேடுவதை விடுத்து, அதற்கு செலவழிக்கும் நிதியை இராணுவ வீரர்களுக்கு பெற்றுக் கொடுக்குமாறு அமைச்சர் பி. ஹரிசன் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இராணுவத்தினர் நாட்டுக்காக செய்த தியாகம் ஒரு போதும் மறக்கக் கூடியது அல்ல எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த அரசாங்க காலத்தில் முன்னெடுக்கப்பட்ட யுத்த வெற்றியை நினைவுகூரும் நிகழ்வுகளுக்கு பாரியளவு நிதி செலவிடப்பட்டது. அந்த வீண் விரயத்தையே இந்த அரசாங்கம் குறைத்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# சு.கவின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரியே

## அமரவீர மீண்டும் தெரிவிப்பு




(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவே என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்தார். எதிர்வரும் நாட்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சில பதவிகளில் மாற்றம் செய்யப்படவுள்ளது. இந்தப் பதவி மாற்றங்களானது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினை பாதிக்காது.

எதிர்வரும் 2020ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலிலும் மைத்திரிபால சிறிசேனவே சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் என அவர் தெரிவித்தார். (இ-7)

# சுழிபுரம் - காட்டுப்புலத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கான நினைவேந்தல் நிகழ்வு சுழிபுரம் - காட்டுப் புலத்தில் அருள்தீபம் சனசமூக நிலையத் தலைவர் ஐங்கரன் தலைமையில் நடைபெற்றது.

இறுதி யுத்தத்தின்போது காட்டுப்புலம் மற்றும் பாண்ட வெட்டையைச் சேர்ந்த பலர் முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்டனர்

அவர்களின் நினைவாக அங்கு கடந்த 2010 ஆம் ஆண்டு நினைவுக்கல் ஒன்று நடுகை செய்யப்பட்டது. அந்த இடத்திலேயே நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், வலி. மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களான செ.கிருஸ்ணராசா, சி.இதயகுமாரன் ஆகியோரும் வெண்கரம் செயற்பாட்டாளர் மு.கோமகன் மற்றும் கல்விமான்கள், மாணவர்கள், பிரதேச மக்கள் என நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.

நடுகல்லின் முன்பாக ஒன்றுகூடியவர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (இ-9)









நல்லூர் பிரதேச சபை முன்பாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு இடம் பெற்றது. (படம்:- சோபிகா)

# கயிலாச யாத்திரை

## ஓர் அனுபவப் பகிர்வு 50

பரமசாமி பஞ்சாட்சரம்

1624 ஆம் ஆண்டு நடந்தது என்ன? கோயிலை இடித்த 'டீசா' என்னும் படைத் தளபதி, "திருகோணமலையில் இருக்கும் கோகர்ணத்தில் மூன்று கோயில்கள் உள்ளன. அதிலும் ஒரு கோயிலில் (1200 யார் நீளம் 80 அடி அகலம்) கட்டடம் இருக்கின்றது. இங்கே நான் கோயிலை இடித்துக் கோட்டையைக் கட்டுகையில் பல கல்வெட்டுக்கள் கிடைத்தன. அதிலே இக் கோயிலைக் கட்டியவன் மனுராசன் என்றும் இது பறங்கியரால் அழிக்கப்படும் காலம் வரும் என்றும் அதன் பின் அதைத் திரும்பவும் கட்ட அரசர்கள் இருக்க மாட்டார்கள் என்றும் எழுதப்பட்டிருந்தது" என்றும் அரசனுக்குக் கடிதம் எழுதினான்.

அதற்கு அரசன் பதில் அனுப்பியதாக இல்லை. ஆனால் இச் செய்தியைக் குறிக்கும் ஒரு வெண்பா கோட்டை வாசலின் தூணில் காணப்படுகிறது. வெண்பாவை கீழே பார்க்கவும்

"முன்னே குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப்
பின்னே பறங்கி பிரிக்கவே
மன்னவன் பின்
பொண்ணா ததனை இயற்ற அழித் தேவைத்து
எண்ணாரே பின்னரசர்கள்"

இந்தக் கல்வெட்டின் படி பறங்கியரால் 1624 ஆம் ஆண்டு இடிக்கப்பட்ட கோயில், இலங்கையானது அரசர்கள் இல்லாத சுதந்திர நாடாகிய பின் 1963 ஆம் ஆண்டு மறுபடியும் நிறுவப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

டி கியுறோஸ் எழுதிய



சரித்திரம், கொன்ஸ்டன் டைன் டீசா அரசனக்கு அனுப்பிய கடிதங்கள், பட்டங்கள், அங்கு எடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் ஆகியவற்றில் இருந்தும் பழைய ஏடுகளில் இருந்தும் கோயிலின் அமைப்பைத் தாங்கள் அறியக் கூடியதாக இருக்கின்றது என்றும் திருக்கோணஸ்வர ஆலய பரிபாலன சபை 2014 இல் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஒரு சிறு தேசமாகிய போர்த்துக்கல் பிரமாண்டமான ஒரு சாம்ராச்சியத்தை நிறுவ எத்தனித்தது. வெற்றியும் கண்டது. ஆனால் அது திருகோணமலையைக் கைப்பற்றி எல்லாக் கோயில்களையும் இடித்த காலத்திலிருந்து 15 வருடத்தில் (1939 இல்) தோல்வியுற்றது.

1639 ஆம் ஆண்டு டச்சுக்காரர்கள் திருகோணமலையைக் கைப்பற்றி, டச்சுப் பெயர்களையும் சூட்டினார்கள். அவர்களும் கோயில் இருந்த இடத்திற்கு மக்கள் செல்ல அனுமதி கொடுக்கவில்லை.

1782 ஆம் ஆண்டு பிரித்தானியரும், பிரான்சியரும் திருகோணமலையைக் கைப்பற்றினார்கள். பின்னர் பிரித்தானியர் 1815 ஆம் ஆண்டிலிருந்து - 1948 ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தார்கள். அவர்களும் கோயில் இருந்த இடத்திற்குச் செல்ல ஒருவருக்கும் அனுமதி கொடுக்கவில்லை. அப்படியிருக்க, அங்கு பிரதமக் குருக்களாகப் பணியாற்றியவர் மட்டும் தனக்கு வேறு இடமில்லை என்று சித்தசுவாதீனமற்றவர் போல அங்கேயே படுத்திருந்து, சுவாமிமலைப் பாறையில் செதுக்கப்பட்ட சிவனுக்கும் பிள்ளையாருக்கும் பூசை செய்து வந்தாரென்பதும், அவரைத் தொடர்ந்து ஒருவர் எப்படியோ அங்கு வேலையாளராக உள்விட்டு, 1623 ஆம் ஆண்டிலிருந்து 1963 ஆம் ஆண்டு வரை பூசை செய்து வந்தார்கள் என்பதும் திருவருளின் அற்புதமே.

கோயிலை இடித்த 'கொன்ஸ்டன் டைன் டீசா'விற்குச் சில ஆண்டுகளுக்குப் பின் நோய் ஏற்பட்டதும் தன் மகனைத் திருகோணமலைக்கு அனுப்பினான் என்றும், மகன் சுவாமி மலைக்கு வந்து பாறையிலே செதுக்கி இருந்த சிவபெருமானிடம் தன் தகப்பனாருக்குச் சுகம் வரவேண்டுமென வேண்டி வழிபட்டுச் சென்றதாகவும் அவ்விடத்தில் அதற்குரிய ஒரு ஞாபக சின்னம் இருப்பதாகவும் சொன்னார்கள்.

தெட்சண கயிலாசத்திற்கு ஏற்பட்ட அழிவு இலங்கை, இந்தியா மற்றும் பல நாடுகளிற்கும் பரவியது. இதை அறிந்த சில எழுத்தாளர்கள் கிட்டத்தட்ட 340 வருடங்களாக இக்கோவில் தரைமட்டமாக்கப்பட்டு, மக்கள் செல்ல முடியாமல் இருந்தபடியால் தெட்சண கயிலாசத்தின் சரித்திரத்தை மாற்ற முயன்று பல கட்டுரைகள், புத்தகங்கள் எழுதினார்கள். ஆனால் அவர்களின் முயற்சி வெற்றியளிக்கவில்லை. ஏனென்றால் 1963 ஆம் ஆண்டிலிருந்து தெட்சண கயிலாசம் மறுபடியும் ஓங்கி நிற்கின்றது. ஆனால் அதன் தாக்கம் இன்னும் இருக்கின்றது என்பதை அறியக் கூடியதாக இருக்கின்றது.


(தொடரும்)

### ஊடகவியலாளர் கடத்தல் விவகாரம்

# சபாநாயகரிடம் வாக்குமூலத்தை பதிவு செய்த புலனாய்வுப் பிரிவு

(கொழும்பு)

சிரேஷ்ட ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தப்பட்டு தாக்கிக் காயப்படுத்தியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் சபாநாயகர் கரு ஜெயசூரியவிடம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.



சபாநாயகரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் வைத்து புலனாய்வுப் பிரிவினர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு வாக்குமூலத்தைப் பதிவு செய்துள்ளதாக புலனாய்வுப் பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2008 ஆம் ஆண்டு கீத் நொயர் கடத்தப்பட்டமை தொடர்பில், அன்று அமைச்சராக இருந்த கரு ஜெயசூரிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தெரியப்படுத்தியிருந்தார்.

இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பில் எவ்வாறு அவருக்கு அறியக் கிடைத்தது என்றும், வேறு சில விடயங்கள் குறித்தும் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் குறித்த சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக சபாநாயகரின் அலுவலகத்திற்கு வருவதா? இல்லை வேறு இடத்தில் நடத்துவதற்கு அனுமதி வழங்குமாறு பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் சபாநாயகரிடம் முன்னர் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில் சபாநாயகரின் வாசஸ்தலத்தில் வாக்குமூலம் பதிவு செய்வதற்காக சபாநாயகர் கடந்த வெள்ளிக்கிழமை நேரத்தை ஒதுக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மகிந்தவுடன் சு.க. அதிருப்திக்குழு சந்திப்பு நேற்று இடம்பெறவில்லை

(கொழும்பு)

அரசாங்கத்திலிருந்து வெளியேறிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 பேர்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் குழுவுக்கும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்று இடம்பெறவிருந்த முக்கிய சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளது. சுதந்திரக் கட்சியின் குறித்த குழுவின் சில உறுப்பினர்கள் கொழும்பில் இல்லாததன் காரணமாகவே இந்தச் சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குறித்த சந்திப்பை நாளை மறுதினம் 23ஆம் திகதி நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக சுதந்திரக் கட்சியின் 16 அதிருப்திக் குழுத் தரப்பின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

# ஜூன் 3 நள்ளிரவு முதல் இருநாள் வேலை நிறுத்தம்

## தபால் தொழிற்சங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

ஜூன் 3ஆம் திகதி நள்ளிரவு முதல் இரண்டு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக தபால் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த ஜனவரி மாதம் நடத்தத் தீர்மானித்திருந்த வேலை நிறுத்தப் போராட்டம் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவின் தலையீட்டால் கைவிடப்பட்டது.

இதன்போது வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எவையும் இதுவரை அமைச்சரவைக்குத் தாக்கல் செய்யப்படவில்லை என்று தபால் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

இந் நிலையில் மீண்டும் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாக அச்சங்க பொதுச்செயலாளர் அறிவித்துள்ளார் (இ-7)

# மின்னல் தாக்கி இருவர் உயிரிழப்பு

(வெலிகந்த)

வெலிகந்த பிரதேசத்தில் மின்னல் தாக்கியதில் இருவர் உயிரிழந்துள்ளதாக வெலிகந்த பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இருவரும் நேற்றுக் காலை வயல் வெளியில் வேலைசெய்து கொண்டிருந்த போது மின்னல் தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர்.

சம்பவத்தில் 17 மற்றும் 33 வயதுடைய இருவரே உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வெலிகந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# போலிக் குற்றச்சாட்டு

## மேயர் ரோஸி மறுப்பு



(கொழும்பு)

கொழும்பு மாநகர சபை மேயரின் உத்தியோகபூர்வ இல்லத்தின் மலசலகூடம் விவகாரம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

மேயர் ரோஸி சேனநாயக்கவின் இல்லத்திலுள்ள மலசல கூடங்களை சீர் செய்வதற்காக 57 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எனினும் இந்தக் குற்றச்சாட்டை முழுமையாக மறுக்கும் கொழும்பு மேயர், போலியான குற்றச்சாட்டு எனத் தெரிவித்துள்ளார்.

தனது முழுமையான வீட்டைப் புனரமைப்பு செய்தால் கூட 5.2 மில்லியன் ரூபாவே செலவாகும் என மேயர் தெரிவித்துள்ளார்.

வீட்டிலுள்ள 6 மலசல கூடங்களையும் பழுது பார்ப்பதற்கு 1.4 மில்லியன் மாத்திரமே செலவிட தேவைப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தனது வீடு பண்டைய கால மதிப்பு மிக்க வீடு. அதனை பாதுகாப்பது எனது கடமையாகும் எனவும் கொழும்பு மேயர் ரோஸி சேனாநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது கொழும்பு மேயரின் உத்தியோகபூர்வ வீட்டின் மலசல கூட கட்டமைப்பினை பழுது பார்ப்பதற்காக 57 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டதாக மாநகர, நகர சபை உறுப்பினர் சுமித் பஸ்ஸபெரும தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1419

Search for people, places and things Nagendram Home

### ராம்குமார்

அதிர்ஷ்டங்கள் பல வேளை நம் விரல்களைப் பிடிக்காது போகலாம்...



ஆனால் ஒருவேளையும் முயற்சியை மட்டும் கைவிட்டு விடாதே...!

### ராகவ்

அன்பில்லாமல் பேசும் ஆயிரம் வார்த்தைகளைவிட



உரிமையோடு திட்டும் ஒரு வார்த்தையில்தான் உண்மையான அன்பிருக்கும்...!

### ரகுமான்

என்னதான் பைக் கார்னு சொகுசா போனாலும்



மாட்டுவண்டியில் காற்று வாங்கிக்கொண்டு போகும் சுகம் இதமானது

### ரிந்தியா

பேசுகின்ற வார்த்தைகளைவிட பேசாத மௌனத்திற்கு அதிக அர்த்தம் உண்டு



பேசும் வார்த்தை எல்லோருக்கும் புரியும்...
ஆனால் மௌனம் நம்மை நேசிப்பவர்க்கே புரியும்

### ரிஷி

ஒருவரை முழுமையாக அறியாமல் மனதையோ மானத்தையோ இழந்து விடாதீர்கள்...



பின் கண்கலங்கி நிற்பது மனம் மட்டுமல்ல உங்கள் வாழ்க்கையும் தான்...!

### றியாஸ்

ஒரு வட்டம் போட்டு அதற்குள் வாழ நினைப்பது தவறல்ல




ஆனால் அந்த வட்டம் தான் வாழ்க்கை என்று நினைப்பதுதான் தவறு...!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வைகாசி மாத இராசி பலன்கள்

## 15.05.2018-14.06.2018



## குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்!




விளம்பி வருடம் வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் அஷ்டம ஸ்தானத்தில் தன் சொந்த வீட்டில் பலம் பெற்றிருக்கிறார். அவரோடு இலாபாதிபதி சூரியனும் இணைந்திருக்கிறார். அதேநேரத்தில் தன சப்தமாதிபதியான செவ்வாய், சுக ஸ்தானத்தில் உச்சம் பெற்று சஞ்சரிக்கிறார். எனவே இந்த மாதத்தில் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கொடுக்கல்-வாங்கல்களில் இருந்த தேக்க நிலை மாறும். வாழ்க்கைத் தரம் உயரும். வசதி வாய்ப்புகள் பெருகும். எவை எவையெல்லாம் உங்களுக்குத் தேவைப்படுகின்றதோ அவை அனைத்தும் கிடைக்கும்.

ஜென்ம இராசியில் குரு வக்கிரம் பெற்றுச் சஞ்சரித்தபடியே 5, 7, 9 ஆகிய இடங்களைப் பார்வையிடுகிறார். தொழில் ஸ்தானாதிபதி சந்திரனுடன் புதன் இணைந்து குரு பார்வை பதியும் விதத்தில் 7 ஆம் இடத்தில் இருப்பது யோகம் தான். குரு-சந்திர யோக அடிப்படையில் நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும்.

நம்பிக்கைக்குரியவர்கள் உங்கள் தொழில் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பர். மூத்த குடும்ப உறுப்பினர்களோடு ஏற்பட்ட பகை மாறும். பயணங்கள் பலன் தருவதாக அமையும்.

மூன்றாமிடத்தில் சனி வக்கிர இயக்கத்தில் இருப்பதால் உடன்பிறப்புகளின் வழியில் ஒரு சில சமயங்களில் பிரச்சினைகள் ஏற்படலாம். நெடுங்காலமாக பாகப்பிரிவினை ஆகாத சொத்துகளைப்பிரித்துக் கொள்ளும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

ஆனால் அதில் மூன்றாம் நபரின் குறுக்கீடு அதிகரித்து பாகப்பிரிவினையைத் தாமதப்படுத்தலாம். தசாபுத்தி பலம் இழந்தவர்களுக்கு வழக்குகளில் மேல்முறையீடு செய்யும் அமைப்பு ஏற்படும்.

4 இல் கேதுவும் 10 இல் இராகுவும் சஞ்சரிக்கிறார்கள். சுக ஸ்தானத்தில் கேது பலம் பெறுவதால் அடிக்கடி ஆரோக்கியத் தொல்லை ஏற்படும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கின்றதே என்று மனக்கவலை வரும். அலுவலகப் பணிபுரிபவர்களுக்கு உடன் பணிபுரிபவர்களால் அல்லல் ஏற்பட வாய்ப்புண்டு. தாய் வழிப் பிரச்சினைகள் தலைதூக்கும். அசையாச் சொத்துகள் வாங்கியதில் சிக்கல்கள் ஏற்பட்டு சினம் கொள்ள வைக்கும். இராகு பலம் நன்றாக இருப்பதால் தொழில் வளர்ச்சியில் பாதிப்புகள் ஏற்படாது என்றாலும் எதிர்பாராத விரயங்களை அடிக்கடி சந்திக்க நேரிடும். எனவே இராகு-கேது பிரீதி மற்றும் குரு பிரீதி செய்வது நல்லது.

ஏழரைச் சனி விலகினாலும் சகாய ஸ்தானத்தில் சனி வக்கிரம் பெற்றிருப்பதால். ஒவ்வொரு சனிக்கிழமையும் விரதமிருந்து பெருமாளையும் இலட்சுமியையும் அனுமனையும் வழிபட்டு வருவது நல்லது. பெருமாள் வழிபாடு பெருமைகளைச் சேர்க்கும். இலட்சுமி வழிபாடு செல்வ வளம் பெருக்கும். அனுமன் வழிபாடு மகிழ்ச்சியை நிலைக்க வைக்கும்.

### சுகம் தரும் சுக்கிரப் பெயர்ச்சி

மாதத் தொடக்க நாளில் மிதுன இராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப் போகிறார். அதன்பிறகு ஜூன் 9 ஆம் திகதி கடக இராசிக்குச் செல்கிறார். மிதுனத்தில் சுக்கிரன் சஞ்சரிக்கும் போது சாதகமான பலன்கள் உங்களுக்கு நடைபெறும். ஆரோக்கியம் சீராகும். அடகுவைத்த நகைகளை மீட்டுக் கொண்டுவரும் வாய்ப்புக் கிடைக்கும். பெண்வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். கடக சுக்கிரனின் சஞ்சாரத்தால் தொழில் முன்னேற்றம் கூடுதலாகக் கிடைக்கும். தங்கம், வெள்ளி வாங்கி மனநிறைவு அடையலாம். வாகனம் வாங்கும் யோகம் உண்டு.

### ரிஷப புதனும்... மிதுன புதனும்...

மே 20 ஆம் திகதி ரிஷப இராசிக்குப் புதன் செல்கிறார். 12 இற்கு அதிபதியான புதன் அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் போது, அதிர்ஷ்ட வாய்ப்புகள் அளவிற்கு அதிகமாக வந்துசேரும். குறிப்பாக அரசு வேலைக்கு முயற்சி செய்தவர்களுக்கு அது கைகூடுவதற்கான அறிகுறி தென்படும். உறவினர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். வழக்குகள் சாதகமாக முடியும். வெளிநாட்டில் வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அதுவும் கைகூடலாம். ஜூன் 5 ஆம் திகதி மிதுனத்தில் புதன் சஞ்சரிக்கும் போது, மேலும் பல நற்பலன்களைக் காணப்போகிறீர்கள். கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து நல்ல காரியங்களை முடித்துக் கொடுப்பர்.

### கிரகங்களின் வக்கிர இயக்கம்!

உங்கள் இராசிக்கு 4, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி பகவானும், 3,6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குருபகவானும் வக்கிர இயக்கத்தில் இருப்பதால் சகோதர வர்க்கத்தினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. உத்தியோகத்தில் கூடுதல் பொறுப்பு கிடைக்கும். அதை மற்றவர்களை நம்பி ஒப்படைப்பதன் மூலம் சிக்கல்கள் உருவாகலாம். கவனம்தேவை.

இம்மாதம் தெற்கு நோக்கிய அம்பிகையை வழிபட்டால் தேக்க நிலை மாறும்.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

கை நிறைய வருமானம் வரும் மாதம் இது. கடன் பிரச்சினைகள் ஒரு வழியாகத் தீரும். வெப்பத்தால் ஏற்படும் நோய்களும், ஜீரணத் தொல்லைகளும்வந்தாலும்உடனுக்குடன் அவை குணமாகிவிடும். கணவன்- மனைவிக்குள் பாசமும் நேசமும் அதிகரிக்கும். விலகிய சகோதரர்கள் விரும்பி வந்து இணைவார்கள். தாய் வழி ஆதரவு கிடைக்க அனுசரித்துச் செல்வது நல்லது. குழந்தைகளின் முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். பணிபுரியும் பெண்களுக்கு ஊதிய உயர்வும் உத்தியோக உயர்வும் எதிர்பார்த்தபடி வந்து சேரும். வீடு, நிலம் வாங்க விண்ணப்பித்தவர்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டும் மாதம் இது. தேக்கநிலை மாறி, தெளிவுபிறக்க செவ்வாய்க்கிழமை தோறும் முருகப் பெருமானை வழிபட்டு வருவது நல்லது.

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**



## பொருளாதார நிலை உயரும்!




விளம்பி வருட வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் உச்சம் பெற்று சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அற்புதமான நேரமிது. அனைத்து வழிகளிலும் உங்களுக்கு நன்மைகள் கிடைக்கப் போகின்றது. தொட்டது துலங்கும் தொழில் வளர்ச்சி மேலோங்கும். வெற்றிக்குரிய செய்திகள் வீடு தேடி வரும். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவார்கள். கூட்டு முயற்சிகளில் இலாபம் கிடைக்கும். போட்டிகள் அகலும். புதிய பாதை புலப்படும்.

வாக்கு ஸ்தானத்தில் சனி வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். எனவே அடிக்கடி கோபம் வரும் சூழ்நிலை உருவாகலாம். குடும்பத்தில் உள்ளவர்களை கொஞ்சம் அனுசரித்துச் செல்வது நல்லது. தன பஞ்சமாதிபதியான குருபகவான் வக்கிர இயக்கத்தில் இருப்பதால். பிள்ளைகள் வழியில் சுபகாரியங்களை முன்னிட்டுச் செலவிடுவீர்கள். குறிப்பாக அவர்களின் கல்வி முன்னேற்றம் கருதி. மேற்படிப்பைத் தொடர வெளிநாடு செல்லும் முயற்சிக்காகவோ அல்லது இல்லற வாழ்வை அமைத்துக் கொடுப்பதற்காகவோ ஒரு தொகையைச் செலவிடும் வாய்ப்பு உண்டு.

சகாய ஸ்தானத்தில் கேதுவும் 9 ஆம் இடத்தில் இராகுவும் இருப்பதால் ஆன்மிகத்தின் மூலம் வாழ்க்கையில் நல்ல வசதி வாய்ப்புகளை அமைத்துக் கொள்ள இயலும். வாக்கு பலிதமும் கனவுப் பலிதமும் அதிகம் பெற்றுள்ள நீங்கள், அனைத்து காரியங்களிலும் வெற்றியைப் பெற அனுதினமும் ஆனைமுகப் பெருமானை வழிபடுங்கள். தவிர இராகுவின் பலம் மேலோங்கி இருப்பதால் துர்க்கை வழிபாடும் இராகு-கேதுக்கள் வழிபாடும் உங்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும்.

அஷ்டமலாபாதிபதியான புதன் 6 இல் சஞ்சரிப்பதால் விபரீத இராஜயோக அடிப்படையில் எண்ணற்ற நற்பலன்கள் இம்மாதம் உங்களுக்கு வரப் போகிறது. 7 ஆம் இடத்தில் சுக்கிரனோடு தொழில்ஸ்தானாதிபதி சூரியன் இணைந்திருப்பதால் புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். அரசியல்வாதிகளாலும் அனுகூலம் கிடைக்கும். முத்திரை பதிக்கும் விதத்தில் முன்னேற்றம் கிடைக்கப் போகிறது. கல்யாண வாய்ப்புகள் கைகூடும். ஒரு சிலருக்கு கடல் தாண்டிச் செல்லும் யோகம் அமையும்.

பொதுவாக இராசிநாதன் உச்சம் பெற்றுச் சஞ்சரிக்கும் இந்த மாதத்தில் ஒளிமயமான எதிர்காலம் அமைய உத்தரவாதம் கிடைக்கும் விதத்தில், கிரக நிலைகள் சாதகமான நிலையில் சஞ்சரிக்கின்றன.

எனவே சந்தோஷ வாய்ப்புகளை நாளும் சந்திக்க குலதெய்வ வழிபாட்டினை மேற்கொள்வதோடு, தசாபுத்திக்கு ஏற்ற தெய்வங்களையும் தேர்ந்தெடுத்து. அதற்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று நம்பிக்கையோடு கும்பிட்டு, வந்தால் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும்.

### சுகம் தரும் சுக்கிரப் பெயர்ச்சி

மாதத் தொடக்க நாளில் மிதுனத்திற்குச் செல்லும் சுக்கிரன் ஜூன் 9 ஆம் திகதி கடக இராசிக்குச் செல்கின்றார். சப்தம விரயாதிபதியான சுக்கிரன் 8இல் சஞ்சரிக்கும் போது விபரீத இராஜயோக அடிப்படையில் செயற்படும். திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும். திடீர் திருப்பங்கள் நல்ல விதமாக அமையும். பொருளாதார நிலை எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாக இருக்கும். பொன், பொருள் வாங்கும் யோகம் உண்டு. புகழ்மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து வாய்ப்புகளை வரவழைத்துக் கொடுப்பர். கடகத்தில் சுக்கிரன் சஞ்சரிக்கும் போது, கல்யாணக் கனவுகள் நனவாகும். முக்கிய புள்ளிகளின் ஒத்துழைப்பால் முன்னேற்றத்தின் முதல்படிக்குச் செல்வீர்கள்.

### ரிஷப புதனும்... மிதுன புதனும்...

மே 20 ஆம் திகதி ரிஷப இராசிக்கு புதன் செல்கிறார். அஷ்டமலாபாதிபதியான புதன் 7 இல் சஞ்சரிக்கும் போது, அதிர்ஷ்ட வாய்ப்புகள் அதிகரிக்கும். திறமை பளிச்சிடும். விருதுகளும் பாராட்டுகளும் கிடைக்கும். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. ஜூன் 5 ஆம் திகதி மிதுனத்திற்கு புதன் செல்கிறார். இதன் விளைவாக விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து இணைவர். வீடு மாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள் விரும்பும் விதத்தில் அமையும். கட்டிய வீட்டைப் பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவிகளும், பொறுப்புகளும் கிடைக்கலாம் மதிப்பும் மரியாதையும் உயரும் நேரமிது.

### கிரகங்களின் வக்கிர இயக்கம்!

உங்கள் இராசிக்கு 3, 4 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி பகவானும் 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குருபகவானும் வக்கிர இயக்கத்தில் இருப்பதால் உடன்பிறப்புகளால் சிறுசிறு உபத்திரவங்கள் ஏற்படலாம். பிள்ளைகளின் மூலம் பிரச்சினைகள் உருவாகாமல் இருக்க அவர்களை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது.

இம்மாதம் சரஸ்வதி தேவியையும் மகாலட்சுமியையும் வழிபட்டு வருவதன் மூலம் செல்வமும் செல்வாக்கும் உயரும்.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

சுக்கிர பார்வை இருப்பதால் சுகங்களும் சந்தோஷங்களும் அதிகரிக்கும் மாதம் இது. பொருளாதார முன்னேற்றம் கூடும். இதயம் மகிழும் படியான இனிய சம்பவங்கள் ஏராளம் நடைபெறும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். தாய்மற்றும் உடன்பிறப்புகளின் ஆதரவு தக்க விதத்தில் கிடைக்கும். உச்ச செவ்வாயின் ஆதிக்கத்தால் இடம் பூமிவாங்கும் யோகம் உண்டு. பணிபுரியும் இடத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். ஆரோக்கியத் தொல்லைகள் அப்போதைக்கப்போது ஏற்பட்டு அகலும். பிள்ளைகளின் வருங்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். சொந்த பந்தங்களின் ஆதரவு திருப்தி தரும். குலதெய்வ வழிபாடும் குரு தட்சிணாமூர்த்தி வழிபாடும் குடும்ப முன்னேற்றத்திற்கு வித்திடும்.

# சிங்கள மக்களிடம் புரிந்துணர்வு ஏற்பட்டால்தான் நாட்டில் நீதியும் நியாயமும் நிம்மதியும் வரும்

## அமைச்சர் மனோகணேசன் தெளிவுபடுத்தல்

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு நெருக்கடியான காலங்களில் ஓடி ஒளிந்தவர்கள் இன்று வீர வசனங்களை பேசிவருவதாக தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க அரச கரும மொழித்துறை அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

ஊடகங்கள் மக்களுக்கு உண்மைகளை அறிவிக்க வேண்டுமே தவிர, திரிபுபடுத்தி செய்திகளை வெளியிடக்கூடாது எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்திற்குட்பட்ட குறுமண்வெளி வரையறுக்கப்பட்ட சிக்கன சேமிப்பு கடனுதவி கூட்டுறவுச்சங்கத்தின் 31வது ஆண்டு நிறைவு விழாவும் சாதானையாளர்கள் பாராட்டு விழாவும் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

'இன்று வடக்கு- கிழக்கில் நிறைய வீரர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் வீரம் பேசுவதைக் கேட்டால் கட்டபொம்மன், சங்கிலியன், ராஜராஜசோழன் போன்றோர் தோற்றுப்போவார்கள்.

ஆனால் நெருக்கடி நிலை காணப்பட்ட காலத்தில் இவர்கள் ஓடி ஒளித்துவிட்டார்கள். அந்த நேரத்தில் போராடியவர்கள் நானும் நடராஜா ரவிராஜ்ம் தான். நாங்கள் இட்ட கூக்குரல் தான் ஐ.நா வரை ஒலித்து ஐ.நா மனித உரிமை ஆணையாளரைக் கொழும்பிற்கு கொண்டு வந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு ஐ.நா மனித உரிமை ஆணையாளருடனான சந்திப்பை ஏற்படுத்திக் கொடுத்தது நானாவேன். காணாமல் போனோர் தொடர்பாக எவரும் எனக்கு பாடம் கற்பிக்கத் தேவையில்லை.

காணாமல் போனோர் அலுவலகத்தை எனக்குத் தரவேண்டாம் என்று ஜனாதிபதியிடம் நான் சொன்னதில் காரணம் இருக்கின்றது. நானும் இந்த அரசாங்கத்தை சேர்ந்தவன் என்ற வகையில் காணாமல் போனோர் தொடர்பாக தனது பொறுப்புக் கூறலிலிருந்து அரசாங்கம் தவறிவிடக்கூடாது என்ற காரணத்தினால்தான் நான் அதை வேண்டாம் என்று சொன்னேன்.

காணாமல் போனோர் பிரச்சினை ஒரு பாரிய பிரச்சினையாகும். அதன் அலுவலகம் ஜனாதிபதியின் கைகளில் இருப்பதுவே பொருத்தமானதாகும். ஜனாதிபதி வழங்கிய பொறுப்பை ஒரு அமைச்சர் வேண்டாம் எனக் கூறியது இதுவே முதன்முறையாகும்.



மனோ கணேசன் விடுதலைப்புலிகளின் நினைவு கூரலை வேண்டாம் எனச் சொல்லிவிட்டதாக சிலர் சொல்லியிருக்கின்றனர். அது திரிவுபடுத்தப்பட்ட செய்தி.

யுத்த பூமியில் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகள்தான் என அரசாங்கம் சொல்கின்றது. அதை உண்மையென்று ஒரு வாதத்திற்காக எடுத்துக் கொண்டாலும் கூட அவர்கள் அனைவரும் இலங்கையர்களாவர்.

தங்களுடைய பிள்ளைகள், சகோதரர்கள், கணவன்மார்கள், உறவினர்களை இழந்தவர்களுக்கு இறந்தவர்களை நினைத்து நினைவேந்தல் நடத்தும், கண்ணீர் விடும், அஞ்சலி செலுத்தும் உரிமை இருக்கின்றது என்று நான் கூறியுள்ளேன்.

சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள் சம்பந்தமாக புரிந்துணர்வு ஏற்பட்டால்தான் நாட்டில் நீதியும் நியாயமும் நிம்மதியும் சந்தோஷமும் வரும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கின்றது. அதுவே உண்மை.

1981ஆம் ஆண்டில் தென்னிலங்கையில் ஒரு கிளர்ச்சி ஏற்பட்டது. அதில் ஏராளமான சிங்களவர்கள் கொல்லப்பட்டார்கள். அந்த சந்தர்ப்பத்தில் அவர்களுக்காக குரலெழுப்பியவர் மகிந்த ராஜபக்ஷ. அவர்தான் இந்த நாட்டு அரசாங்கம் தனது மக்களை கொலை செய்கின்றதென ஜெனிவாவில் சென்று முறையிட்டார். சர்வதேச மன்னிப்பு சபையை இலங்கைக்கு வரவழைத்தார்.

அன்று மகிந்த செய்தது சரியென நான் சொன்னேன். அன்று உள்நாட்டில் நியாயம் கிடைக்கவில்லை என்பதற்காகவே மகிந்த ஜெனிவா சென்றார். அதேபோன்றுதான் நாங்கள் இன்று உள்நாட்டில் நியாயம் கிடைக்கவில்லை என்று அயலவர்களிடம் சென்றிருக்கின்றோம்' எனத் தெரிவித்தார். (இ-7)

# இலங்கையில் தென்கொரிய நிறுவனம் முதலிட தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையின் சேதன விவசாய உற்பத்திகளில் முதலீடுகளை மேற்கொள்ள தென்கொரியா முன்வந்துள்ளது. கோலங்கா என்ற நிறுவனமும் இதற்காக பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. சேதனப் பசளையைப் பயன்படுத்தி ஆரோக்கியமான உணவுகளை உற்பத்தி செய்வதில் பொருத்தமான நாடு இலங்கையாகும் என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. (இ-7)

# மாணவர் பாராளுமன்ற கன்னி அமர்வு நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் மாணவர் பாராளுமன்ற கன்னி அமர்வு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் பாடசாலை யோகர் சுவாமி மண்டபத்தில் பாடசாலை அதிபர் க.தவகீஸ்வரன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணக் கோட்டக் கல்வி பணிப்பாளர் சி.தேவகுமார், சிறப்பு விருந்தினராக ஓய்வு நிலை தாதி உத்தியோகத்தர் திருமதி தவநாயகி சிவபாலன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ

# பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(கிளிநொச்சி)

இலங்கைஜேர்மன்தொழில்நுட்ப பயிற்சி நிறுவனமானது அறிவியல் நகர் கிளிநொச்சியில் அமைந்திருக்கிறது.

எமது இந்த தொழிற் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை நேரடியாக எமது நிறுவனத்தில் அல்லது www.slgti. com என்ற இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளவும் விண்ணப்பிக்கவும் முடியும்.

முடிவுத்திகதி ஜூலை மாதம் 15ஆம் திகதி ஆகும். பொறிமுறை பொறியியல், மோட்டார் வாகன தொழில்நுட்பம், மின்னியல் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பம், கட்டுமான தொழில்நுட்பம், உணவு தொழில்நுட்பம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகிய பயிற்சி நெறிகளாகும்.

மேலதிக தகவல்களுக்கு 021 492 7799, 076 102 2227 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும் என பதிவாளர் அறிவித்துள்ளார். (2)

# இலங்கையின் அடுத்த ஜனாதிபதி கிரிக்கெட் வீரர் குமார் சங்கக்கார

## சர்வதேசமும் ஆதரவு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் இலங்கை கிரிக்கெட் அணித் தலைவர் குமார் சங்கக்காரவை களமிறக்க திட்டமிட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அன்னம் சின்னத்தின் பொது வேட்பாளராக சங்கக்காரவை களமிறக்க ஐக்கிய தேசிய கட்சி திட்டமிட்டுள்ளது.

2020ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ போட்டியிடவுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்நிலையில் கோத்தபாயவுக்கு இணையாக குமார் சங்கக்காரவை களமிறக்க வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் அமைச்சர் மற்றும் உறுப்பினர்கள் கோரியுள்ளனர்.

குமார் சங்கக்காரவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் தூதரகங்கள் ஆதரவு தெரிவித்துள்ளன.

அத்துடன் வடக்கு, கிழக்கு உட்பட சிறுபான்மையினரின் வாக்குகளை இலகுவாக சங்கக்கார ஈர்ப்பார் என ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் கலந்துரையாடியுள்ளனர்.

எனினும் இந்த யோசனை



இன்னமும் கலந்துரையாடல் மட்டத்திலுள்ள நிலையில் ஐக்கிய தேசிய கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் இந்த திட்டத்திற்கு இணங்கவில்லை என தெரியவந்துள்ளது.

கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸவை நியமிப்பதற்கு ஐக்கிய தேசிய கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இதேவேளை தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்தபோது குமார் சங்கக்காரவுக்கு பிரதான நாடொன்றுக்கு வெளிநாட்டு தூதுவர் பதவி வழங்கப்பட்ட போதிலும் அவர் அதனை நிராகரித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்

## அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் மஸ்தான் எம்.பி கோரிக்கை



(குருமன்காடு)

யுத்தத்தால் படுமோசமாகப் பாதிக்கப்பட்ட வன்னி மாவட்ட மாணவர்களை அதிகமாக பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கி அவர்களது கல்வியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவருமான காதர் மஸ்தான் உயர்கல்வி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

வவுனியாவில் பாரம்பரிய உற்பத்திப் பொருட்களின் விற்பனை நிலையத்தை நேற்று முன்தினம் உயர்கல்வி மற்றும் கலாசார அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ திறந்து வைத்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்வியில் வளர்ச்சி கண்டிருந்த வன்னி மாணவ சமூகம் நடந்து முடிந்த கொடிய யுத்தத்தில் படுமோசமாகப் பாதிக்கப்பட்டதுடன் அவர்களது கல்வியும் முற்றாக இழக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வன்னி மாவட்ட மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு நாம் கடினமாக உழைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பெற்றோரை இழந்து, உறவுகளை இழந்து வாழ்வாதாரத்திற்கான வழிவகைகள் ஏதுமின்றி துன்பச் சுமைகளுடன் தமது வாழ்வையோட்டி வரும் குடும்பங்களிலிருந்து எதிர்காலம் மீது நம்பிக்கையற்ற வகையில் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவச் செல்வங்கள் தமது கல்வியைத் தொடருகின்றனர். இவர்களது எதிர்காலத்தை கட்டியெழுப்ப வேண்டிய தேவை எமக்குண்டு.

இந்த விடயங்களை கவனத்தில் கொண்டு எமது பிரதேசத்தில் வதியும் மாணவ, மாணவிகளின் வாழ்வில் சுபீட்சத்தை ஏற்படுத்த உயர்கல்வி அமைச்சர் அர்ப்பணிப்புடன் செயற்படுவீர்கள் என நான் நம்புகிறேன் எனத் தெரிவித்தார். (2-250)

# கொழும்பில் அநீதியான நிதி அறவீடு

(கொழும்பு)

கொழும்பு நகரில் வாகனங்களை நிறுத்தி வைக்கும் போது ஏற்படும் தாமதத்திற்காக அநீதியான முறையில் நிதி அறவிடப்பட்டு வந்தமை தெரியவந்துள்ளது.

இந்தக் கட்டண அறவீடு தொடர்பான தீர்மானம் கடந்த ஜூலை மாதத்தில் எடுக்கப்பட்டிருக்கின்றது. இதன் சட்டபூர்வ தன்மை பற்றி ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு கொழும்பு மாநகர சபையின் சட்டத்தரணிகள் சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டன. தண்டப் பணத்தில் 52 சதவீதமான தொகையை சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனமே ஈட்டிக்கொண்டதாக கொழும்பு நகர பிரதி ஆணையாளர் நிஹால் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கொழும்பு நகரில் வாகனங்களை நிறுத்தி வைக்கும்போது ஏற்படும் தாமதத்திற்காக அறவிடப்படும் தாமத தண்டப் பணம் முற்றாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு மாநகர மேயர் ரோஸி சேனநாயக்க இதன் போது தெரிவித்தார். (இ-7)




# சிறுவர் அரங்கம்

## உயர்ந்த உள்ளம்



கந்தர்வபுரி என்ற நாட்டை காந்தன் என்ற அரசர் ஆண்டார். அரசர் நல்லவர் என்ற பெயர் பெற்று சிறப்பாக மக்களை ஆண்டார். கவிதைகள் என்றால் அரசருக்கு மிகவும் பிடிக்கும். அரண்மனையில் தினமும் கவியரங்கம் நடைபெறும். அற்புதமான கவிதைகள் எழுதுபவர்களை பாராட்டி பரிசு வழங்கி கௌரவிப்பது அரசரின் வழக்கம்.

அரண்மனையில் ஒரு ஆஸ்தான கவிஞன் இருந்தான். அவன் பெயர் பசுபதி. அற்புதமான கவிதைகள் எழுதுவதில் அவரை யாராலும் வெல்ல முடியாது. திறமை இருக்குமிடத்தில் சில சமயம் கர்வமும் வருவதுண்டு. கொஞ்சம் கர்வம் இருந்தது. கவிதைகள் பாடும் போது ஒருவன் அவைகளை விமர்சனம் செய்வான். அந்த விமர்சகன் பெயர் விமலன்.

எப்பேர்பட்ட கவிதைகளையும் விமலன் விமர்சனம் செய்து அதில் உள்ள குற்றங்களை கண்டுபிடித்து விடுவான். ஆஸ்தான கவிஞனான பசுபதியின் கவிதைகளும் விமலனிடம் இருந்து தப்புவதில்லை. எனவே, பசுபதி கவிதை பாடும் முன் பதட்டத்துடன் விமலனை பார்ப்பான். தனக்கு அபார புலமை இருந்தாலும் மனதுக்குள் விமலனுக்கு பயப்பட்டான். விமலன் நல்லவன். யாருக்கும் தீங்கு செய்யமாட்டான். எனவே, அரசர் அவனிடம் அதிக பற்று வைத்திருந்தார். இவர்களது நட்பு பசுபதியின் அமைதியை கெடுத்தது. அவன் மனதில் விமலன் மீது ஆத்திரம் ஏற்பட்டது.

அன்றும் வழக்கம் போல் அரசவை கூடியது.

கவிஞர்கள் பலர் கவிதை பாடி பரிசு பெற வந்தனர். கவிஞர்களை கண்டு அரசர் மகிழ்ச்சி அடைந்தார். கவிஞர்களுடன் விமர்சகனும் இருந்தான். கவியரங்கம் ஆரம்பமாகும் நேரம் வந்தது. அரசர் முன் நின்று கவிஞர்கள் ஒவ்வொருவரும் அற்புதமான கவிதைகள் பாடினர். அதைக் கேட்டு அரசர் மகிழ்ச்சி அடைந்தார்.

பிறகு ஆஸ்தான கவிஞன் பாட அழைக்கப்பட்டான். பசுபதி எழுந்து நின்று கவிதை பாடினான். அதைக் கேட்டு பெரும் மகிழ்ச்சி அடைந்து கைதட்டி பாராட்டினார் அரசர். மற்ற கவிஞர்களும் பசுபதியை பாராட்டி கை தட்டி ஆரவாரம் செய்தனர்.

விமலன் மட்டும் மௌனமாக இருந்து பசுபதியை கவனித்துக் கொண்டிருந்தான். அவன் மனதில் பசுபதி பாடிய கவிதைகளின் வரிகள் ஆழமாக பதிந்து இருந்தன. ஒவ்வொரு வரிகளையும் ஒவ்வொரு எழுத்துக்களையும் அவன் ஆராய்ந்து கொண்டிருந்தான். பிறகு எழுந்து, அரசருக்கும் சபையோர்களுக்கும் வணக்கம் சொல்லிவிட்டு தன் விமர்சனத்தை தொடங்கினான்.

அந்த விமர்சனம் பசுபதியை மேலும் ஆத்திரப்படுத்தியது.

அவன் பற்களை கடித்து ஆத்திரத்தை அடக்கிக் கொண்டான். விமலனின் விமர்சனம் கேட்டு அரசன் திடுக்கிட்டான். விமலனால் மட்டும் எப்படி இவ்வளவு நன்றாக விமர்சனம் செய்ய முடிகிறது என்று அனைவரும் வியந்தனர்.

"பேஷ்! பேஷ்! உங்கள் விமர்சனம் அற்புதம். கவிதை எழுதுவதை விட அதை விமர்சனம் செய்வது தான் சிரமமான காரியம்" என்று கூறி பாராட்டினார் அரசர்.

அன்று வீடு திரும்பிய பசுபதியால் அமைதியாக இருக்க முடியவில்லை. விமலனை எப்படி பழி வாங்குவது என்ற சிந்தனைதான் அவன் மனதில் நிறைந்து இருந்தது. இவனை விட்டு வைத்தால் தன் ஆஸ்தான கவிஞர் பதவிக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும் என்று பயந்தான். அவனால் இரவில் தூங்க முடியவில்லை. கண்களை மூடினாலே விமலனின் முகம்தான் தெரிந்தது. எப்படியாவது அவனை ஒழித்து கட்ட வேண்டும் என்று முடிவு செய்தான். தன் கவிதையை பாராட்டாமல் அவன் விமர்சனத்தை பாராட்டுகிறாரே அரசர் என்று நினைத்த போது அவனுக்கு அரசர் மீது ஆத்திரம் வந்தது. அன்று ராஜ சபை கூடிய போது அரசர் மகிழ்ச்சிகரமான அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

"தன் பிறந்த நாள் அன்று கவிதை போட்டி ஒன்று நடைபெறுகிறது. இந்த போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெறுபவர்களுக்கு ஆயிரம் தங்கக் காசுகளும், வீடும், நிலமும் வழங்க இருக்கிறேன். அயல்நாடுகளில் இருந்தும் பல கவிஞர்கள் வர இருக்கின்றனர்." என்றார் அரசர்.

அதைக் கேட்டு அனைவரும் மகிழ்ச்சி அடைந்த போது பசுபதி மட்டும் உம் என்று இருந்தான். தான் போட்டியில் கலந்து கொண்டால் நிச்சயமாக வெற்றி பெற முடியாது. காரணம், அந்த விமலன் விமர்சனம் செய்தே தன்னை அவமானப்படுத்துவான்.

தொடரும்...

## 2018.05 21 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

❖996- புனித ரோமப் பேரரசின் மன்னனாக 16 வயது மூன்றாம் ஓட்டோ முடி சூடினான்.
❖1851-கொலம்பியாவில் அடிமைத்தொழில் ஒழிக்கப்பட்டது.
❖1859-பிக் பென் மணிக்கூடு முதன் முறையாக இயக்கப்பட்டது.
❖1864-ரஷ்ய-கோக்கசஸ் போர் முடிவடைந்தது.
❖1894-22 வயது பிரெஞ்சு கொடுங்கோலன் எமிலி ஹென்றி கழுத்து துண்டிக்கப்பட்டு மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டான்.
❖1904-பாரிசில் சர்வதேச உதைபந்தாட்ட கூட்டமைப்பு (FIFA) ஆரம்பிக்கப்பட்டது.
❖1991-முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி சென்னைக்கருகில் மனிதக் குண்டுவெடிப் பொன்றில் கொல்லப்பட்டார்.
❖1991-எதியோப்பியாவின் கம்யூனிச அரசுத் தலைவர் மெங்கிஸ்டு ஹைலி மரியாம் நாட்டில் இருந்து தப்பி வெளியேறினார். எதியோப்பிய உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.
❖1994-யேமன் மக்களாட்சிக் குடியரசு யேமன் குடியரசில் இருந்து விலகியது.
❖1996-தான்சானியாவில் பூக்கோவா என்ற பயணிகள் கப்பல் மூழ்கியதில் 1000 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
❖1998- 32 ஆண்டுகள் இந்தோனேசியாவை ஆண்ட சுகார்ட்டோ பதவி விலகினார்.
❖2003-வடக்கு அல்ஜீரியாவில் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் 2,000 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர்.
❖2006-மட்டக்களப்பு மாவட்டத்துணைத் தளபதி கேணல் ரமணன் நினைவு நாள்.
❖2006-சுதுமலை புவனேசுவரியம்மை கொடியேற்றம்.

### பிறப்புகள்

❖1471-ஆல்பிரெஃக்ட் டியுரே, செருமானிய ஓவியர், கணிதவியலாளர் (இ. 1528)
❖1527-ஸ்பானியாவின் இரண்டாம் பிலிப்பு (இ. 1598)
❖1780-எலிசபெத் ஃபிரை, ஆங்கிலேயக் கொடையாளி, சீர்திருத்தவாதி (இ. 1845)
❖1799-மேரி அன்னிங், ஆங்கிலேயத் தொல்லியல் ஆய்வாளர் (இ. 1847)
❖1873-ஹான்ஸ் பெர்கர், செருமானிய நரம்பியல் நிபுணர் (இ. 1941)
❖1895-சு.நடேசபிள்ளை, இலங்கை அரசியல்வாதி (இ. 1965)
❖1915-சி.வி.நரசிம்மன், ஐ.நா. உயர் அலுவலர், எழுத்தாளர் (இ. 2003)
❖1954-டி.பி.எஸ்.ஜெயராஜ், இலங்கை ஊடகவியலாளர்
❖1954-அனிதா ரத்னம், இந்திய நடனக் கலைஞர்
❖1959-அப்துல்லா யாமீன், மாலைத்தீவுகளின் 6 ஆவது அரசுத்தலைவர்
❖1960-மோகன்லால், தென்னிந்தியத் திரைப்பட நடிகர்
❖1960-ஜெப்ரி ரூபின், அமெரிக்க வழக்கறிஞர்
❖1961-சஞ்சய் சுப்ரமணியம், இந்தியவியலாளர், வரலாற்றாளர்
❖1967-கிறிஸ் பென்வா, கனேடிய மற்போர் வீரர் (இ. 2007)
❖1972-நொடோரியஸ் பி.ஐ.ஜி, அமெரிக்க ராப் கலைஞர் (இ. 1997)

### இறப்புகள்

❖1639-தொம்மாசோ கம்பனெல்லா, இத்தாலிய சோதிடர், கவிஞர் (பி. 1568)
❖1861-இயூஜின் டி மசெனோ, பிரான்சிய கத்தோலிக்கப் புனிதர் (பி. 1782)
❖1911-வில்லியமினா பிளெமிங், இசுக்கொட்டிய-அமெரிக்க வானியலாளர் (பி. 1857)
❖1935-ஜேன் ஆடம்ஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க செயற்பாட்டாளர் (பி. 1860)
❖1964-ஜேம்ஸ் பிராங்க், நோபல் பரிசு பெற்ற செருமானிய இயற்பியலாளர் (பி. 1882)
❖1991-ராஜீவ் காந்தி, இந்தியாவின் 6 ஆவது பிரதமர் (பி. 1944)
❖1991-தேன்மொழி ராசரத்தினம், விடுதலைப் புலிகளின் போராளி (பி. 1974)
❖2009-க.பத்மநாதன், இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (பி. 1948)
❖2011-சுவாமி அஜராத்மானந்தா, இலங்கை மட்டக்களப்பு இராமகிருஷ்ண மட முதல்வர் (பி. 1950)
❖2014-ஆர்.உமாநாத்.இந்திய இடதுசாரி அரசியல்வாதி (பி. 1922)

### சிறப்பு நாள்

❖விடுதலை நாள் (மொண்டெனேகுரோ, 2006)
❖கடற்படை நாள் (சிலி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 60 | 60 | 80 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 95 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 90 | 60 | 100 | 70 |
| தக்காளி | 180 | 160 | 160 | 110 | 240 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 | 35 | 40 | 35 |
| கோவா | 100 | 100 | 100 | 60 | 120 | 70 |
| கரட் | 150 | 250 | 200 | 80 | 240 | 240 |
| பூசணி | 40 | 20 | 40 | 15 | 40 | 30 |
| புடோல் | 100 | 60 | 80 | 50 | 120 | 80 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 35 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 150 | 200 | 160 | 130 | 160 | 130 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 80 | 100 | 100 |
| பாகற்காய் | 160 | 160 | 100 | 90 | 160 | 140 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 80 | 60 | 160 | 60 |
| கருணைக்கிழங்கு | 60 | 100 | 60 | – | 80 | 70 |
| பயற்றங்காய் | 120 | 120 | 80 | 70 | 100 | 140 |
| லீக்ஸ் | 200 | 250 | 200 | 140 | 240 | 220 |
| பீற்றூட் | 60 | 60 | 60 | 35 | 100 | 70 |
| கறிமிளகாய் | 100 | 100 | 120 | 30 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 220 | 150 | 200 | 130 | 240 | 200 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 65 | 240 | 200 |
| கத்தரிதம்புள்ள | 70 | 60 | 50 | – | 80 | 50 |
| கீரை - 1பிடி | 40 | 30 | 30 | 30 | 40 | 20 |
| தேசிக்காய் | 120 | 200 | 220 | 200 | 250 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60-80 | 75 | 25-70 | 50-75 | 75 |
| இராசவள்ளி | 200 | 200 | 160 | – | 160 | 170 |
| வெங்காயப்பூ | 300 | – | – | – | – | 200 |
| முள்ளங்கி | 100 | 120 | 100 | 30 | 120 | 70 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 40 | 10 | 30 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 15 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | – | – | – | 120 | 100 |

பிரார்த்தனையின் கதவுகள் மூடிக்கிடந்தபோதிலும் கண்ணீர்க் கதவுகள் திறந்துதான் இருக்கின்றன.
– ஹீப்ரு பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# விபத்து மரணத்தைத் தடுக்க ஏதாவது செய்வோம்

விபத்தில் மரணமடைந்த வேலணையைச் சேர்ந்த கோபாலபிள்ளை குகன் வயது 35 என்ற இளைஞனின் மரணச் சடங்குக்கு சென்றிருந்தேன்.

வடக்கு மாகாண சபையின் பிரதி பிரதம செயலாளர் அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகப் பணியாற்றுகின்ற அந்த இளைஞன் கடமை நிமித்தம் கடந்த 18ஆம் திகதி வாகனத்தில் சென்ற வேளை, பூநகரிப் பகுதியில் விபத்து நேர்ந்து அவர் உயிரிழந்து போனார்.

அந்த இளைஞனின் மரணச் சடங்கு நேற்று கந்தர்மடம் இந்து மகளிர் ஒழுங்கையில் உள்ள இல்லத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாணப் பிரதிப் பிரதம செயலாளர் அலுவலக உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக நண்பர்கள், பாடசாலைத் தோழர்கள், உற்றார், உறவினர், அயலவர், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபையின் ஏனைய அலுவலக உத்தியோகத்தர்கள் என ஏகப்பட்டவர்கள் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டனர். அங்கு கண்ணீர் விட்டு அழாதவர்கள் யாரும் இல்லை எனலாம்.

விபத்தில் மரணித்த குகன் ஆற்றல்மிக்க, எவருக்கும் உதவும் மனப்பாங்குமிக்க, ஒழுக்கம் நிறைந்த பிள்ளை. அவரை இழந்து விட்டோம் என்று அஞ்சலி உரையாற்றிய அத்தனை பேரும் கண்ணீர் விட்டுக் கூறினர்.

அவரின் நண்பர்கள் அழுது புலம்பினர். அந்த இளைஞனின் சகோதரியின் சின்னப் பிள்ளைகள் மாமா... மாமா... என்று அழுத போது, இந்த உலகமே வெறுத்துப் போனது.

அந்த இளைஞனின் தந்தையார் கொள்ளிக் குடத்தை ஏந்தியபடி மௌனமாக நின்றபோது கடவுள் மீது கோபம் வந்தது. இறைவா! ஏன் தான் இப்படி என்ற ஏக்கம் எல்லோர் மனதிலும் எழுந்திருக்கும்.

மக்கள் சமூகம் என்ற வகையில் நாம் எல்லோரும் விபத்து மரணங்களின் பங்காளிகள். எனினும் இதை மறந்து நாம் செயற்படுகின்றோம்.

விபத்துச் சம்பவத்தில் இளைஞன் பலி; குடும்பத் தலைவன் மரணம்; இளம் தாய் உயிரிழப்பு; பள்ளிச் சிறுவன் பரிதாப இறப்பு என்றெல்லாம் செய்தித்தாள்களில் படித்து விட்டு, அடுத்த செய்திகளைத் தேடுகின்ற அளவில் வாழப் பழகிவிட்டமை எங்கள் அறியாமை என்பதை மட்டும் உணர முடிகிறது.

ஒரு விபத்து ஏற்படுத்திய மரணத்தின் பின்னால் பிள்ளையை இழந்த பெற்றோர், சகோதரனை இழந்த சகோதரர்கள், தாயை இழந்த பிள்ளைகள், தந்தையைப் பறிகொடுத்த குடும்பம் என மிகப்பெரியதொரு அவலம் பரந்து விரிந்து மனித வாழ்வையே வெறுக்க வைத்து விடுகிறது.

எனவே அன்புக்குரியவர்களே! விபத்து மரணத்தை தடுக்க என்ன வழி என்று நாம் ஆராயாமல் இருப்பது; அவல மரணங்களும் துன்ப வாழ்வும் நீண்டு நிலைக்கவே வழிவகுக்கும்.

எனவே விபத்து மரணத்தைத் தடுக்கும் வழியைத் தேடுவோம். வடக்கு மாகாண சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட உத்தியோகத்தர்கள் அத்தனைபேரும் ஒன்றுகூடி விபத்தை தடுத்தல் என்ற விடயத்தை கையிலெடுத்து, விழிப்புணர்வை ஏற்படுத்தினால், போக்குவரத்து பொலிஸாரின் பொறுப்பை உணர்த்தினால், சாரதியப் பயிற்சி நிறுவனங்களின் கடமைகளை வலியுறுத்தினால், எடுத்தவுடன் சாரதிய அனுமதிப்பத்திரத்துக்கு கையெழுத்திடல் என்ற செயலுக்கு முற்றுப்புள்ளி வைத்தால் விபத்து மரணம் தருகின்ற பேரிழப்பை–துன்பத்தை தடுக்க முடியும்.

இதை வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலகம் சார்ந்த உத்தியோகத்தர்கள் தங்கள் சக உத்தியோகத்தர் குகனின் பெயரால் முன்னெடுக்க வேண்டும்.

# தென்சீனக்கடல் பகுதியில் அதிநவீன போர் விமானங்களை இறக்கி சீனா பயிற்சி

(பீஜிங்)

பல நாடுகள் உரிமை கோரிவரும் தென்சீனக்கடல பகுதியில் அதிநவீன போர் விமானங்களை இறக்கி சீனா போர் பயிற்சிகளை மேற்கொண்டது.

சீனாவின் தென்பகுதியில், பசுபிக் பெருங்கடலின் ஒரு பகுதியாக அமைந்துள்ள தென் சீனக்கடலில் சீனா ஆதிக்கம் செலுத்தி வருகிறது. உலகின் மூன்றில் ஒரு பகுதி கப்பல் போக்குவரத்தும் ஆண்டுதோறும் சுமார் ஐந்து இலட்சம் கோடி டொலர்கள் மதிப்பிலான சரக்குகள் பரிமாற்றமும் இந்தப் பகுதி வழியே நடைபெறுவதாலும், இந்த கடலில் அடிப்பகுதியில் எண்ணெய், இயற்கை எரிவாயு வளம் இருப்பதாக சொல்லப்படுவதாலும் இது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

ஆனால், “தென் சீனக் கடலில் எங்களுக்கும் பங்கு இருக்கிறது” என்று பிலிப்பைன்ஸ், வியட்நாம், மலேசியா, புருனை, தாய்வான் போன்ற நாடுகளும் உரிமை கொண்டாடி வருகின்றன. கடந்த 2012ஆம் ஆண்டில் இந்த சர்ச்சைக்குரிய கடல் பகுதிக்குட்பட்ட ஒரு தீவில் சான்ஷா என்ற மாதிரி நகரத்தை சீனா உருவாக்கியது.

இந்த நிலையில், சீனாவுக்கு எதிராக தி ஹேக் நகரில் ஐ.நா. சட்டதிட்டங்களின்படி அமைக்கப்பட்டுள்ள சர்வதேச அளவிலான மத்தியஸ்தம் செய்வதற்கான நிரந்தர தீர்ப்பாயத்தில் பிலிப்பைன்ஸ், 2013ஆம் ஆண்டு வழக்கு தொடுத்தது. பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருந்த வழக்கின் தீர்ப்பு கடந்த 2016ஆம் ஆண்டு வெளியானது.

தென் சீனக்கடலில் சர்ச்சைக்குரிய பகுதியில் சீனா வரலாற்று உரிமைகள் கோருவதற்கு சட்டரீதியில் எந்த முகாந்திரமும் இல்லை என அந்த தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த தீர்ப்புக்கு பிலிப்பைன்ஸ், ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் வரவேற்பு தெரிவித்தன. ஆனால், இந்த தீர்ப்பை ஏற்க முடியாது என சீனா திட்டவட்டமாக கூறி விட்டது.

இந்நிலையில், தென் சீனக் கடல் பகுதியில் அதிநவீன போர் விமானங்களை நேற்று முன்தினம் இறக்கி சீனா போர் பயிற்சிகளை மேற்கொண்டது.

தென்சீனக்கடல்எல்லைக்குட்பட்ட தீவுகள் மற்றும் பவளப்பாறைகள் பகுதிகளில் H-6K இரகத்தை சேர்ந்த குண்டு வீச்சு விமானங்களின் மூலம் நடைபெற்ற இந்த போர் பயிற்சியின் மூலம் கடல் பகுதியில் திட்டமிடப்பட்டிருந்த இலக்குகள் வெற்றிகரமாக தாக்கி அழிக்கப்பட்டதாக சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (7)

# ஈராக் பாராளுமன்ற தேர்தலில் மதகுரு கூட்டணி வெற்றி

(பாக்தாத்)

ஈராக்கில் நடந்த பாராளுமன்ற தேர்தலில் மதகுரு மக்தாதா சதார் தலைமையிலான கூட்டணி கட்சி ஆட்சியை கைப்பற்றியது.

ஈராக்கில் சதாம் உசேன் வீழ்ச்சிக்கு பிறகு அங்கு ஜனநாயக ஆட்சி மலர்ந்தது. இந்த நிலையில் திடீரென ஐ.எஸ். தீவிரவாதிகள் எழுச்சி பெற்று பெரும் பகுதியை கைப்பற்றி தனிநாடு அமைத்தனர்.

தினமும் வன்முறை வெறியாட்டங்கள் நடத்தி பொது மக்களை கொன்று குவித்தனர். எனவே அமெரிக்க கூட்டுப் படையின் உதவியுடன் கடந்த டிசம்பரில் அவர்கள் முற்றிலும் அழிக்கப்பட்டனர்.

அதைத் தொடர்ந்து ஈராக்கில் கடந்த 12ஆம் திகதி பாராளுமன்ற தேர்தல் நடத்தப்பட்டது. அதில் மும் முனை போட்டி நிலவியது. பிரதமர் ஹைதர் அல்–அபாடி தலைமையிலான நசார் கூட்டணி போட்டியிட்டது. அவரை எதிர்த்து ஷியா பிரிவு மதகுரு மக்தாதா சதாரின் கூட்டணியும், பதே கட்சி கூட்டணியும் மோதின.

இந்த தேர்தலில் 44.5 சதவீதம் வாக்குகள் பதிவாகின. வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் வெளியானது. அதில் மதகுரு மக்தாதா தலைமையிலான கூட்டணி 54 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியை பிடித்தது. இவருக்கு அடுத்தபடியாக பதே கட்சி 2ஆவதாக 47 இடங்கள் வந்துள்ளது.

இத்தேர்தலில் பிரதமர் அபாடி தலைமையிலான நசார் கூட்டணி படுதோல்வி அடைந்தது.

இக்கட்சி 42 இடங்கள் பிடித்து 3ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டது.

மக்தாதா பிரதமராக முடியாவிட்டாலும் புதிய அரசு அமைவதில் முக்கிய பங்கு வகிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (7)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**கருச்சிதைவு செய்வது பாவமா?**

கருவில் இருக்கும் குழந்தையை வயிற்றில் வளரவிடாமல் கொல்வதுதான் கருச்சிதைவு. அது கொடும் பாவமாகும். அதிலும் கருவைச் சிதைப்பதென்பது மகா பாவமாகும். ஒரு உயிரைக் கொடுப்பதற்கும் எடுப்பதற்கும் (ஜனனம்–மரணம்) மனிதனுக்கு அதிகாரமில்லை. அந்த அதிகாரம் தெய்வத்திற்கு மட்டுமே உள்ளது. அது மனிதனின் அதிகார வரம்பிற்கு உட்பட்டதல்ல.

இதை அறிந்திருந்த நம் முன்னோர்கள் கருச்சிதைவு செய்ததில்லை. கரு இயற்கையாக சிதைந்து போனால் அது விதியென்று சமாதானப்பட்டுக் கொள்வார்கள். இந்தக் காலத்தில் மனிதன் தெய்வத்தின் அதிகாரத்தையும் கேள்வி கேட்கிறான்.

அது சரியல்ல, இயற்கை நீதியும் சட்டமும் யாராலும் கேள்வி கேட்க முடியாதவைகளாகும். *(தொடரும்)*

# டொல்பின் வாகனம் விபத்து; அருட்தந்தை காயம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் மாந்தைபிரதேசத்தின்பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாப்பாமோட்டை பகுதியில் டொல்பின் வாகனம்வீதியை விட்டுவிலகி அருகில் நின்ற தென்னை மரத்துடன் மோதுண்டதில் அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்தந்தை ஒருவர் காயமடைந்த நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதன்போது வாகனத்தின் முன்பகுதி பலத்த சேதமடைந்துள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இவ்விபத்தில் பேசாலையைச் சேர்ந்த அருட்தந்தை செலஸ்ரின் மஸ்கிரிஞ்ச என்பவரே காயமடைந்தவராவார்.(2)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **வவுனியா பிரதேசத்தில** பண்டாரிக்குளம் கிராமம், தவசிக்குளம் கிராமம், அட்டம்பஸ்கட கிராமம், சிதம்பரபுரம், கற்குளம், ஆசிகுளம், ஆச்சிபுரம், எல்லப்பர்மருதங்குளம், கூமரசங்குளம், நெளுக்குளத்திலிருந்து இராசேந்திரகுளம் வரை, குடாகச்சகொடிய, மகாமயிலங்குளம், துட்டுவாகை, குடாகச்சகொடிய கல் உடைக்கும ஆலை, ஓமேகாலைன, அரசன் அரிசி ஆலை, சியாம் அரிசி ஆலை, ஸ்ரீரங்கம் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, சுயன் அரிசி ஆலை, அஸவி அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## சத்சங்கம்



உங்கள் உள்ளங்கலை விரித்து உலக நிலைமையை நோக்குங்கள். தனிமனிதன் வாழ்வில்படும் அல்லல்களையும், துன்பங்களையும் கூர்ந்து உணருங்கள். இவற்றிற்குக் காரணம் என்ன? இயற்கையில் எந்தக் குறையுமில்லை. மனிதன் அறிவில் மயக்கமும் செயல்களில் தவறும் வாழ்வில் பல்வேறுபட்ட சிக்கல்களாக வடிவங் கொண்டுள்ளன.

பொருள் துறையில் ஏற்றத்தாழ்வு, தனது ஆற்றலை உணராமலும் அதனைப் பெருக்கிக் கொள்ளாமலும் பிறரிடமிருந்தே எப்போதும் தன் விருப்பத்திற்கும், தேவைக்கும் நிறைவு பெற எதிர்பார்த்தல். இவற்றால் பொறாமை, புறங்கூறல், நல்லவையே செய்பவர்களிடம் கூடக் களங்கம் கற்பித்து மகிழ்தல், பிறர் கடமைகளில் குறுக்கிடல், தனது பெருமையை வளர்த்துக் கொள்ளப் பிறர் செயலை இழித்துக் கூறல், பிறர் பொருள் இன்பம் பறித்துத் தான் மகிழ நினைத்தல் இவையெல்லாம் தடுக்கமுடியாத அளவில் சமுதாயத்தில் பெருகிக் கொண்டிருக்கின்றன.

இந்தச் சூழ்நிலையில் தான் நாம் அனைவரும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்நிலை மாறிச் சமுதாயம் தூய்மையும், வளமும், அமைதியும் பெற வேண்டுமென விரும்புகிறோம். இந்த நன்னோக்கமுடையோர் ஒன்றிணையும் கூட்டமே சத்சங்கங்கள்.

# சுண்டுக்குளி மகளிர் - இணுவில் இந்துக் கல்லூரி சம்பியன்



வடமாகாணப் பாடசாலைகளின் டென்னிஸ்அணிகளுக்கிடையில்நடைபெற்றடென்னிஸ் போட்டியில், பெண்களில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியும், ஆண்களில் இணுவில் இந்துக் கல்லூரி அணியும் சம்பியனாகின.

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையில் வருடாந்த விளையாட்டுப் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் ஆண்கள், பெண்கள் அணிகளுக்கிடையிலான டென்னிஸ் போட்டிகள் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

17 வயதுப்பிரிவு பெண்களுக்கான போட்டியில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, இணுவில் இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மற்றும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணிகள் பங்குபற்றின. இவற்றிலிருந்து இறுதிப்போட்டிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணியும், யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணியும் தகுதி பெற்றன.

முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் சுண்டுக்குளியின் அஸ்மிகாவும், யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் துலக்சிகாவும் மோதினர். இதில் 6:0, 6:0 என்று இரண்டு நேர் செற்களில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் அஸ்மிகா வென்றார்.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் சுண்டுக்குளியின் அபிசாளியினியும், யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் மதுசாவும் மோதினர். இதில் அபிசாளினி 6:1, 6:2 என்ற இரண்டு நேர் செற்களில் வென்றார்.

இரண்டு ஒற்றையர்கள் ஆட்டத்திலும் சுண்டுக்குளி அணி வெற்றிபெற்றதால், இரட்டையர் ஆட்டம் நடைபெறாமலே சுண்டுக்குளி அணி, வெற்றிபெற்றது.

20 வயதுப்பிரிவு ஆண்களுக்கான போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, வைத்தீஸ்வராக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, இணுவில் இந்துக் கல்லூரி, கிளிநொச்சி மகா வித்தியாலய அணிகள் பங்குபற்றின.

இறுதிப்போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து இணுவில் இந்துக் கல்லூரி அணி மோதியது.

முதலாவது ஒற்றையர் பிரிவில் சென்.பற்றிக்ஸ் அணியின் சிம்சனும், இணுவில் அணியின் அகிந்தன் அணியும் மோதினர். இதில் 2:1 என செற்களில் அகிந்தன் வெற்றிபெற்றார்.

இரண்டாவது ஒற்றையர் பிரிவில் சென்.பற்றிக்ஸ் அணியின் லிந்துஜனும், இணுவில் அணியின் பாலகிருஸ்ணாவும் மோதினர். இதில் லிந்துஜன் இரண்டு நேர்செற்களில் வெற்றிபெற்றார்.

தொடர்ந்து வெற்றியாளரைத் தீர்மானிக்க நடைபெற்ற இரட்டையர் ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் அணியின் யூட்தீபன் - சுதர்சன் ஜோடியை எதிர்த்து இணுவில் அணியின் மாயவன் - நிசாந்தன் ஜோடி மோதியது. இதில், இணுவில் அணியின் ஜோடி 2 செற்களை வென்றது. இதனடிப்படையில் இரண்டு பிரிவுகளில் வெற்றிபெற்ற இணுவில் அணி சம்பியன் பட்டத்தை வென்றது. (க-26)

# தூய ஒளி வெற்றிக்கிண்ண சுற்றுப் போட்டி முடிவுகள்

மண்டைதீவில்படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் 32 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தின் அனுசரணையுடன் தூய ஒளி வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டத் தொடர் நடைபெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற பேட்டியில் யாழ்.முஸ்லிம் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து ஊரெழு றோயல்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

இப் போட்டியில் 3:1 என்ற கோல்கணக்கில் ஊரெழு றோயல்ஸ் அணி வெற்றி பெற்றது.

நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் அன்னை விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது. (க-106)

# தல என்றால் அஜித் மட்டும்தான் அதன்பிறகுதான் டோனியெல்லாம்

## கடுப்பேத்திய ஸ்ரீசாந்


இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் தற்போது ஐபிஎல் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் இரண்டு ஆண்டுகள் தடைக்கு பின் சென்னை அணி களமிறங்கி அசத்தலாக விளையாடி வருகிறது. பிளேஒப் சுற்றுக்கும் தகுதி பெற்று விட்டது.

சென்னை அணியின் தலைவரான டோனியை தமிழ் நாட்டு ரசிகர்கள் செல்லமாக தல எனவும், ரெய்னாவை சின்னத் தல எனவும் கூறுவார்கள். இந்நிலையில் கிரிக்கெட் வீரரான ஸ்ரீசாந் இணையத்தில் வீடியோ ஒன்றை வெளி யிட்டுள்ளார். அதில் தமிழ் நாட்டில் மட்டுமல்ல உலகம் முழுவதிலும் ஒரே தல தான் அது அஜித் தான். அஜித்திக்கு என்ற ஒரு தனி ரசிகர் பட்டாளமே உள்ளது.

சமீபத்தில் நிறைய போஸ்டர்களை பார்த்தேன். அதில் நம்ம தல டோனி என்று பார்த்தேன். இருப்பினும் எல்லோருக்கும் தெரியும் ஒரே தல நம்ம அஜித் தான் என்று. மற்றவர்கள் அனைவரும் அஜித்துக்கு கீழே தான் என்று கூறியுள்ளார். (க)

# எப்போதும் டி வில்லியர்சை நம்பியிருப்பது நியாயமல்ல

## மற்றவீரர்களும் கொஞ்சம் விளையாட வேண்டும் – ஹோலி



எல்லா நேரமும் டிவிலியர்ஸை நம்பியே எப்படி இருக்க முடியும் என பெங்களூர் அணித் தலைவர் விராட் கோலி ஆதங்கத்துடன் தெரிவித்துள்ளார்.

2018ஆம் ஆண்டுக்கான ஐபிஎல் தொடர் இறுதி கட்டத்தை நெருங்கியுள்ளது.

இந்நிலையில் கட்டாய வெற்றியை நோக்கி களமிறங்கிய போட்டியில் பெங்களூர் அணி ராஜஸ்தான் அணியிடம் 30 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இதன் காரணமாக பிளே ஒப் சுற்றுக் கான கடைசி வாய்ப்பையும் பெங்களூர் அணி கோட்டை விட்டது.

தோல்விக்கு பின்னர் பேசிய விராட் கோலி, மிடில் ஆர்டர் துடுப்பாட்ட வீரர்கள் மிகவும் சொதப்பலாக செயற்பட்டனர்.

எப்போதும் டிவிலியர்ஸே கைகொடுப்பார் என எப்படி எதிர்பார்க்க முடியும்.


அவர் முடிந்த அளவு ஓட்டங்களை சேர்த்தார். ஆனால் மற்றவர்களும் கை கொடுத்தால்தான் அணி வெற்றி பெறும் என குமுறியுள்ளார். (க)

சுழிபுரம் விக்ரோரியன்ஸ் விளையாட்டு கழகத்தினால் மருதனார்மடம் வாழ்வகம் விழிப்புலனற்ற சிறுவர் நிலையத்துக்கு உணவு மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டது.

இதற்கான நிதியை விக்டோரியா விளையாட்டுக்கழகத்தின் தலைவர் சுகிதன் வழங்கி வைத்தார்.




# மைதானத்தில் குண்டு வெடிப்பு எட்டு பேர் உடல் சிதறிப்பலி



ஆப்கானிஸ்தானில் ஜலாலாபாத் நகரில் உள்ள ஸ்பின்கர் மைதானத்தில் ரம்ழான் கோப்பைக்கான சிறப்பு போட்டி நடந்து கொண்டிருக்கும் போதே எதிர்பாராத விதமாக மைதானத்தின் உள்ளே பெரும் சத்தத்துடன் இரண்டு குண்டுகள் வெடித்தன.

அடுத்த சிறிது நேரத்தில் மைதானத்துக்கு வெளியிலும் இரண்டு குண்டுகள் வெடித்தன. இந்தக் குண்டு வெடிப்பினால் இதுவரை 8 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். மேலும் 45 பேர் படுகாயமடைந்துள்ளனர். ஜலாலாபாத் நகரின் துணை மேயர் மற்றும் போட்டியின் அமைப்பாளர் ஆகிய இருவரும் காயமடைந்துள்ளனர்.

தகவல் அறிந்து சம்பவ இடதுக்கு வந்த பாதுகாப்பு படையினர் காயமடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

இது பற்றி ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரப் கனி, புனிதமான ரம்ழான் மாதத்தில் எம் மக்களைப் பயங்கரவாதிகள் கொல்வது தொடர்ந்துகொண்டே இருக்கிறது. விளையாட்டு மைதானம் எனவும் பார்க்காமல்குண்டுவெடிப்புநிகழ்த்தியுள்ளனர். இதிலிருந்து. பயங்கரவாதிகளுக்கு எந்தச் சமயமும் கிடையாது. அவர்கள் மனிதாபிமானத்துக்கு எதிரானவர்கள் மட்டுமே. என்பதுநிரூபணமாகியுள்ளது எனத் தெரிவித்துள்ளார். ஆனால் ஆப்கானிஸ் தான் தாக்குதலுக்கும் எங்களுக்கும்எந்தத்தொடர்பும்இல்லை எனத் தலிபான் தீவிரவாதிகள் தெரிவித்துள்ளனர். (க)

# டெஸ்ட் கிரிக்கெட்டை முன்னேற்ற பி.சி.சி.ஐ.கவனம் செலுத்தவில்லை




பி.சி.சி.ஐ.யினால் குறைந்த ஓவர் போட்டிகளுக்கு கொடுக்கப்படும் கவனம் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கு கொடுக்கப்படுவதில்லை என கவுதம் கம்பீர் தெரிவித்துள்ளார்.

ஒருநாள், இருபது-20 போட்டிகளை மார்க்கெட்டிங் செய்வது போன்று, டெஸ்ட் போட்டிகளை பி.சி.சி.ஐ மார்க்கெட்டிங் செய்வதில்லை. ஈடன் கார்டன் மைதானத்தில் மேற்கு இந்திய தீவுகளுக்கு எதிராக விளையாடிய டெஸ்ட் எனது ஞாபகத்தில் இருக்கிறது. முதல் நாளில் இந்தியா துடுப்பாட்டம் செய்தபோது மைதானத்தில் 1000 பார்வையாளர்களே இருந்தனர்.

அன்றைய போட்டியில் சேவாக், சச்சின், லஷ்மண் உள்ளிட்டோர் விளையாடிய போதும் பார்வையாளர்கள் மிகவும் குறைவாகவே இருந்தனர்.

எனவே, குறைந்த ஓவர் போட்டிகளில் செலுத்தப்படும் கவனத்தை குறைத்துகொண்டு டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மீது அதிக கவனம் செலுத்த வேண்டும். டெஸ்ட் கிரிக்கெட் வலுவிழந்து வருகிறது.

இங்கிலாந்தில் டெஸ்ட் போட்டிகள் நடை பெறுவது சிவப்பு பந்துகளில், அதற்கு முன்பாக மட்டை பிட்ச்களில் வெள்ளை பந்தில் அங்கு ஒருநாள், இருபது-20 போட்டிகளில் ஆடுவதில் பயனில்லை.

சிவப்பு பந்துகளில் விளையாடுவது வேறு. வெள்ளை பந்தில் குறைந்த ஓவர் போட்டிகளில் விளையாடுவது வேறு. அங்கு விளையாடும் 3 ஒருநாள், 3 இருபது - 20 போட்டிகள் டெஸ்ட் போட்டிக்கு தயாராக உதவாது என அவர் இந்திய கிரிக்கெட் சபையை கடுமையாகச் சாடியுள்ளார். (க)

## உலகில் மிகவும் ஆபத்தான...

9 ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ள நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அந்த பயங்கரவாத அமைப்புக்கு எதிராக உலகில் வேறு எந்தவொரு நாட்டுக்கும் இல்லாத தைரியத்துடன் போரிட்டோம். இந்தப் போராட்டத்தில் நாட்டு மக்கள் ஓர் அணியில் திரண்டு போருக்கு வலுச் சேர்த்தனர்.

இந்தப் போரில் முப்படையினர், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு பிரிவினர் என பல்லாயிரம் பேர் உயிர்த்தியாகம் செய்தனர். இன்னும் பலர் அங்கவீனமாக்கப்பட்டனர். நாட்டு மக்களின் சுதந்திரம், வாழும் உரிமையை பெற்றுக் கொடுப்பதற்காக உயிர்த்தியாகம் செய்த அனைவரும் உயர்ந்த மனிதர்களே.

இறுதிக் கட்ட யுத்தத்தில் நாட்டு மக்களின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட இராணுவத்தினரும் போர்க்குற்றச் செயல்களில் ஈடுபட்டனர் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர் என அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு)

## தென் பகுதியில் அடை மழை...

கள் நிகழும் பகுதிகளுக்குச் சென்று வேண்டிய உதவிகளை வழங்க எந்நேரமும் தயாராகவுள்ளோம் எனவும் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் சப்ரகமுவ மாகாணத்தில்150 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவானதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலும் மத்திய, ஊவா, மேல் ஆகிய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் 100 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியை எதிர்பார்ப்பதாகவும் அந்நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை வெலிகந்த பிரதேசத்தில் மின்னல் தாக்குதலுக்கு உள்ளாகி 17 மற்றும் 33 வயதுடையவர்கள் உட்பட மூவர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை அதிவேகப் பாதையில் பயணிக்கும் சாரதிகள் தமது வாகனங்களை மணித்தியாலத்திற்கு 60 கிலோ மீற்றர் வேகத்தில் செலுத்துமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

அத்துடன், ஒவ்வொரு வாகனங்களினதும் பிரதான மின் விளக்கை ஒளிரச்செய்தவாறு பயணிக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் அசாதாரண காலநிலை காரணமாக அதிவேகப் பாதையில் ஏற்படும் விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்காகவே இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது என்றும் நேற்று மட்டும் அதிவேக நெடுஞ்சாலையில் 6 விபத்துக்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (மு)

## கொடிகாமம்...

பொலிஸாரால் நேற்றுமுன்தினம் வீதித் தடை ஏற்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின் போது அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகத்துக்குரியவர்கள் பயணித்த இரண்டு உந்துருளிகளுடன், இரண்டு வாள்கள் உட்பட சில ஆயுதங்களும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் 18 முதல் 25 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். (மு)

## சவால்களுக்கு மத்தியிலும்...

கடன் பெறப்பட்டுள்ளது. பிக்குமாருக்கான சீருடை போன்ற பொருட்களை பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்காக இந்தப் பணம் செலவிடப்பட்டது என்றும் தற்போதைய அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்த பின்னர் கடந்த 3 வருட காலப்பகுதியில் 12 பில்லியன் ரூபா வெளிநாட்டுக் கடன் பெறப்பட்டது. இதில் 6 பில்லியன் ரூபா அபிவிருத்தித் திட்டங்களுக்காக சர்வதேச கடனாக பெறப்பட்டதாகும் என்று கூறினார். மகிந்த ராஜபக்ஷ இந்த விடயங்களை உரிய வகையில் தெரிவிக்காது, மக்களை தவறான திசைக்கு இட்டுச் செல்வதற்காக தற்போது கூற்றுக்களை தெரிவிக்கி

# மெரினாவில் நினைவேந்தலுக்காக குவிந்த மக்கள்; வைகோ உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் கைது





மெரினாவில் நினைவேந்தலுக்கு தடை விதிக்கப்பட்ட நிலையில், அதற்கு அருகே உள்ள பாரதி சாலையில் 2000க்கும் மேற்பட்ட இளைஞர்கள், பொதுமக்கள் கூடி நினைவேந்தல் நிகழ்ச்சியை நடத்தினர். இந்நிகழ்ச்சியில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர். இதனையடுத்து மெரினா கடற்கரையை நோக்கி பேரணியாகச் சென்ற ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

இலங்கை போரில் உயிரிழந்த தமிழர்களுக்காக நினைவேந்தல் நிகழ்ச்சி நேற்று மெரினாவில் நடத்துவதற்காக சில அமைப்புகள் அழைப்பு விடுத்துள்ளதாக உளவுப் பிரிவு பொலிஸார், காவல் ஆணையர் ஏ.கே. விஸ்வநாதனுக்கு தகவல் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து காவல் ஆணையர் ஏ.கே.விஸ்வநாதன் நேற்று இரவு அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார்.

அதில், நினைவேந்தல் நிகழ்வினை பெரும்பாலான அமைப்பினர் அனுமதிக்கப்பட்ட இடங்களிலும் உள்ளரங்குகளிலும் நடத்திய போதும் சில அமைப்புகள், பொதுமக்கள் கூடும் மெரினாவில் கூடுவதாக அறிவித்துள்ளன. எனவே, யாரும் போராட்டம் என்ற பெயரில் மெரினாவில் தடையை மீறி கூடி பொதுமக்களுக்கு இடையூறு செய்ய வேண்டாம். மீறி போராட்டம், ஆர்ப்பாட்டம், நினைவேந்தல் என்ற பெயரில் ஒன்று கூடும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்தார்.

இந்நிலையில் பாரதிசாலையில் 2000க்கும் மேற்பட்ட இளைஞர்கள், பொதுமக்கள் கூடி நினைவேந்தல் நிகழ்ச்சியை நடத்தினர். இந்நிகழ்ச்சியில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி, எஸ்டிபிஐ கட்சியின் தலைவர் தெகலான் பாகவி ஆகியோர் பங்கேற்றனர்.

அதைத் தொடர்ந்து பாரதிசாலையில் இருந்து கண்ணகி சிலையை நோக்கி பேரணியாகச் சென்றனர்.

**வைகோ ஆதங்கம்**

இது தொடர்பாக வைகோ செய்தியாளர்களிடம் பேசுகையில், மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதுதான் நினைவேந்தல் நிகழ்ச்சியின் நோக்கம் இலங்கை ராணுவத்தை குற்றவாளி கூண்டில் நிறுத்த வேண்டும். இலங்கை போரில் கொல்லப்பட்ட தமிழர்களுக்கு கடற்கரையில் கூடி கண்ணீர் சிந்தக்கூடாதா? இந்தியாவில் அரசுகள் மாறின, துரோகம் மாறவில்லை என்றார் ஆதங்கத்துடன்.

இதைத் தொடர்ந்து மெரினாவை நோக்கி பேரணியாகச் சென்றதால் பொலிஸார் அவர்களை தடுத்து நிறுத்தினர். இதனால் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. நினைவேந்தல் பேரணியில் கலந்துகொண்டு மெரினாவை நோக்கிச் சென்றவர்களை கைது செய்யுமாறு பொலிஸார் அறிவுறுத்தினர். இதனையடுத்து பேரணியில் பங்கேற்ற 1000க்கும் மேற்பட்டோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். (மு)

# கடந்தகால கசப்பான சம்பவங்களை மறந்து அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

## அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழில் கலாசார மத்திய நிலையம் அமைக்கப்படாத பிரதேச செயலக பிரிவுகளில் அடுத்தவருடம் கலாசார மத்திய நிலையம் அமைக்கப்படும் என தெரிவித்தார் உயர் கல்வி கலாசார அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ.

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் வரணி சிட்டிவேரம் அம்மன் ஆலயத்திற்கு அருகாமையில் அமைக்கப்பட்ட கலாசார மத்திய நிலையம் நேற்று பிற்பகல் திறந்து வைக்கப்பட்டது.

அங்கு கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

புத்தபகவான் இந்து பெற்றோருக்கு பிள்ளையாக பிறந்தார். இதன் காரணமாக தமிழ் கலாசாரத்திலும் சிங்கள கலாசாரத்திலும் ஒற்றுமை காணப்படுகிறது.

கடந்த காலங்களில் துரதிர்ஷ்டவசமாக எம்மால் கட்டுப்படுத்த முடியாத சில காரணிகளால் நீங்களும் நாங்களும் எங்களிற்குள்ளே சில இடையூறுகள் இருந்தன.

தெற்கில் இருந்து வடக்கிற்கு வந்தால் இங்கு வேறுபட்ட சமூகமாக எமக்கு தெரியவில்லை. எமது சமூகத்தில் உள்ள உறவினர்கள் போன்று தெரிகிறது.

எம் மக்களிடையே இருந்த வேறுபாட்டினை களைந்து கசப்புணர்வை மறந்து ஒரு இனம் என்ற ரீதியில் ஒரு நாடு என்ற ரீதியில் கட்டி எழுப்புவது கலாசாரத்தின் மூலமே. சிங்களத்தில் இருப்பது தமிழில் இருந்து வந்த சொற்களே. இதேபோன்று தமிழில் உள்ள சொற்களும் சிங்களத்தில் இருந்துவந்தவையே.

வடமாகாண மக்களின் கல்வி, பொருளாதாரம், கலாசார மரபுரிமைகளை மேம்படுத்துதலில் ஜனாதிபதி பிரதமர் மற்றும் இந்த அரசும்பொறுப்பு கூறுகிறது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட கசப்பான சம்பவங்களை மறந்து அனைவரும் சேர்ந்து சமூகத்தை ஒற்றுமைப்படுத்தி செயற்பட வேண்டும்.

உலகில் யுத்தம், கலவரங்கள் நடைபெறுகிறது.

இதற்கு வேறு அர்த்தம் கூறினாலும் இதற்கு ஒரேஒரு காரணமே.ஒரு இனம்தாமே உயர்வான இனம் மற்றையவர்கள் சிறுபான்மையினர் என நினைக்கும் போதே இந்நிலை ஏற்படுகிறது என்றார். (மு-60)

# யாழ்.இந்துவின் சேக்கிழார்விழா மீண்டும் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சிறப்பாக கொண்டாடப்பட்டு வந்த சேக்கிழார் விழா பல்வேறு காரணங்களால் நீண்டகாலமாக நடைபெறாது தடைப்பட்டிருந்தது. தற்போதைய அதிபர் சதா நிமலன் அவர்களின் தலைமையில் மீண்டும் சேக்கிழார் விழா, சேக்கிழார் குருபூசை தினத்தை முன்னிட்டு இன்று திங்கட்கிழமை வெகுவிமர்சையாக கொண்டாடப்படவுள்ளது.

சேக்கிழார் சுவாமிகள் திருவுருவப்படத்திற்கு யாழ்.வண்ணை சிவன் கோவிலில் காலை 8.30 மணிக்கு பூசைகள் நடைபெற்று திருவுருவப்படம் ஊர்வலமாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நோக்கி எடுத்துவரப்படவுள்ளது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சிவஞான வைரவர் ஆலயத்தில் சேக்கிழார் சுவாமிகள் தொடர்பான சிறப்புரை யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை பேராசிரியர் மா.வேதநாதன் அவர்களினால் நிகழ்த்தப்படவுள்ளது.

அதனைத்தொடர்ந்து பழைய மாணவர்களினால் பஜனைகளும் நடைபெறும். இந்நிகழ்வில் கல்லூரி பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர், நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கல்லூரி அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (மு)

## புலிகளின் சீருடைக்கு...

இது தொடர்பாக முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்று தெரியவருகின்றது. (மு)

## மண்டைதீவில் கடற்படை...

எனினும் இது பற்றி அரசியல்வாதிகள் எவரும் கவனம் கொள்ளாமல் இருப்பதாகவும் அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (மு)

## சதி செய்து கொன்றார்கள்...

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு அரசு அனுமதியளித்தமை என்ற விவகாரம் தென்னிலங்கை அரசியலில் கடந்த வாரம் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையில் அது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் கேள்வி பதில் அறிக்கையை வெளியிட்டுள்ளார். (மு)

(அவரது அறிக்கை 8ஆம் பக்கத்தில்...)

## கடுவல நகரில்...

ஸார் தெரிவித்தனர்.

கும்பல் ஒன்றால் தீ வைக்கப்பட்டுத்தான் கடைகள் இரண்டும் தீக்கிரையாகியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் கூறினர். (மு)

# பசுவதைக்கு எதிரான ஆர்ப்பாட்டம் இன்று

(சாவகச்சேரி)

பெருந்தொகையான பசுக்கள் கொல்லப்படுவதை எதிர்த்து இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக தென்மராட்சி இந்துசமய அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக தெரியவருவதாவது, இந்துக்கள் போற்றி வணங்கும் பசுவினை வதை செய்வதற்கு எதிராக தென்மராட்சி இந்து சமய அமைப்புக்களால் முன்னெடுக்கவுள்ள இவ் ஆர்ப்பாட்டம் இன்று காலை 9.45 மணிக்கு சாவகச்சேரி வைத்தியசாலைக்கு முன்பாக ஆரம்பமாகி சாவகச்சேரி பிரதேச செயலகம் மற்றும் சாவகச்சேரி நகர சபை போன்றவற்றிற்கு செல்லவுள்ளதோடு பிரதேச செயலர் மற்றும் தவிசாளர் போன்றோருக்கு மகஜரும் கையளிக்கப்படவுள்ளதாக இந்து சமய அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. (மு)

# விலை அதிகரித்தாலும் எவ்வித நன்மையுமில்லை

## ஊழியர் சங்கம் குற்றச்சாட்டு

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்ட போதிலும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அடைந்து வரும் 7300 மில்லியன் நஷ்டத்தில் எந்தவித குறைவும் ஏற்படவில்லையென பெற்றோலியத்துறை பொது ஊழியர் சங்கத்தின் செயலாளர் டீ.ஜே.ராஜகருணா தெரிவித்துள்ளார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நஷ்டத்தைக் காட்டி எரிபொருள் விலையைக் கூட்டியபோதிலும் கூட்டுத்தாபனத்துக்கு எந்தவித நன்மையும் கிடைக்கவில்லையெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நோயாளியின் நோயை சுகப்படுத்தவென பணம் சேகரித்து விட்டு, நோயாளியை சாக விட்டுவிட்டு, பணத்தை சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டது போன்ற ஒரு நடவடிக்கையையே அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார். (மு)

## ஓகஸ்ட் 6-ம் திகதி...

2018ம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான நேர அட்டவணை பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் www.doe.nev.s.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக இதனைப் பார்வையிட முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பி.சனத் பூஜித தெரிவித்துள்ளார். (மு)

## 20-வது திருத்த...

திபதிக்குப் பதிலாக, பாராளுமன்றமே ஜனாதிபதியை தெரிவு செய்ய வேண்டும் என்பது பிரேரணையில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கிய விடயமாகும்.

20 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டாலும், 2020 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதிக்கு பின்னரே அது நடைமுறைக்கு வரும் என்பதே மக்கள் விடுதலை முன்னணியின் நிலைப்பாடாகும்.

தற்போதைய பாராளுமன்றம் அதன்போது கலைக்கப்படுவதுடன், புதிய பாராளுமன்றத்தினால் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி அரச தலைவரே தவிர அவர் அரசாங்கத்தின் தலைவராக செயற்படமாட்டார் என திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறு நியமிக்கப்படும் ஜனாதிபதி அமைச்சுப் பொறுப்பை வகிக்க முடியாது என்பதுடன், அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கெடுக்கவோ அமைச்சரவைக்கு தலைமை தாங்கவோ மாட்டார் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், அமைச்சரவையின் தீர்மானங்களை அறிந்துகொள்வதற்கும் பிரேரணைகளை முன்வைப்பதற்கும் உரித்துடையவராவார் என்ற யோசனையும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

13 ஆவது திருத்தத்தின் படி, ஜனாதிபதிக்குரிய அதிகாரங்கள் எவையும் மாற்றமடையாது என்பதுடன், ஆளுநர்களை நியமித்தல், நீக்குதல், காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களும் அவ்வாறே நீடிக்கும்.

ஜனாதிபதியின் தீர்மானத்திற்கேற்ப பாராளுமன்ற அமர்வை ஒத்திவைக்கும் அதிகாரம் இரத்து செய்யப்பட வேண்டும் எனவும் உத்தேச திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (மு)


### B+ அல்லது B- அல்லது O+ அல்லது O- குருதி வகை சிறுநீரகம் உடனடியாகத் தேவை

55 வயதுடைய ஆண் ஒருவருக்கு B+ அல்லது B- அல்லது O+ அல்லது O- குருதிவகை சிறுநீரகம் உடனடியாகத் தேவை. வழங்கு பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். (25-35) வயதிற்கு உட்பட்ட ஆண்/ பெண் ஆகியோரின் சிறுநீரகம் தேவைப்படுகின்றது.

**தொடர்புகளுக்கு: 0771080875, 0770811624, 0754949839**


## சவால்களுக்கு மத்...

ஏற்றுமதி வருமானம் 2014ம் ஆண்டளவில் 12 வீத குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் சமகால நல்லாட்சி அரசாங்கம் நாட்டின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்று, பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டதாகவும்,

சுமார் 10 வருட காலமாக உறவினர்கள், நண்பர்கள் போன்றோரின் பொருளாதார முறையை நடைமுறைப்படுத்திய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும், நாட்டை படுகுழியில் தள்ளுவதற்கு முயற்சித்து வந்தனர். தற்போதும் இவ்வாறான முயற்சியில் ஈடுபட்டிருப்பதை காணக்கூடியதாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளதுடன்,

2009-ம் ஆண்டளவில் நாட்டின் வரலாற்றிலேயே ஆகக்கூடுதான கடன்தொகை பெறப்பட்டிருந்தது. இது 4.2 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இதனை திருப்பிச் செலுத்த வேண்டிய பொறுப்பு தற்போதைய அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் இது பெரும் நெருக்கடி நிலையை நாட்டிற்கு ஏற்படுத்தியதாகவும் குறிப்பிட்ட அமைச்சர், தற்போது நாடு கடன் சுமையை எதிர்நோக்கியிருப்பதாக மகிந்த ராஜபக்ஷ குற்றஞ்சாட்டுகிறார் என்றும்,

1948ம் ஆண்டு சுதந்திரத்தின் பின்னர், வெளிநாட்டு கடனுக்காக செலுத்தப்பட்டுள்ள பெருந்தொகையை 2018ம் ஆண்டில் செலுத்த வேண்டியுள்ளது.

இத்தொகை 2,845 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இதில் 1,789 மில்லியன் அமெரிக்க டொலர்கள் 2015ம் ஆண்டுக்கு முன்னர் பெற்றுக் கொண்ட கடனின் திருப்பிச் செலுத்த வேண்டிய தவணைப் பணமாகும். 2015ம் ஆண்டின் பின்னர் பெற்றுக் கொண்ட கடனுக்காக செலுத்த வேண்டிய தொகை 1,056 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மாத்திரமே ஆகும். இதற்கமைவாக, இந்த வருடத்தில் செலுத்த வேண்டிய கடன் தவணைப் பணத்தில் 63 சதவீதமானவை மகிந்த ராஜபக்ஷ நிதியமைச்சர் என்ற ரீதியில் செயற்பட்ட காலத்தில் பெற்றுக் கொண்ட கடனாகும். கடந்த வருடத்தில் இந்த நிலை படுமோசமாக காணப்பட்டது.

அடுத்த வருடத்தில் 4,285 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலுத்தப்பட வேண்டியுள்ளது. இதில் 3,315 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் பெற்ற கடனுக்காக செலுத்த வேண்டியதாகவும் என்றும் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர கூறியுள்ளதுடன்,

கடந்த மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் 2014ம் ஆண்டில் நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக அன்றி, தேர்தல் நடவடிக்கைகளுக்காகவே கடன் பெறப்பட்டுள்ளது. 23


### கடை வாடகைக்கு உண்டு

554B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். யாழ். இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகில் கடை வாடகைக்கு உண்டு. மேற்குறித்த விலாசத்திற்கு நேரில் வரவும்.

### விற்பனைக்கு

* மீன்பிடி றோலருக்கான 30 அடி புதிய வள்ளம், யன்மார் 2 சிலிண்டர் (Full Recondition) எஞ்சினுடன் விற்பனைக்குண்டு.

வேம்படி வல்வெட்டித்துறை — தொடர்புகளுக்கு 077 357 3055

### பசு விற்பனைக்கு

20 நாள் நிரம்பிய நாம்பன் கன்றுடன் கலப்பின கறவைப்பசு ஒன்றும் 5 மாத கலப்பின சினைப்பசு ஒன்றும் வளர்ப்புக்கு விற்பனைக்கு உள்ளது.

077 756 0734

### விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240 — V2 TRAVELS

மானிப்பாய் • யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

### உடனடி வேலை வாய்ப்பு

முகாமையாளர்/நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

வயது 35 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்) அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - முகாமையாளர் 25000/-, நிர்வாக உத்தியோகத்தர் 15000/-

49A சப்பல்லேன் யாழ்ப்பாணம் (யாழ் பொது நூலகம் முன்னால்) 0768226241


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 30.07.1951

மறைவு 23.04.2018

கடந்த 23.04.2018 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப பெருவிளக்கு

### திருமதி சிவஞானம் சறோஜினிதேவி

அவர்கள் சிவபதமடைந்த செய்தி அறிந்து நேரடியாகவும் தொலைபேசி மூலமாகவும் ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் அனுதாபம் தெரிவித்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் மலர்மாலை, மலர்வளையம், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம், பதாகைகள் மூலம் அனுதாபங்களைப் பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் மற்றும் சரீர உதவிகளை அளித்த நல்லுள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 21.05.2018 திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் இடம்பெறும். வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் 23.05.2018 புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்று காலை 11 மணியளவில் நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

• **இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

904/5, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
சீ.வீ.கே.சிவஞானம்
மற்றும் குடும்பத்தினர்.

(4130)


### வீடு/காணி விற்பனைக்கு

HARI REAL ESTATE

- இராஜ வீதி கோண்டாவில் (பிரதான வீதிக்கு மிக அருகில்) 02 பரப்பு சதுர காணி 03 பக்க சுற்று மதிலுடன் விற்பனைக்கு - நன்னீர் வளத்துடன் அமைதிநிறைந்த பசுமைச் சுற்றயல்
- இராஜ வீதி கல்வியங்காடு (பிரதான வீதியிலிருந்து 150 Mtr உட்புறமாக) 2 பரப்பு வெற்றுக் காணி நன்னீர் வளத்துடன் கூடிய கிணறு மற்றும் அமைதியான சூழலில் விற்பனைக்கு
- நுணாவில் மேற்கு எல்லை ஒழுங்கையில் 06 பரப்பு வீட்டுடன் கூடிய காணி அமைதியான சுற்றயலுடன் விற்பனைக்கு
- அம்மன் கோவிலடி கச்சாய் தெற்கு 120க்கும் மேற்பட்ட பயன்தரு தென்னைமரங்கள் மற்றும் இதர வளங்களுடன் 13 1/2 பரப்பு மற்றும் 5 1/2 பரப்பு நன்னீர் வளத்துடன் காணிகள் விற்பனைக்கு
- வங்களாவடி சந்திக்கு மிக அருகில் - பிரதான வீதியில் (வேலணை மேற்கு) குடியிருப்பு மற்றும் வணிகத் தேவைக்கேற்ற 04 பரப்பு காணி (பழைய வீட்டுடன்) விற்பனைக்கு
- தெல்லிப்பளை கட்டுவன் பிரதான வீதியில் தோட்டப்பயிர்ச்செய்கைக்கேற்ற 02 ஏக்கர் வெற்றுக்காணி மிகச்சிறந்த விலைப்பெறுமதியில் விற்பனைக்குண்டு

(C-2608)

தரகர்கள் தேவையில்லை

'ஹரி றியல் எஸ்டேட்'

இல. 10A, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி +94 021 221 4422
மொபைல் + 94 70 300 4000
முகநூல் harirealestate.lk

POWERED BY HARI

### வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**

10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576 | சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576 | கிளிநொச்சியில் - இல.10, கண்டி வீதி, கரடிப்போக்கு கிளிநொச்சி (தம்ரோ காட்சி அருகில்) 076 443 1576 | 021 222 3536


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.05.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.